

கல்கி
KALKI 8.5.2005 ரூ.6.00
மாநாடுகள் எதற்கு?
'புதிய' கேஸ்
காதலனுக்குத் திருமணம்?
ரேஸ் ரோஸ்!
அனல் அதிரடி!
சூப்பர் ஸ்டாரா?
சுப்ரீம் ஸ்டாரா?
-மார்க் போடுகிறார் நயன்தாரா!



கல்யாணப் பந்தல்
தன்னம்பிக்கையும்,
துணிவும் நிறைந்த,
அழகான, படித்த,
நட்பான,
உற்சாகமான, பரந்த
மனப்பான்மையும்
பாரம்பரிய
பார்வையும் அமைந்த
மணப்பெண்ணுக்கு
மணமகன் தேவை.
29 வயதும், MNCயில்
வேலையும்,
சாஃப்ட்வேர்
என்ஜினியரும்,
அடிக்கடி வெளிநாடுகள்
போய்வரும்
வாய்ப்புள்ளவராகவும்
இருக்க வேண்டும்.
RmKV
முகூர்த்தப் பட்டுகள்
இன்றைய மணமகளுக்கு
பனகல் பார்க், சென்னை.
Ph 044-281 44445
வடக்கு ரத வீதி, திருநெல்வேலி
Ph 0462-2333105
www.rmkv.com
• பிரத்தியேக டிசைன் ஸ்டுடியோவில் உருவாக்கப்பட்ட விசேஷ தீம் பட்டுப்புடவைகள்
• நீங்கள் விரும்பும் டிசைன், நீங்கள் விரும்பும் கலரில்
• தேர்வு செய்ய 30,000க்கும் அதிகமான பட்டுப் புடவைகள்.
Mudra South: RmKV: 7293: 05















# ரெடி… டேக்… சர்ப்ரைஸ்!

# – இல.கணேசன் அனல் அதிரடி!

''ஜெயேந்திரர் மீது போடப்பட்டுள்ள வழக்கு, சங்கரராமனின் பிணத்தைச் சுற்றிப் போடப்பட்டுள்ள வழக்கு அல்ல; பணத்தைச் சுற்றிப் போடப்பட்டுள்ள வழக்கு''- இப்படியொரு அதிரடி குண்டை சமீபத்தில் வீசியிருக்கிறார் பா.ஜ.கவின் தேசியச் செயலாளர் இல.கணேசன். இது குறித்து எழுந்துள்ள சந்தேகங்களை அவரிடம் கேட்ட போது, வழக்கு நடந்து கொண்டிருப்பதால் இலேசான தயக்கத்துடனேயே பேசினார்:

**எந்த அடிப்படையில் பணத்தைச் சுற்றிப் போடப்பட்ட வழக்கு என்று கூறினீர்கள்?**

''ஜெயேந்திரர் மீது குற்றம் சுமத்தப்பட்ட நிமிடம் துவங்கி, வெளிவந்துள்ள நம்பத்தகுந்த பத்திரிகைச் செய்திகள், நீதிமன்ற விவாதங்கள், எல்லாவற்றையும் தீவிரமாக ஆராய்ந்த பிறகுதான் அப்படிக் கூறினேன். ஜெயேந்திரர் சார்பாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவொன்றில் பண விவகாரம், மருத்துவமனை விவகாரம் உள்ளிட்டவை பற்றி பகிரங்கமாகவே கூறப்பட்டிருக்கிறது. இதுதான் எனது கருத்துகளுக்கான ஆதாரம்.



**வழக்கு நடந்து கொண்டிருக்கையில் இந்தக் கருத்து ஜெயேந்திரருக்குப் பெருமை தரக்கூடிய விஷயமா... வழக்கை பாதித்து விடாதா...?**

''சங்கர மடத்தின் புகழைச் சீரழிக்கும் நோக்கத்துடன் தமிழக அரசு எப்படி அத்துமீறி நடந்து கொள்கிறது... அதற்குப் பின்னணி என்ன... என்பதை விளக்க, ஆராய்ந்து கூறப்பட்டதுதான் அந்தக் கருத்து... மேலும் நான் வழக்கின் உள் சென்றோ... வழக்கின் தன்மை பற்றியோ பேசவில்லை. இத்தகைய அத்துமீறல்கள் இங்கு நடப்பதால் தமிழகத்தில் நியாயம் கிடைக்காது. வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தவே அவ்வாறு கூறினேன். இது எந்த வகையிலும் வழக்கை பாதிக்காது.''

**எப்படி இருப்பினும் சங்கரமடம் மீது ஒரு களங்கம் ஏற்பட்டுள்ளது. காஞ்சி மடம் போன்ற ஒரு நிறுவனத்தைச் சீர் செய்ய, ஆத்திகத்தை ஆதரிப்பதாகக் கூறும் பா.ஜ.க. போன்ற அமைப்புகள் ஏன் அரசியல் கலப்பின்றி முயற்சி செய்யக்கூடாது?**

"ஓரிரு விஷமப் பத்திரிகைகள் மற்றும் அரசின் தவறான நடவடிக்கைகளால் ஏற்பட்ட ஒரு தோற்றம் மட்டுமே தவிர, அது களங்கமல்ல. இல்லாத ஒரு களங்கத்தைத் துடைக்க ஏன் பா.ஜ.க முயல வேண்டும்? அதுமட்டுமின்றி இப்பொழுது இரு மடாதிபதிகளும் ஜாமீனில் வெளி வந்துவிட்டதால் மக்கள் மனம் ஜெயேந்திரருக்கு ஆதரவாகத் திரும்பி உள்ளது."

**காஞ்சி இடைத் தேர்தலில் போட்டியிடாத தன் மூலம், பா.ஜ.க. எதை உணர்த்த முயற்சி செய்கிறது? ஜெயேந்திரர் இந்த இடைத் தேர்தலில் வகுப்பதாகச் சொல்லப்படும் வியூகத்தை, உங்கள் கட்சி பலப்படுத்த இப்படிச் செய்கிறதா?**

"இந்த ஆட்சி இன்னும் ஒரு வருடம் நீடிக்குமா என்பதே கேள்விக்குறியான விஷயம்... தற்போது பா.ஜ.க. பொதுத் தேர்தலுக்கு ஆயத்தமாகி வருவதால் எங்களுடைய சக்தியை இடைத் தேர்தலில் போட்டியிட்டு வீணடிக்க விரும்பவில்லை."

**ஜெயேந்திரர் வழக்கை விசாரித்து வந்த எஸ்.பி. பிரேம்குமார் சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றப்பட்டுள்ளாரே?**

# "பணத்துக்காக போடப்பட்ட வழக்கு!"

"ஏற்கெனவே அவர்மீது சி.பி.சி.ஐ.டி வழக்கு உள்ளது. இது குறித்து தேர்தல் கமிஷன் தெரிவித்த கண்டனங்கள் பற்றி பா.ஜ.க. எடுத்துக் கூறியபோது தமிழக அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியது. ஆனால் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் அவரை சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றியுள்ளனர். இந்த நடவடிக்கை நாங்கள் பிரேம்குமார் மீது கூறிய குற்றச்சாட்டுகள் உண்மை என்பதை நிருபிப்பதாக உள்ளது. அதே சமயம் வழக்கு இருப்பதால் அவரை சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றியது பாலுக்கும் பூனையையே காவல் போட்டது போன்று உள்ளது."

**சுந்தரேச ஐயர் மீது புதிதாக கஞ்சா வழக்கு போடப்பட்டுள்ளது எதைக் காட்டுகிறது...?**

"தமிழக அரசு தொடர்ந்து தவறான செயல்களில் ஈடுபட்டு, ஒரு தொடர் குற்றவாளியாக (ஹாபிச்சுவல் அஃபென்டராக) மாறி வருவதையே காட்டுகிறது."

- இரா.முத்துக்குமார்

படம்: ஸ்ரீஹரி


**கல்கி**

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

நயன்தாராவைத் தேடி ஒரு மாலைப் பொழுதில் ஆதித்யா ஹோட்டலுக்குள் நுழைந்தோம். "சார், அப்பாயின்மெண்ட் இருக்கா?" என்று கேட்டு அறைவாசலிலேயே தடுத்தார் அவரது மேனேஜர் அஜித். (கவனிக்க. இவர் நடிகர் அஜித் அல்ல!)

கொஞ்சம்கூட கோபப்படாமல் நமது டெக்னிக்கை தைரியமாகப் பயன்படுத்தினோம். 'சந்திரமுகி' படத்தில் மதுரக் குரலில் ரஜினிக்காக, மதுபாலகிருஷ்ணன் குழைவாகப் பாடியிருக்கும் டூயட்டை மென்மையாகப் பாட ஆரம்பித்தோம்.

"கொஞ்சநேரம்.. கொஞ்ச நேரம்.. கொஞ்சிப் பேசக் கூடாதா? இந்த நேரம்.. இந்த நேரம்... இன்னும் கொஞ்சம் நீளாதா?"

பாடி முடிப்பதற்குள் அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார் நயன்தாரா!

"ஆராணு இப்போள் பாடியது?" என்று கொஞ்சும் மலையாளத்தில் விளிக்க அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டிருந்த நாம் "ஞானா!" என்று குரல் கொடுத்தோம். "நன்னாய்ட்டு பாட்டு பாடியல்லவோ? எந்தா சான்ஸ் வேண்டி வந்தோ?" என்றார்.

# சூப்பர் ஸ்டாரா? சுப்ரீம் ஸ்டாரா?



எஸ்பிஆர் ஹோம்ஸ் வழங்கும்

கோவையில் பல நவீன வசதிகளுடன்

தனி வீடுகள்



★ 2 மற்றும் 3 படுக்கையறைகள் கொண்ட தனி வீடுகள்

★ ரயில் நிலையத்திலிருந்து 6 கி.மீ.

★ பள்ளி, கல்லூரி, பல் பொருள் அங்காடிகள், பஸ் நிலையம் அருகில்

★ முன்னணி வங்கிகள் மூலம் கடன் வசதி

★ 24 மணிநேரம் பாதுகாவலர் வசதி

தயார் நிலையில் வீடுகள்

Espeeyare Homes

Site Address:
Behind Cheran Nagar,
Kavundampalayam, Coimbatore.
Phone : 2232818, 2233846, 5589177

Office Address:
Promoted by: Espeeyare Enterprises (I) Pvt. Ltd.
15, Malavia Street, Ramnagar, Coimbatore - 641 009.
Cell : 98422 32818, 92444 07388

"அல்லா! உங்க பேட்டி வேணும். இயான் புறத்தே தடுத்து" என்று மேனேஜர் பற்றி நமக்குத் தெரிந்த மலையாளத்தில் வத்தி வைத்தோம்.

"கள்ளம் பறையண்டா! பட்பட்டுன்னு கேள்வி கேட்டுக்கோ!" என்று மேனேஜரை விட்டுக் கொடுக்காமல் பேசினார்.

**"நீங்கள் தமிழ் அறியுமோ?"**

"ஓ..."

**"பின்னே எந்தா மலையாளத்தில் சம்சாரிக்கின்னது?"**

"சாரி. தமிழ்லேயே கேளுங்க!" என திடீரென்று தமிழில் பேசியது, சந்திரமுகி ஆவி தெலுங்கில் பேசியது போல் இருந்தது. அதன்பிறகு ஒவ்வொரு கேள்விக்கும் பட்பட் டென்று பதில் வந்து விழுந்தது.

**"என்ன படிச்சிருக்கீங்க?"**

"சார்ட்டெட் அக்கவுண்ட் படிப்பை பாதியிலே விட்டுட்டு நடிக்க வந்திருக்கேன்."

**"எந்த ஊர்?"**

"கேரளத்தில் திருவள்ளா"

**"சினிமா சான்ஸ் எப்படிக் கிடைச்சது?"**

"மலையாள டைரக்டர் சத்தியன் அந்திக்காடு திருச்சூர்

– மார்க் போடுகிறார் நயன்தாரா!



ஓணம் திருவிழாவுக்கு வேடிக்கை பார்க்க வந்திருந்த என்னை, வேடிக்கை பார்த்துட்டு வீடு வரைக்கும் வந்துட்டார். அவர் இயக்கின 'மனசின் அக்கரே' படத்தில் அறிமுகமானேன்"

**"யார் ஹீரோ?"**

"ஜெயராம். அப்புறம் மம்முட்டி மோகன்லால் கூடவெல்லாம் நடிச்சு முடிச்சுட்டேன்"

**"அதென்ன வயசான ஹீரோக்களோடவே நடிக்கிறீங்க?"**

"எனக்கு அப்படித்தான் அமையுது. என் விஷயத்துலே எல்லாமே ரிவர்ஸ் கியர்ன்னு சொல்லலாம். காலேஜ்லே படிக்கும்போது சினிமா ஹீரோயின்களை இப்படி கிளாமர் காட்டி நடிக்கணுமானு திட்டியிருக்கேன். இப்போ என்னை எந்தப் பொண்ணு திட்டிக்கிட்டு இருக்காளோ?"

**"வயசான ஹீரோக்களோட நடிக்கிறதுலே என்ன சவாலான விஷயம்?"**

"திரும்பத் திரும்ப அதையே கேட்காதிங்க! இப்போதான் சிம்பு, சூர்யா கூடவெல்லாம் நடிக்கிறேனே!"

**"சொல்லவே இல்லையே?"**

"நீங்க கேட்கவே இல்லையே! சிம்பு கூட 'வல்லவன்' படத்தில் நடிக்கிறேன். கஜினியில் சூர்யாகூட, 'கள்வனின் காதலி'யில் எஸ்.ஜே.சூர்யாகூட"

**"கள்வனின் காதலியில் உங்களுக்கு என்ன கேரக்டர்?"**

"ஒரு திருடன்கிட்டேயே போய்... நீயெல்லாம் திருடியிருக்கமாட்டே. நீ நல்லவன்னு சொல்லி சொல்லியே அவனை இதயத்திருடனா மாத்துற கேரக்டர்!"

**"இதென்ன மூக்கில் வளையம்?"**

"நான் சானியா மிர்ஸாவோட விசிறி! அவங்க ஃபேஷனை அப்படியே ஃபாலோ பண்றேன்."

**"ஒரு பேட்டியிலே நான் ரஜினி ஃபேன்னு சொல்லியிருக்கீங்களே, நீங்க முதல்லே ஜோடி சேர்ந்த சரத் கோவிச்சுக்கமாட்டாரா?"**

"நீங்களே தூண்டிவிடுவீங்க போல இருக்கே?"

**"சரி போகட்டும்! சூப்பர் ஸ்டார், சுப்ரீம் ஸ்டார்! மார்க் போடுங்க பார்ப்போம்"**

"இந்த கேள்விக்கு நோ கமெண்ட்ஸ்ன்னு சொல்லி பின்வாங்கிடுவேன்னு நினைச்சீங்களா? அதான் இல்லை. ரஜினி - சரத் இரண்டு பேருமே பழக இனிமை! பார்க்க இனிமை! ரஜினி மலைன்னா! சரத் புயல்!"

**"மார்க் போடச் சொன்னா மறுபடி சான்ஸ் கேக்குறீங்களே?"**

"அப்போ இந்த மாதிரி கேட்காமல் உருப்படியா கேளுங்க!"

**"சந்திரமுகியிலே உங்களுக்கும் ஜோதிகாவுக்கும் சமமான கேரக்டர்ஸ்ன்னு சொல்லியிருந்தீங்க. ஆனால் ஜோதிகா கேரக்டர்தானே படத்தில் பேசப்படுது?"**

"என்னை வைச்சு நிறைய காட்சிகள் எடுத்தாங்க. ஆனால் எடுத்ததில் பாதியைக் காணோம்."


**"இதை வருத்தமா சொல்றீங்களா?"**

"இல்லை! அந்தக் காட்சிகள் இல்லாமலேயே என்னோட கேரக்டர் நல்லா வந்திருக்கு. வம்பு மூட்டி விட்டுடாதீங்க.. பேட்டி போதும்.."

ச்சே! பார்ட்டி ஜஸ்ட் மிஸ்ட்!

**- ஸ்ரீசக்கரம்**


படம் எடுக்க முடியாமல் வெறுத்துப்போய் திரும்பியவர் **ஸ்ரீஹரி**



"வேலை இருக்கோ இல்லையோ தலைவர் வச்சுருக்கற கூலிப்படைக்கு மாசாமாசம் பணம் குடுத்துடணும்!"

"ப்ரீ பெய்டு கூலிப்படை போல!"

- அம்பை தேவா



காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஏ.கோபண்ணா எழுதிய இரு நூல்களை ஜி.கே. வாசன் வெளியிட, மு.க. ஸ்டாலின் பெற்றுக் கொண்ட இந்த விழா சென்னை காமராஜர் அரங்கில் நடந்தது. நூல்கள் தலைப்பு: 'கோத்ரா - புதைக் கப்பட்ட உண்மைகள்', 'மதச்சார்பின்மை - ஏன்? எதற்காக?'

நூல் வெளியீட்டு விழாவாக இருந்தாலும் அதற்கு பார்வையாளர்களாக வந்தவர்கள் பெரும்பாலும் விசிலடிச்சான் குஞ்சுகள்தாம். உபயம்: ராயபுரம் மனோ. 'பச்சைத் தமிழர் காமராஜர்' என்றபோது வராத கை தட்டல் மனோ பெயரை உச்சரித்தபோது வந்தது.

# "வாசனுக்கு காவடி தூக்க மாட்டேன்!"

மு.க. ஸ்டாலின் பேசியபோது ஜி.கே. வாசன் என்று உச்சரித்துவிட்டு, ஜி.கே.மணி பெயரை கோ.க.மணி என்று இலேசாகத் தடுமாறியபடி தமிழில் கூற, "அப்போ எங்க தலைவர் வாசன் தமிழரில்லையா?" என்ற குரல் பார்வையாளர் பகுதியிலிருந்து கேட்டது!

ஏற்புரையாற்றிய கோபண்ணா, "தேசிய இயக்கத் தளபதியும், திராவிட இயக்கத் தளபதியும் இங்கு ஒன்றாக அமர்ந்திருக் கிறார்கள்" என்று பேச, அதற்கு ஸ்டாலின் கோபண்ணாவைப் பார்த்து ஏனோ சிரித்தபடி பெரிதாகத் தலையாட்டினார்.

த.மு.மு.கவின் ஜவாஹிருல்லாஹ் பேசும்போது, "இத்தாலிய பாசிசம் தேவை யில்லை என மக்கள் முடிவெடுத்து விட்டார்கள்" என்று கூற, 'சோனியாவைப் பற்றி ஏதோ தவறாகப் பேசுகிறாரோ' என்ற குழப்பம் காங்கிரஸ் தொண்டர்களிடம் ஏற்பட்டு, இலேசான சலசலப்பு ஏற்பட, இத்தாலியின் முசோலியின் பாசிச ஆட்சியை ஜெயலலிதாவின் ஆட்சியுடன் ஒப்பிட்டு ஜவாஹிருல்லாஹ் பேசி முடித்த போதுதான் காங்கிரஸ் தொண்டர்களுக்கு மூச்சே வந்தது.

"வாசன் என்கிற தனிமனிதனுக்கு என்னால் காவடி தூக்க முடியாது. ஆனால் வாசன் என்கிற செயல்திறன் மிக்க இளைஞனுக்கு, இயக்கத்தைத் திறம்பட வழிநடத்திச் செல்பவனுக்கு நான் உறு துணையாக இருப்பேன்" என்று தமிழருவி மணியன் பேசியபோது அரங்கில் நிசப்தம்!

விழாவில் உரையாற்றியவர்களில் உருப்படியாகவும், சிந்தனையைத் தூண்டும் வகையிலும் பேசியவர்கள் மூவர். அவர்கள், தமிழருவி மணியன், இரு கம்யூனிஸ்ட் கட்சிகளையும் சார்ந்த சௌந்தர்ராஜன் மற்றும் மகேந்திரன் ஆகியோர்தான்.

- கலை


# வைரம் (DIAMOND)

**ஹா**ய் நண்பர்களே! ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு ராசிக்கல் உள்ளது எனத் தெரிந்ததே. அதன்படி ஏப்ரல் மாதத்திற்கு வைரக்கல் ஆகும். எனது மனைவியின் பிறந்த மாதம் ஏப்ரல் ஆனதால் வைரம் வாங்க முடிவு செய்தேன். நாங்கள் எங்கு சென்று உத்திரவாதமான வைரக் கற்கள் பதித்த நகை வாங்குவது என யோசித்துக் கொண்டிருக்கும்போது எனது நண்பர்கள் 'பாப்பாலால்' நகைக் கடைக்கு செல்லும் படி கூறினார்கள். நான் உடனடியாக நுங்கம்பாக்கம் **காக்கானி டவர்ஸ் பாப்பாலால் டயமண்ட்ஸ் கடைக்கு** செல்ல முடிவெடுத்தோம். கடைக்குள் நுழையும்போது அதன் ரம்மியமான சூழ்நிலையும் பளிங்கு போல் உள்ள வைரக் கற்களின் ஜொலிப்பும் எங்களைப் போன்ற வாடிக்கையாளர் அனைவரையும் கவர்ந்தது. அங்கு விற்பனையாளரின் வரவேற்பும், மற்றும் வைரங்கள் எப்படி சுரங்கத்திலிருந்து எடுத்து 'கட்' செய்து உருவாக்கப்பட்டு, பாலிஷ் செய்யப் படுகிறது என்ற விபரங்களை அவர் அளித்த விதமும் எங்களை மிகவும் கவர்ந்தது. மேலும் வைரங்கள் எப்படி பலவிதமான வடிவங்களாக 'கட்' செய்து பாலிஷ் செய்யப்படுகிறது என்பதனையும் துல்லியமாக விளக்கியது மிகவும் அற்புதமாக இருந்தது. அவைகளில் புகழ் வாய்ந்தவை பிரில்லியண்ட் (Rounds), மார்க்கிஷேப் (Marquis), பேர் ஷேப் (Pear shape), எமரால்ட் கட் (Emerald cut), பிரின்சஸ்கட் (Princesscut) ஹார்ட் ஷேப் (Heart shape) ஆகியன, விற்பனையாளர், ஷோகேஸிலிருந்து பிரகாசிக்கும், பிரின்ஸ்கட், மார்க்கி ஷேப், வைரங்கள் கொண்டு தயார் செய்துள்ள வைர நெக்லஸ்களை எடுத்துக் காண்பித்தார். அதன் ஜொலிப்பும் அழகும் எங்களை மிகவும் கவர்ந்தது. மேலும் அவர் Solitaire 1 காரட், ½ காரட் எடையுள்ள ஒற்றை வைரம் கொண்டு, அழகிய வேலைப்பாடுடன் வடிவமைக்கப்பட்ட டாலர்கள், கம்மல்கள் மற்றும் மோதிரங்களைக் காண்பித்தார். அவைகளுக்கு சோதனைக் கூடத்திலிருந்து சான்றிதழ் அளிப்பதாகவும் கூறினார். அவர்களிடம் மிக அழகிய வைரங்கள் பதிக்கப்பட்ட Personalised wrist watches' கைக் கடிகாரங்களைக் காட்டினார். அதன் டயலில் நம் பெயர் பொறித்துக் கொடுப்பதாகவும் கூறினார். இம் மாதிரியான ஒரு வகையினை மற்ற நகைக்கடையில் பார்த்ததில்லை. அதன் கவர்ச்சியும், அழகும் எங்களுக்கு மிகவும் பிடித்திருந்தது.

தற்போது இன்றைய இளைய தலைமுறையினருக்காகவே மிகவும் புதிய டிசைன்களில் வைரத்துடன் **ரூபி, எமரால்ட்** மற்றும் **சபையர்** முதலிய **ரத்தினம்** பதித்த டாலர்கள், கம்மல்கள் முதலியவற்றைக் காண்பித்தார். அவைகள் தற்போது மிகவும் பிரபலமானதாகும் எனத் தெரிவித்தார். அவர் எங்களுக்கு மிகத் தெளிவாகவும், அன்பாகவும் அளித்த விளக்கம் எங்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி வைரம் வாங்கத் தூண்டியது.அதன்படி நம்பிக்கையுடன் என் மனைவிக்கு வைரம் பதித்த டாலர் மற்றும் கம்மல் இரண்டையும் முழு திருப்தியுடன் வாங்கினேன். ஆகவே நீங்களும் ஒரு முறை நுங்கம்பாக்கம் கக்கானி டவர்ஸ்ஸில் உள்ள திரு. பிரணாவ் மேத்தா அவர்களின் **பாப்பாலால் டயமண்ட் ஷோரூமிற்கு** சென்று பாருங்களேன்.

அன்புடன்
**ரஜினி**

(வி-ம்)


நுங்கம்பாக்கம், காகானி டவர்ஸில்
இப்பொழுது பாபாலால் வைரங்கள்
மின்னுகின்றன
Bapalal
DIAMONDS
இப்பொழுது
காகானி டவர்ஸ்
நுங்கம்பாக்கம்
எண்.34, காதர் நவாஸ் கான் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.
போன் : 2833 1664 / 2833 1665 இ-மெயில் : pranav@bapalal.com




# மாநாடுகள் எதற்காக?


தமிழ்நாட்டில் இருக்கும் தி.மு.க. உடன்பிறப்புகளுக்கு மாதம் பிறந்தால் மாநாடு காய்ச்சல் பிடித்துக் கொள்கிறது.

ஒரு மாநாட்டுக்குப் போய் வந்த அலுப்பு தீர்வதற்கு முன், அடுத்த மாநாட்டுக்கு கலைஞர் அழைப்பு முரசொலிக்கிறது. தேர்தல் வரையில் இந்த ஓட்டம் நிற்காது போலிருக்கிறது.

சென்ற வருடம் விழுப்புரத்தில் துவங்கி, பின்னர் விருதுநகர், சேலம் என்று தொடர்ந்து, சிறிய இடைவெளிக்குப் பிறகு திண்டுக்கல், தஞ்சை என்று பரபரப்பை உண்டாக்கி, இப்போது கோவையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது மாநாடு எக்ஸ்பிரஸ். அடுத்து வேலூர், புதுக்கோட்டை என்று தேர்தல் அறிவிப்பு வரை தொடரும் இந்த மாதாந்திர மாநாடுகள். ஒவ்வொரு மாநாடு துவங்குவதற்கு இரண்டு வாரங்கள் முன்னரே கழகக் கண்மணிகளுக்கு முரசொலியில் கடிதம் எழுதித் தயார்ப்படுத்துகிறார் கலைஞர். திண்டுக்கல் மாநாடு குறித்த முதல் கடிதத்தில் "நெப்போலியன், தியாகு, தம்பி குமரிமுத்து ஆகியோர் வழங்கும் இலட்சிய உரைகளை உடன்பிறப்பே, நீ கேட்க இருக்கிறாய்" என்று எழுதி இருந்தார். மாநாடு மற்றும் பந்தல் ஏற்பாடுகளை ஸ்டாலின் ஒரு விஸிட் அடித்துப் பார்த்து வருகிறார்.

இந்த மாநாடு நிகழ்ச்சி நிரல் எப்போதும் ஸ்டீரியோ டைப்தான். முதல் நாள் கொடியேற்றத்துடன் துவங்கும். தொடர்ந்து மாநாட்டுத் திறப்பு, பல்வேறு தலைப்புகளில் முப்பதுக்கும் மேற்பட்ட பேச்சாளர்கள் உரை, பேராசிரியர் உரையுடன் முடியும். அடுத்த நாளும் பேச்சு மழை தொடரும். மாலை ப்ரைம் டைமில் ஸ்டாலின், ஆற்காட்டார், கலைஞர் பேசுவார்கள். இதற்கிடையில் குறைந்தது நாற்பது தீர்மானங்களாவது நிறைவேற்றப்படுகின்றன. கடந்த சில மாநாடுகளில் கூட்டணி கட்சித் தலைவர்களுக்கும் கலைஞருக்கு முன்னர் பேசும் வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. நெடுஞ்சாலைகளில் ஊர்வலம் செல்ல போலீஸ்

**"கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் மாநாடுகள் என்று மட்டும் எண்ணிவிடாதே!"**



அனுமதி கொடுப்பதில்லை. ஆதலால், முன்பெல்லாம் நடத்தப்படும் ஆரவார ஊர்வலம் 'கட்' ஆகிவிட்டது. தஞ்சை மாநாட்டுக்கு, உடன்பிறப்புகளை அழைக்க கலைஞர் 'அஞ்சலட்டை, அவசரத் தந்தி' என்று நாலடியார் பாணியில் கடிதம் எழுதியதை தொண்டர்கள் மிகவும் சிலாகித்துப் பேசுகிறார்கள்.

"அண்ணா காலத்து மாநாடுகளையும் தற்போது நடத்தப்படும் மாநாடுகளையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. அந்தக் காலத்தில் மாநாடுகளில் தொண்டர்கள் குடும்ப சகிதமாக வருவார்கள். மாநாட்டுப் பந்தலிலேயே பல திருமணங்கள் நிச்சயமாவதுண்டு. அப்போது உணர்வுபூர்வமாக இயக்கத்துடன் ஒன்றிப் போயிருந்தார்கள. இப்போது பகட்டு, படாடோபம், வியாபாரம் என்று ஆகிவிட்ட அரசியலில் உளப்பூர்வமான ஈடுபாட்டையோ, அர்ப்பணிப்பு உணர்வையோ அதிகமாக எதிர்பார்க்க முடியாது" என்கிறார் தி.மு.க. நடத்திய எல்லா மாநாடுகளிலும் கலந்து கொண்ட இயக்கப் பெரியவர் ஒருவர்.



தி.மு.க. மாநாடுகளில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம், நுழைவுக் கட்டணம் உண்டு. மாநாடு நிதி வசூல், நுழைவுக் கட்டணம் மூலமாக வந்த தொகை ஆகியவற்றை கனகச்சிதமாக செலவு செய்து, மிச்சம் பிடித்து கலைஞர் கையில் சேர்த்து விட்டு பாராட்டுத் தென்றலில் மகிழ்ச்சியடைகிறார்கள் மாவட்டச் செயலாளர்கள். திண்டுக்கல் மாநாட்டில் தலைமைக் கழகத்துக்குக் கிடைத்த தொகை முப்பது லட்சம் என்றால், தஞ்சை மாநாட்டில் கோ.சி.மணி அள்ளித் தந்தார் ஒரு கோடி. தேர்தலுக்குப் பல கோடிகள் திரட்ட வேண்டுமே!

"இந்த மாநாடுகள் மண்டல மாநாடுகள்தான். இதில் கலந்து கொள்பவர்களில் சுமார் இருபது சதவிகித்தினர் வெளியூர்க்காரர்கள். பெரும்பான்மை தொண்டர்கள் சுற்று வட்டார மாவட்டங்களில் இருந்துதான் வருவார்கள். தலைவர் உடல்நலம் காரணமாக அதிகமாக சுற்றுப்பயணம் செய்ய முடியாத நிலையில், இந்த மண்டல மாநாடுகளில் கலைஞர் பேச்சு அவர் எங்களைக் குதூகலிக்கச் செய்துவிடும். இந்த மாநாடுகள் மூலம் ஆங்காங்கு இருக்கும் தொண்டர்கள் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் உழைக்கும் உந்து சக்தியைப் பெறுவார்கள். புதிய பேச்சாளர்கள் பளிச்சிடுகிறார்கள். தேர்தல் ஒன்றையே மனத்தில் வைத்துப் போகும் மாநாடுகள் அல்ல இவை. இந்த மாநாட்டுப் பேச்சுக்களின் மூலம் நமது இன,



• மைத்ரேயன்



• பொன்முடி

# ஸ்ரீ டிராவல்ஸ்

194 - A. 2வது மாடி, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 6.
Ph: 55345081, 55345082, 55345083, 28516799, 55870482
E-Mail:sritrave@satyam.net.in Web:www.sreetravels.com

## திருக்கைலாய யாத்திரை

ஏப்ரல் மாதம் சீன அரசு கைலாய விசாவுக்கான கட்டணத்தை உயர்த்திய பின்னர் பயணத்தொகை: ரயில் மூலம் ரூ. 55,000/-, டில்லி - காத்மாண்டு - டில்லி விமான மூலம் ரூ. 64,000/- செப்டெம்பர் மாதம் வரை பிரதி மாதமும்

சென்னை - டில்லி - அமிர்தசரஸ் - சிம்லா - மணாலி - சண்டிகர் - சென்னை
பயண தேதி : 20.05.05 பயண நாட்கள் : 12 நாட்கள்
பயணத்தொகை ஒரு நபருக்கு ரூ. 6,000/- + ரயில் / விமான டிக்கெட்
குழந்தைகளுக்கு ரூ. 4,500/- + ரயில் / விமான டிக்கெட்

குறைந்த பட்சம் 4 பேர் கொண்ட குழுவினருக்கு நீங்கள் விரும்பும் தேதிகளில்
1. கொடைக்கானல் - மூணாறு - தேக்கடி ரூ. 4500/- ஒருவருக்கு
2. ஊட்டி - மூணாறு - தேக்கடி - ரூ. 4500/- ஒருவருக்கு
3. முழுமையான கேரள சுற்றுலா - நபர் ஒருவருக்கு - ரூ.6000/- மட்டும்
4. அலகாபாத் - காசி - கயா - ரூ. 4500/-
5. இலங்கை சுற்றுலா - ரூ. 18,500/-

LTC மற்றும் கோடைக்கால சுற்றுலாக்கள்
* சிம்லா - மணாலி - அமிர்தசரஸ் - டில்லி ரூ.5,800/- + ரயில் டிக்கெட். ஜூன் 5 வரை பிரதி ஞாயிறு.
* கல்கத்தா - டார்ஜிலிங் - கேங்டாக் ரூ.6,500/- + ரயில் டிக்கெட்
* காஷ்மீர் - அமிர்தசரஸ் ரூ.7,900/- டிக்கெட்டுடன்
* பத்ரி - கேதார் யாத்திரை ரூ.6,500/- டிக்கெட்டுடன்

4 பேர் அல்லது அதற்கு மேல் குழுவாக வருபவர்களுக்கு தாங்கள் விரும்பும் தேதியில் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்து தரப்படும். அனைத்து சுற்றுலாக்களுக்கும் அருமையான தங்கும் அறைகள், தென்னிந்திய சைவ உணவு, டீலக்ஸ் பஸ் வசதி உட்பட. அனைத்து பேங்க் கார்டுகள் ஏற்கப்படும். LTCமற்றும் டிராவல்ஸ் லோன் வசதி உண்டு.


மொழி, வரலாற்றை மீண்டும் மனத்தில் பதிய வைத்துக் கொள்கிறோம். திராவிட இயக்க வரலாற்றையும், சமூக நீதிக்கான போராட்டத்தையும் பேச்சாளர்கள் விவரிக்கும்போது ஒன்றிப் போய் விடுகிறோம்" என்கிறார் சட்டமன்ற உறுப்பினரும், தி.மு.க. முன்னணித் தலைவருமான பொன்முடி.


இந்த மாநாடுகளைப் பற்றிய அ.தி.மு.க.வின் பார்வை வேறுவிதமாக இருக்கிறது.

"சென்ற பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு மக்கள் மனநிலையில் மாறுதல் இருக்கிறது. அம்மா ஆதரவு அலை பெருகி வருகிறது. இதனால் தி.மு.க. கூட்டணிக் கட்சிகளில் சலனம் ஏற்பட்டிருக்கிறது. எனவேதான் மாதா மாதம் கூட்டணிக் கட்சிகளும் எங்களுடன்தான் இருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த கருணாநிதியால் இந்த மாநாடுகள் கூட்டப்படுகின்றன. அதைத் தவிர இந்த மாநாடுகள் எதையும் சாதிக்கவில்லை. 'எனக்கு அடுத்தபடியாக, ஸ்டாலின்தான்' என்பதை, மக்களுக்கும், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், கலைஞர் பக்குவமாக எடுத்துச் சொல்லும் மற்றொரு காரியமும் நடக்கிறது" என்கிறார் அ.தி.மு.க.வின் முன்னணிப் பிரமுகரான டாக்டர் மைத்ரேயன்.

'கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் மாநாடுகள் என்று மட்டும் எண்ணி விடாதே! இடைக்காலத்தில் இந்த இனத்துக்கு ஏற்பட்ட புண்ணுக்கு மருந்து தயாரிக்கும் நிகழ்ச்சி என்பதை மறந்துவிடாதே' என்று ஒரு கடிதத்தில் கலைஞர் குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையில் ஸ்டாலின் செயலாளராக இருக்கும் இளைஞரணி வெள்ளி விழா மாநாடாக மலர்கிறது, செப்டம்பரில் புதுக்கோட்டையில் நடக்கப்போகும் மாநாடு. முப்பெரும் விழாவும் அங்கேயே நடக்குமாம்.

கடைசி செய்தி... கும்மிடிப்பூண்டி, காஞ்சிபுரம் இடைத்தேர்தலை முன்னிட்டு கோவை மாநாடு சில நாட்கள் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

- ப்ரியன்




## தில்லுமுல்லும் தள்ளுமுள்ளும்!

**மா**ட்டுத்தீவன ஊழல் வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கலாகி வழக்கு விசாரணை தொடங்கிவிட்டதால் லல்லு பிரசாத் யாதவ் இனி அமைச்சராக நீடிக்கலாகாது என்கிறது எதிர்கட்சிக் கூட்டணி.

"நான் எதற்கு ராஜினாமா செய்ய வேண்டும்? என் பேரில் உள்ள எந்தக் குற்றச்சாட்டும் நிரூபணமாகவில்லையே! நான் நிரபராதி" என்று அடித்துப் பேசுகிறார் ரயில்வே அமைச்சர் யாதவ்!

"அப்படியானால் நாங்கள் இந்த வார இறுதி வரை அவை நடவடிக்கைகளைப் புறக்கணிப்போம்" என்று எதிரணி முடிவு அறிவிக்கிறது. இதற்கு வாஜ்பாய் தலைமையில் ஒரு கூட்டமும் நடைபெற்று, லல்லு எதிர்ப்பைக் கடுமையாக்குவது என்கிற முடிவும் எடுக்கப்படுகிறது.

நஷ்டம் யாருக்கு...? லல்லு பிரசாத் யாதவுக்கோ, ஆளும் கூட்டணிக்கோ, எதிரணியான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கோ அல்ல... வரி செலுத்தும் சராசரி இந்தியனுக்குத்தான்.


நாடாளுமன்றத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் நடைபெற்று சிறந்த முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் தேர்தல்கள் நடக்கின்றன. மக்களும் வாக்களிக்கிறார்கள். ஆனால், அவை நடவடிக்கைகளுக்கு உறுப்பினர்கள்



கல்கி



2005 மே 8
பார்த்திப சித்திரை 25
மலர் : 63
இதழ் : 41




முட்டுக்கட்டை போடும்போது, தேர்தலுக்கும் நாடாளுமன்ற இயக்கத்துக்கும் ஒதுக்கப்படுகிற வரிப் பணமெல்லாம் பலகோடி கணக்கில் வீண் விரயம்தான்.


லல்லு பேரில் உள்ள குற்றச்சாட்டுகள் சாமானியமானவை அல்ல என்பதை நாம் அறிவோம் ; அவரும் அறிவார். ஆனால், மாட்டுத் தீவன ஊழல் வழக்கின் அடிப்படையிலும் சரி, குஜராத்தில் நடந்த சபர்மதி எக்ஸ்பிரஸ் விபத்துக்காகவும் சரி, அவர் தார்மிகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்ய வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோருவதும் எதிர்பார்ப்பதும் பெரிய வேடிக்கை. அரியலூர் ரயில் விபத்துக்குத் தார்மிகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்த லால்பகதூர் சாஸ்திரியுடன் அந்தப் பண்புகள் காணாமல் போய்விட்டன.

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடின்றி பா.ஜ.க. உட்பட அனேகமாக அத்தனை கட்சிகளிலும் லல்லுவைப் போலவே குற்றச்சாட்டுகளைத் தாங்கி நிற்கும் தலைவர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்கள் யாரும் தார்மிக அடிப்படையில் ராஜினாமா செய்துவிடவில்லை ; செய்யப்போவதுமில்லை. அந்தந்த குற்றச்சாட்டு எழுகிற வேளையில் சர்ச்சை பெரிதாக வெடித்து, பின்னர் அது அடங்கியும் மறந்தும் போவதோடு சரி.

உண்மையில் இந்த நிலைமைக்குக் காரணம், குற்றம் சாட்டப்பட்ட ஒருவர், சட்டரீதியாக பதவியில் நீடிக்க இடமிருக்கிறது என்பதுதான். தேர்தல் விதிகளும் சரி, இந்திய குற்றவியல் சட்டமும் சரி, குற்றம் சாட்டப்பட்டவர் பதவி ஏற்கக் கூடாது என்றோ, பதவி விலக வேண்டும் என்றோ கூறவில்லை. சட்டப்படி குற்றம் நிரூபணமானால்தான் ராஜினாமா முறையாகிறது. அதுவும் குறிப்பிட்ட காலத்துக்குத்தான் பதவியில் இருக்க முடியாது.

ஆகவே, லல்லு பிரசாத்தின் ராஜினாமாவைக் கோரி அவைப் புறக்கணிப்புச் செய்வதற்குப் பதிலாக, எதிர்க்கட்சியினர் இதுபோன்ற தார்மிகச் சீர்குலைவைத் தடுக்கும் வகையிலான சட்டத் திருத்தங்களுக்காகக் குரல் கொடுப்பது அர்த்தமுள்ளதாக இருக்கும்.

அரசியல் சாசனமும் நாடாளுமன்ற விதிகளும் இந்தியத் தலைவர்கள் பேரில் நூறு




சதவிகித நம்பிக்கை கொண்டவர்களால் உருவாக்கப்பட்டவை. அவர்கள் அனைவருமே தார்மிகப் பண்புகளைக் கண்ணெனக் கருதுவார்கள் என்ற நம்பிக்கையில் எழுந்தவை. ஆனால், அத்தகைய நம்பிக்கைக்குப் பாத்திரர்களாக அவர்கள் இன்று இல்லை. ஆகவே, சட்டத்தை மாற்றித்தான் ஜனநாயகத்துக்கும் மக்களுக்கும் பாதுகாப்புத் தர முடியும்.

அதே சமயத்தில், குற்றம் சாட்டப்பெற்றவர் எம்.பி./எம்.எல்.ஏ.ஆக முடியாது என்ற வகையில் சட்டத்தைத் திருத்துவதும் அபாயம். போலிக்குற்றச்சாட்டு மூலம் அரசியல் பழிவாங்கல் ஆரம்பித்துவிடும்! இதனை நினைவில் கொண்டே சட்டத் திருத்தம் இயற்றவேண்டும்.

இந்த சீர்திருத்தத்துக்கான முதல் கோரிக்கையை எதிர்கட்சியினர் வைப்பார்களே யானால், ஆளுங்கட்சியினால் அதைப் புறக்கணிக்கவோ, நிராகரிக்கவோ முடியவே முடியாது. அவ்வாறு நிராகரிப்பது அவப்பெயரையே உண்டாக்கும். லல்லு போன்றோரைப் பாதுகாக்க விரும்பியே சீர்திருத்தங்களை ஏற்க மறுப்பதாகக் குற்றச்சாட்டு எழும். எனவே, எதிர்கட்சி முன்மொழிவதை, ஆளுங்கட்சி விவாதத்துக்கு ஏற்றே தீரும். பின்னர் சட்டத் திருத்தத்துக்கும் வழி ஏற்படும்.

ஆனால், எதிர்கட்சியினர் இந்த விஷயத்தில் முதல் அடி எடுத்து வைப்பார்களா என்பது சந்தேகம்தான். அது தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டதாகிவிடும் என்ற பயம்! லல்லுவுடையதைப் போன்ற பல தில்லுமுல்லுகள் எதிர்கட்சியிலும் உண்டே!

இதனால்தான் ஆக்கபூர்வ அரசியல் என்பதைவிட எதிர்ப்பு அரசியலும் வெறுப்பு அரசியலும் இன்று பரபரப்பான கவனத்துக்கு உள்ளாகின்றன.

பரபரப்பு அரசியலை ஒதுக்கிவைத்துவிட்டு, ஜனநாயக நலனும் நாட்டு நலனும் கருதி, வாஜ்பாய் போன்ற மூத்த தலைவர்கள் சற்று நிதானித்து வழிகாட்டுவார்களேயானால் ஆக்கபூர்வ மாற்றங்களுக்கான வித்து ஊன்றப்படும். ●



# செவ்வேல்

**'செவ்வேல்' படத்தின் கதாநாயகன் ராஜ்கிரனா இல்லை ஜெய்ஆகாஷா என்ற சந்தேகம் சர்ச்சையாக வெடித்து, அதுவே நீதிமன்றத்தில் வழக்காகி விசாரணைக்கு வந்தால் எப்படியிருக்கும்... லெட் அஸ் வாச் தி ரிவ்யூ! சாரி, ஆர்க்யுமெண்ட்!**

***ராஜ்கிரண் வழக்கறிஞர்:-*** *கனம் நீதிபதி அவர்களே! எமது கட்சிக்காரர் ராஜ்கிரண், கடலை என்ற பாத்திரத்தில் கிராமத்து மக்களின் காட்ஃபாதராக நடித்திருக்கிறார். ஒரு மண்ணின் மைந்தர் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது அவரது கேரக்டர்!*

***ஜெய் ஆகாஷ் வழக்கறிஞர்:-*** *ஐ அப்ஜெக்ட் யுவர் ஆனர்! தமிழ் சினிமாவில் இதுவரை கதாநாயகர்களாகக் கோலோச்சிய யாரும் சட்டம் படித்து விட்டு, குடும்பத்தைக் காப்பாற்ற தனது வளர்ப்புத் தந்தை வழியில் குப்பைப் பொறுக்கும் தொழிலாளியாகச் சித்திரிக்கப்பட்டதில்லை! அந்த வகையில் இந்த மண்ணில் இன்னும் தொடரும் கசப்பான யதார்த்தத்தின் பிரதிபலிப்பாக மிரள வைக்கும் ஜெய் ஆகாஷ்தான் உண்மையான மண்ணின் மைந்தன்.*

***ரா.கி.வழக்கறிஞர்:*** *மண்ணின் மைந்தன் என்ற சொல்லாடலை எதிர்க் கட்சி வழக்கறிஞர் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார் நீதிபதி அவர்களே! சிங்கப்பூருக்குப் பிழைக்கப்போய், கிராமத்துக்குத் திரும்பும் இளவரசு, அடைக்கப்பட்ட தண்ணீரைக் குடித்துவிட்டு, காலி பிளாஸ்டிக் குப்பியை பூமியில் வீசியெறிவார். இதைப் பார்க்கும் ராஜ்கிரண் கொதித்துப் போய், "இதுவே சிங்கப்பூருன்னா இப்படிச் செய்வியா? சோறு போடுற பூமித் தாய் மடியில பிளாஸ்டிக்கைப் போட்டு ஏண்டா அவளை மலடாக்குறீங்க?" என்று கேட்பார்.*

*இவரல்லவா மண்ணின் மைந்தர்! எனவே படத்தின் நாயகன் ராஜ்கிரண் தான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை யுவர் ஆனர்.*

***ஜெ.ஆ.வழக்கறிஞர்:*** *கதைப்படி சிறைசென்று திரும்பும் தந்தை ராஜ்கிரண் மீதான கொலைப் பழியை, துடைக்க, வழக்கறிஞர் ஆகி, தந்தையின் பழைய வழக்கை தோண்டி எடுத்து, உண்மையான கொலையாளியின் முகத்திரையைக் கிழிப்பது எமது கட்சிக்காரர் ஜெய் ஆகாஷ் தான். அறிமுகநாயகி மிஷாவுடன் படத்தில் டூயட் பாடுவது ஜெய் ஆகாஷ்தானே தவிர அப்பா ராஜ்கிரண் அல்ல!*

***நீதிபதி:*** *ராஜ்கிரண் தனது கிராமத்தில் கடவுள் சாட்சியாக ஒரு வேலை வைத்து பஞ்சாயத்தில் தீர்ப்பு சொல்கிறார். மகன் ஜெய் ஆகாஷ் சிறுவனாக அந்த வேலுடன் பிரிந்து விடுகிறார். பின்னால் இருவரும் அருகருகே இருந்தும், அந்த வேல் அவர்களைச் சேர்த்து வைத்து விடும் என்று கடைசி நிமிடம் வரை அற்புதமாக வித்தை காட்டி விட்டு, பெருந்தன்மையோடு அப்பா மகன் இணையும் காட்சிக்கு அந்த டெக்னிக்கை பயன்படுத்தாத இயக்குனர் பிரிமூஸ்தான் படத்தின் ஹீரோ என்று தீர்ப்பளிக்கிறேன்.*

**- விஷுவல்தாசன்**

**சின்னத்திரையை விடாது பார்க்கும் இல்லத்தரசிகளுக்கு தேவிப் பிரியாவை அறிமுகப்படுத்தத் தேவையில்லை. சேனலை மாற்றிக் கொண்டே வந்தால் ஏதாவதொரு சீரியலில் கண்டிப்பாக இருப்பார். 'விக்கிரமாதித்யன்', 'செல்வி' தொடர்களில் கலக்கிக் கொண்டிருப்பவரை 'செல்வி' ஷூட்டிங் ஸ்பாட்டில் சந்தித்தோம்.**

**நதிமூலம்?**

சொந்த ஊர் மதுரை. சிறு வயதில் என் கனவெல்லாம் நர்ஸாக வேண்டும் என்பதுதான். ஆனால் ப்ளஸ் டூவில் நர்ஸிங் கோர்ஸ் படித்தபோது ரத்தம், ஆபரேஷன் எல்லாம் பார்த்து, பயந்து போய் விட்டேன். வேணாம்டா சாமி என்று தபாலில் பி.ஏ. ஆங்கில இலக்கியம் படித்தபடியே ஒரு ஹோட்டலில் நிர்வாகப் பொறுப்பை ஏற்றபொழுதுதான் எனக்கு ஒரு விபத்து ஏற்பட்டது.

**என்ன, நடிகையாகும் வாய்ப்புக் கிட்டியதா?**

யதேச்சையாக அப்பலோ மருத்துவமனையின் டாக்குமெண்ட்ரியில் நடிக்க, அதைப் பார்த்த ராஜீவ் மேனன் என்னை 'மின்சார கனவு' படத்தில் கஜோலின் தோழியாக நடிக்க வைத்தார். அப்படியே டி.வி.யிலும் நுழைந்தேன். 'சக்தி', ஏவி.எம்.மின் 'நிம்மதி உங்கள் சாய்ஸ்' போன்ற சீரியல்கள் என்னை பிரபலப்படுத்தின. ச்ச...சும்மா ஆரம்பிச்சு, இதுவரை 35 சீரியல்களில் நடிச்சு முடிச்சுட்டேன்.

**ஆனாலும் பெரியளவில் பிரபலமாகாதது ஏன்?**

எனக்கென்று மேனேஜர் கிடையாது. தேவதர்ஷினி, தீபா வெங்கட் போல ஆரம்பத்திலிருந்தே மெயின் கேரக்டர்களில்தான் நடிப்பேன் என்று பிடிவாதம் பிடிக்காமல் சிறிய வேடங்களில் நடித்ததும் ஒரு காரணம். ஒரு பெரிய பேக்ரவுண்டு இல்லாததால் என்னை ஏற்றிவிடவும் யாருமில்லை. 'அக்னி சாட்சி', 'விக்ரமாதித்யன்', 'செல்வி' போன்ற தொடர்கள்தான் என்னை மேலும் பிரபலமாக்கியுள்ளன. இதனாலேயே என்னைப் பற்றி ஏதாவது கிசுகிசு வந்தால் கூட இப்படியாவது பப்ளிசிட்டி கிடைக்குதே என்ற புளகாங்கிதம் அடைவேன்.

**நீங்கள் காதலித்ததாகச் சொல்லப்படும் சூரியகிரண், நடிகை காவேரியை மணக்க உள்ளாரே?**

(சிறிது நேரம் மௌனம்) இதை எங்கிட்ட மட்டும் ஏன் கேட்கிறீங்க? எங்களுக்குள்ள எந்தவிதக் காதலும் கிடையாது. இதற்கு மேல் பேச விரும்பலை.

- சநகன்

படம் : ராஜன்



# காதலனுக்குத் திருமணம்!


–தேவிப்பிரியா பதில்

# ஜெ. மீது 'புதிய' கேஸ்!

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா என்னவோ இப்போதுதான் வழக்குகளைச் சந்திக்கிறார் என்றில்லை. சமீபத்தில்கூட அவரது அதிகச் சொத்துக் குவிப்பு வழக்கு பெங்களூரில் நடைபெறத் தொடங்கியுள்ளது.

சுமார் 33 வருடங்களுக்கு முன்பாகவே செல்வி ஜெயலலிதா மீது இ.பி.கோ. 420வது பிரிவின்படி ஒரு வழக்குப் பதிவானது பற்றிய விவரம் பெங்களூரிலிருந்து வெளிவருகின்ற "விஜயா டைம்ஸ்" நாளிதழில் (16.3.2005) வெளியிடப்பட்டுள்ளது.

மைசூர் நகரில் வருடந்தோறும் நடைபெறுகின்ற புகழ் மிக்க தசராத் திருவிழா, ஏறக்குறைய ஒரு மாத காலம் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் நடத்தப்படுவது வழக்கம். 1972ஆம் வருடம் அக்டோபர் மாதம் 20ஆம் தேதி நாட்டிய நிகழ்ச்சியொன்றை நடத்திட, முன் பணமாக ரூபாய் 5000/- பெற்றுக் கொண்டார் ஜெயலலிதா.



நிகழ்ச்சி நடைபெற வேண்டிய நாளில் செல்வி ஜெயலலிதாவின் நாட்டியத்துக்கு முன்பாக, நடிகை ஹேமா மாலினியின் நாட்டியம் நடைபெறுவதாக நிகழ்ச்சி நிரல் இருந்தது. இதைக் கேள்விப்பட்ட செல்வி ஜெயலலிதா, முதலாவதாக தமது நாட்டிய நிகழ்ச்சிதான் நடைபெறவேண்டும், இரண்டாவதாக என்றால் நாட்டியம் ஆட மாட்டேன் என்று சொல்லிவிட்டார்.

விழாக்குழுவின் தலைவர் "அப்படியெல்லாம் மாற்ற முடியாது. நிகழ்ச்சி நிரல் படிதான் நடத்த வேண்டும். அதுவுமில்லாமல் நுழைவுச் சீட்டும் விற்று முடிந்துவிட்டது. ஆகவே, மறுப்புச் சொல்லாமல் நிகழ்ச்சியை நடத்திக் கொடுங்கள்" என்று கேட்ட பிறகும் விழாவைப் புறக்கணித்து, ஏதோ ஒரு படத்திற்காக படபிடிப்புக்குச் சென்றுவிட்டார். வேறு வழியில்லாமல் குழுவின் தலைவர், காவல் நிலையம் சென்று நடந்தவற்றைக் கூறி இ.பி.கோ. 420 பிரிவின்படி அவர்மீது நடவடிக்கை எடுத்திட வழக்கு பதிவு செய்தார்.

இதைக் கேள்விப்பட்ட செல்வி ஜெயலலிதா, குழுத் தலைவர் தம்மை அவமானப்படுத்திவிட்டார் என்று அவர் மீதே வழக்கும் போட்டுவிட்டார்.

அப்போதைய கர்நாடக முதல்வர் தேவராஜ் அர்ஸும், இந்திரா காந்தி அம்மையாரும் தலையிட்டு, இரு தரப்பிலும் சமாதானம் செய்து வைத்தார்களாம்.

- ப. மூர்த்தி




இப்பொழுது விற்பனையில்...

சூப்பர் ஆடியோ நிறுவனத்தின் கீதாஞ்சலி வழங்கும்

## திருமதி சுதா ரகுநாதனின்
# தில்லானாஸ்

(ஆடியோ கேஸட் மற்றும் ஆடியோ சிடி)




மாயாமாளவ கௌளை, பிலஹரி, பாஹேஸ்வரி, ஹமீர்கல்யாணி, காபி, சங்கராபரணம், சிவரஞ்சனி, ஹம்ஸநந்தி, கானடா மற்றும் தேஷ் ராகங்களில் பாடிய இனிமையான பாடல்கள்
வயலின் - கே. சிவராமன்.
ம்ருதங்கம் - திருவாரூர் வைத்யநாதன், முகர்ஸிங் - ஆர். ராமன்.
இயற்றியவர் மதுரை என். கிருஷ்ணன்.

**ஆடியோ சிடி - ரூ. 200/- ஆடியோ கேஸட் ரூ. 50/-**

Geethanjali

**SUPERAUDIO (MADRAS) Pvt. LTD.,**
**# 713, Anna Salai, Carex Centre, II Floor, Chennai - 600 006. INDIA. ☎ 52140068**
**www.musicandchants.com supertape@yahoo.com.**
**CDWORLD-#505, Galle Road, Colombo-6 Ph : 2554481**


**For Trade Enquiry Contact : 52140067**
**For Audio Caseettes contact : Varshene Associates 24662244**



# ஆன்மீக உலகில் ஓர் அற்புதம்!

ஆன்ம சக்தியை அழித்து, அறிவின் திறனை குறைத்து, மனவலிமையை தகர்த்து, நிம்மதியைக் குலைத்து, வலிவை பாழாக்கி, ஆரோக்யத்தைக் குறைத்து, குடும்பத்தில் குழப்பம், தொழிலில் நஷ்டம், உத்தியோகத்தில் பிரச்சனை, கல்வியில் தோல்வி, காதலில் வீழ்ச்சி போன்ற காரியங்களை பில்லி, சூன்யம், ஏவல் இவற்றால் தீமை உண்டாகின்றன.

விண் மட்டும் விஞ்ஞானம் வளர்ந்த போதும், இவைகளுக்குத் தீர்வு அருள் மறையில் மாத்திரமுண்டு. இந்தக் குறைகளை நீக்கி எல்லாத் துறையிலும் வெற்றி பெறச் செய்கிறார் மாபெரும் தவச்சீலர் மறையகம் பாபா. உடனே அணுக வேண்டிய முகவரி



அருள்
# மறையகம்

1 B, மகாலட்சுமி அப்பார்ட்மெண்ட், நெ. 3, அப்துல் ரசாக் தெரு, நூர்ஜஹான் தியேட்டர் எதிரில் (தற்போது ராஜ் தியேட்டர் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது), சைதாப்பேட்டை, சென்னை — 600 015.
☏ போன் : 2435 1190, 2433 2047. செல்போன் : 3100 5716

குறிப்பு : வெளியூர், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் பிரச்சினை தீர்க்க தங்கள் பெயர், தங்கள் தாயார் பெயருடன் தங்கள் பிரச்சினைகளை எழுதி, ரூ. 10 (அ) அதற்கான அஞ்சல் தலையுடன் அனுப்பி வைத்து ஆலோசனை பெறவும்.

## புதிய பகுதி

# புஷ்பா தங்கதுரை

தமிழகத்தின் பிரபல சீனியர் பேச்சிலர்களுள் குறிப்பிடத்தக்கவர் எழுத்தாளர் புஷ்பா தங்கதுரை. நமது 'பேச்சிலர் சமையல்' பகுதிக்காக அவரைச் சந்திக்கச் சென்றபோது, இரவு டிபனுக்காக உப்புமா செய்யும் பணியில் மிகுந்த சிரத்தையுடன் ஈடுபட்டிருந்தார்.

இந்த பேச்சிலரின் கிச்சன் பளிரென்று இருந்தது. பாத்திரங்கள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. சமையலுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் அழகழகான பாட்டில்களில் இருந்தன.

''பேச்சிலர், அதுவும் ஆம்பளைன்னா, கிச்சன் மோசமா இருக்கும்... எப்போதுமே ஹோட்டலே கதின்னு இருப்பான்னு எதிர்பார்த்தீங்களா...? அப்படிப்பட்ட ஆள் நானில்ல'' என்றபடி பேசத் தொடங்கினார் புஷ்பா தங்கதுரை.



"சமையல்ல என் குரு எங்க அம்மாதான். அவங்க நேரடியாக எனக்கு கத்துக் கொடுக்கலைன்னாலும் அவங்க செய்யறதைப் பார்த்து தான் சமையல் செய்யப் பழகிக்கிட்டேன். சாம்பார், ரசம், பொரியல், இட்லி, அடைன்னு எது செய்தாலும், அதை ருசியா செய்து சாப்பிடற டைப் நான். புதுசா சமைக்கத் துவங்கினப்போ கண்ணைக் கட்டி காட்ல விட்ட மாதிரி இருந்தது. ஒரு தடவை கத்திரிக்காய், வெண்டைக்காய், முருங்கைக்காய், மாங்காய் எல்லாம் போட்டு சாம்பார் வைச்சேன்... நிறைய காய் போட்டிருந்ததால, தொட்டுக் கொள்ள எதுவும் செய்யல... சாம்பாரை கரண்டியால கிளறினா ஒரு காயும் தென்படல. எல்லாமே கரைஞ்சுடுச்சு போல... எந்தக் காயை முதலில் வேக விடணும்... எதை பாதியில வேக விடணும்னு தெரிஞ்சிகிட்டு இப்போ நல்லாவே சமைக்கிறேன்."

இவரிடம் செராமிக் ஹீட்டர் ஒன்று இருக்கிறது. அதில் தான் வெந்நீர், காப்பி எல்லாமே போடுகிறார். இதில் தான் நமக்கு சுடச்சுட பீபெரி காப்பி போட்டுத் தந்தார். "இந்த மணமணக்கும் காப்பிக்கு ஒரு ரசிகர் பட்டாளமே இருக்கிறது'' என்கிறார் புஷ்பா தங்கதுரை, காஃபியை சுவைத்தபடி.

"சமையல் கத்துக்கிட்டது எனக்கொரு போராட்டமான விஷயம்தான். இருபது வருஷத்துக்கு முன்னால, சிங்கப்பூர்ல இருந்து எலக்ட்ரிக் ரைஸ் குக்கர் வாங்கிட்டு வந்தேன். நாப்பத்தஞ்சு நிமிஷத்துல சாதம் தயாராகிடும்னு போட்டிருக்கவே, ஆசையா வாங்கினேன். அரிசியைப் போட்டு குக்கரை ஆன் பண்ணி கொஞ்ச நேரத்துல நீராவி வெளிவர ஆரம்பிச்சது. குக்கரோட மேல் மூடி தடதடன்னு நர்த்தனமாட, எனக்குப்

பேச்சிலர் சமையல்



# தட தட டான்ஸ்!

படபடன்னு ஆயிடுச்சு. எப்போ மூடி கீழே விழும்னு பயந்துகிட்டே இருந்தேன். ஒரு வழியா அம்பது நிமிஷம் கழிச்சு குக்கர்ல எரிஞ்சுகிட்டு இருந்த பல்பு அணைஞ்சுது. கொஞ்சம் பதற்றத்தோடவே குக்கரோட மேல்மூடியத் திறந்தா... என்ன ஆச்சர்யம்... சூப்பரா சாதம் ரெடியாகி இருந்தது. இது மாதிரி ஏகப்பட்ட அனுபவங்கள்'' என்று சொல்லும் இவர், சம்பாகோதுமை உப்புமா செய்வதில் எக்ஸ்பர்ட்டாம். இதை எப்படித் தயாரிப்பது என்று கேட்க, மிகுந்த ஆர்வத்துடன் சொல்லத் தொடங்கினார்.

"இதுக்கு சம்பா கோதுமை ஒரு கப், கடுகு அரை டீஸ்பூன், உளுத்தம் பருப்பு ஒரு டீஸ்பூன், கடலைப் பருப்பு ஒரு டீஸ்பூன், பெருங்காயப் பவுடர் கால் டீஸ்பூன், வரமிளகாய் மூன்று, எண்ணெய் ஒரு குழிக் கரண்டி எடுத்துக்கணும். அதோட ஒரு பெரிய வெங்காயத்தை பொடியா நறுக்கிக்கணும். இப்போ வாணலியில் எண்ணெயை ஊத்தி, காய்ஞ்சவுடனே அதுல கடுகைப் போடணும். இப்போ கடுகு வெடித்துச் சிதறும். உடனே உ.பருப்பு, க.பருப்பு, மிளகாய், பெருங்காயப் பவுடர், எண்ணெய்ல போட்டு, சிவக்கற வரைக்கும் வதக்கணும். இப்போ நறுக்கின வெங்காயத்தையும் சேர்த்து வதக்கி, அதுல ரெண்டு கப் தண்ணியை ஊத்தி, கொதி வந்துடுச்சுன்னா, உப்பு சேர்த்து சம்பா கோதுமையைத் தூவணும். நல்லா வேகற வரைக்கும் கிளறிக்கிட்டே இருக்கணும். கோதுமை வெந்துடுச்சுன்னா உப்புமா ரெடின்னு அர்த்தம். இப்போ உப்புமாவை கீழே இறக்கி, இலேசா ஆறினவுடனே ஒரு மூடி எலுமிச்சை சாறைப் பிழிஞ்சு, உப்புமாவைக் கிளறினா, டேஸ்ட் ஏ ஒன்!"

சந்திப்பு : இரா. முத்துக்குமார்




# தொழப்படா சாமி!

**த**மிழ் அறிஞர் அ.ச.ஞானசம்பந்தன் எழுதி 1947ம் ஆண்டில் வெளியான புத்தகம் 'இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்.' தமிழ்த் தென்றல் திரு.வி.க. பாராட்டி, நூலுக்கு சிறப்புரை எழுதிய அந்தப் புத்தகம், அ.ச.ஞாவின் அவர்களது இலக்கியப் படைப்புகளில் முக்கியமான ஒன்று. ஆனால், அந்தப் புத்தகத்தில் ராவணனின் பெருமைகள் பற்றியும், வீழ்ச்சி குறித்தும் அ.ச.ஞா எழுதிய கருத்துக்களை, அப்படியே வரிக்கு வரி, மன்னிக்கவும், வார்த்தைக்கு வார்த்தை அச்சிட்டு ஒரு புத்தகத்தை வெளியிட்டிருக்கிறது 'நாம் தமிழர் பதிப்பகம்'.

இதில் இன்னும் கொடுமையான விஷயம் என்னவென்றால், நாம் தமிழர் பதிப்பகத்தினர் வெளியிட்டுள்ள புத்தகத்தின் தலைப்பு என்ன தெரியுமா? பாவேந்தரின் 'இராவணன் மாட்சியும், வீழ்ச்சியும்'. அ.ச.ஞாவின் படைப்பை, பாரதிதாசன் எழுதிய புத்தகமாக வெளியிட்டிருக்கும் செயல், தமிழ் பதிப்பக உலகில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. "எங்கள் அப்பா, ராவணனை, கம்பர் படைத்த ஒரு காவியப் பாத்திரமாகப் பார்த்து, ஆராய்ச்சி செய்து ராவணனது மாட்சியையும், வீழ்ச்சியையும் விவரித்துச் சொன்ன நூல் தான் ராவணனின் மாட்சியும் வீழ்ச்சியும். தமிழ் இலக்கிய உலகில் அதற்குத் தனியொரு இடம் உண்டு. 55 வருடங்களுக்கு முன்பு அப்பா எழுதிய இந்தப் புத்தகத்தை, கடந்த பத்தாண்டுகளாக வானதி பதிப்பகம் வெளியிட்டு விற்பனை செய்து வருகிறது.

"அண்மையில் எங்களது உறவினர் ஒருவர், இந்த விஷயத்தை எங்கள் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது, ராவணனின் மாட்சி பற்றி அப்பா எழுதிய ஒன்பது அத்தியாயங்களும், வீழ்ச்சி குறித்த ஆறு அத்தியாயங்களும் அப்படியே ஒன்று விடாமல் மறு பிரசுரமாகியுள்ளதைக் கண்டுபிடித்தோம். காப்பியம் என்று தலைப்பிட்டு எழுதிய பத்து பக்கங்கள், அவலம் என்ற தலைப்பில் எழுதிய 36பக்கங்கள் ஆகியவற்றை மட்டும் ஒதுக்கிவிட்டு மீதி அனைத்தையும் 'பாவேந்தரின் இராவணன் மாட்சியும், வீழ்ச்சியும்' என்று புத்தகமாய் வெளியிட்டிருக்கிறார்கள். ஒருவர் எழுதிய புத்தகத்தை, வேறு ஒருவர் எழுதியதாகக் கூறி வெளியிடுவதே ஏமாற்று வேலை. அதிலும், இதிலே பாரதிதாசனை இழுத்திருப்பது கடுமையான ஆட்சேபணைக்குரியது. சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடிவு எடுத்திருக்கிறோம்'' என்று கொதிக்கிறார் அ.ச.ஞாவின் புதல்வி மீரா.

"**அ**து தவறுதான். ஆனால் எங்களுக்குத் தெரியாமல் நடந்து விட்டது. பாரதிதாசனின் புத்தகங்களை அதிக அளவில் வெளிக் கொண்டு வரும் நோக்கத்துடன், அவரது பழைய நூல்களைச் சேகரித்தபோது, ஒரு நண்பர் கொண்டு வந்து கொடுத்த பத்து புத்தகங்களில், அட்டையும், முன்னால் சில பக்கங்களும் இல்லாத இந்த குறிப்பிட்ட புத்தகமும் ஒன்று. அதை முறைப்படி சரிபார்க்காமல், வெளியிட்டது தவறுதான். எங்களுக்கு விஷயம் தெரிந்தவுடன், விற்பனையிலிருந்து அந்த புத்தகத்தின் பிரதிகளை விலக்கிக் கொண்டு விட்டோம்" என்கிறார் பதிப்பாளர் ராஜசேகரன்.

**"பாரதிதாசனை இழுத்திருப்பது ஆட்சேபணைக்குரியது."**

**- கௌதம்**

# ஸ்ரீ சனீஸ்வர பகவானின் ஸ்தலமான திருநள்ளாறில்

## 27-6-2005 திங்கள் அன்று மிதுனத்திலிருந்து கடகத்திற்கு

## சனிப்பெயர்ச்சியாகும் நாளில் நடைபெறும் அன்னதான பணியிலும்,



# ஸ்வாமி கண்ணன் பட்டாச்சாரியா

தலைமையில் சென்னையில் நடைபெறும்

## மாபெரும் சனிப்பெயர்ச்சி ஹோமத்திலும்

கலந்துகொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.



## சனிப்பெயர்ச்சியில் அன்னதானம்

பேரன்புடையீர்! வணக்கம், திருநள்ளாற்றீஸ்வரப் பெருமான் தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருள பிரார்த்திக்கிறோம்.

திருக்கயிலை நாதனின் திருவருளால் மூன்று ஆண்டுகளாக திருநள்ளாறில் அன்னதான பணிகளில் ஈடுபட்டுவரும் 'ஆன்மீகம்' தெய்வீக மாத இதழ் வாசக அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க வரும் சனிப்பெயர்ச்சி நாளன்று தோஷ நிவர்த்தி ஸ்தலமான திருநள்ளாறில் தெற்கு வீதியில் அன்னதான திருப்பணி நடைபெறவுள்ளது. இத்திருப் பணியில் பங்கு கொண்டு சனிப்ரீதி செய்வித்து சகலக்ஷேமங்களும் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். திருநள்ளாறில் எள் எண்ணெய் தீபம் ஏற்றி அங்கு வரும் அன்பர்களுக்கு எள் சாதத்துடன் அன்னதானம் செய்தால் சனீஸ்வர பகவான் மனம் மகிழ்ந்து எல்லா வகையான தோஷங்களிலிருந்தும் விடுவிப்பார் என்பது திண்ணம். அனைவரும் சனி பகவானால் ஏற்படும் இன்னல்களிலிருந்தும், கஷ்டங்களிலிருந்தும் விடுதலை பெறவேண்டும் என்ற இறை சிந்தனையோடு ஆன்மீகம் மாத இதழ் சார்பாக நடத்தப்படும் ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட் மூலம் திருநள்ளாறில் அன்னதானம் செய்து ஸ்ரீ சனீஸ்வர பகவானின் ஆசி பெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அன்னதானத்திற்கு தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

- ரூ. 500 - அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் மூன்று மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 1000 - அனுப்பும் அன்பர்களுக்கு, தாங்கள் விரும்பும் ஏதாவது ஒரு தெய்வீகம் அல்லது ஜோதிட மாத இதழ் ஆறு மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 2000 - அனுப்பும் அன்பர்களுக்கு, தாங்கள் விரும்பும் ஏதாவது ஒரு தெய்வீகம் அல்லது ஜோதிட மாத இதழ் ஒரு வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 5000 - அனுப்பும் அன்பர்களுக்கு, தாங்கள் விரும்பும் ஏதாவது ஒரு தெய்வீகம் அல்லது ஜோதிட மாத இதழ் ஐந்து வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.2000, ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு [illegible]
[illegible]
என்ற இறைசிந்தனையோடு ரூ.5000/- அனுப்புபவர்களுக்கு 'நவகிரக தோஷங்களும், நிவர்த்தி பரிகாரமும்' எனும் பெரிய அளவிலான புத்தகத்தை அனுப்பிவைக்கிறோம்.

## சென்னை மாநகரில் மாபெரும் சனிப்பெயர்ச்சி ஹோமம்

உலகில் அன்றாடம் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் காரணமாக இருப்பது நவகோள்களாகும். இந்த நவகோள்களில் மிகவும் சக்தி வாய்ந்தவர் ஸ்ரீ சனீஸ்வர பகவான் ஆவார். வரும் 27-6-2005 அன்று அதிகாலை 1.24 மணிக்கு மிதுனத்திலிருந்து கடகத்திற்கு சனிப் பெயர்ச்சி ஆகும் நாளில் 'ஆன்மீகம்' தெய்வீக மாத இதழ் சார்பாக ஸ்ரீ யோக ஆஞ்சநேய சக்தி பீடாதிபதி விருட்ச சாஸ்திர வித்வான் பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சாரியா தமது வேத வித்வான்களின் குழுவுடன் சனிபகவானால் ஏற்படும் இன்னல்களிலிருந்தும், கஷ்டங்களிலிருந்தும் விடுதலைபெற்று அவரது ஆசிபெறவும் தோஷ நிவர்த்தி பெறவும் மாபெரும் சனிப்பெயர்ச்சி ஹோமத்தை (27-6-05 காலை 6-12) ஸ்ரீ மது கிரிபதி ராஜமடம், 5, கிழக்கு குளக்கரை தெரு, திருவல்லிக்கேணி (ஸ்ரீ பார்த்தசாரதி கோயில் குளம் அருகில்), சென்னை-5-ல் நடத்துகின்றார். இம்மாபெரும் ஹோமத்தில் சனிப்பெயர்ச்சியால் பாதிக்கப்படும் ஒவ்வொரு ராசி நேயர்களும் குடும்பத்துடன் பங்கேற்று சங்கல்பமும் பரிகாரமும் செய்து கொண்டு பூர்ணாஹூதி வரை இருந்து பிரசாதம் பெற்று கொள்ளலாம். ஹோமத்தில் நேரில் கலந்து கொள்பவர்களுக்கு எள் சாதத்துடன் அன்னதானம் வழங்கப்படும்.

## சனிப்பெயர்ச்சி ஹோமத்தில் பங்கு பெற பரிகார சங்கல்ப கட்டணம் ரூ.400/-

இந்த மாபெரும் ஹோமத்தில் நேரில் கலந்து கொள்ள முடியாதவர்கள் தங்கள் பெயர், நட்சத்திரம், ராசி, கோத்திரம் போன்ற விவரங்களை தெளிவாக எழுதி அனுப்பினால் அவர்கள் சார்பாக பரிகார சங்கல்பம் செய்து அதற்கான பிரசாதங்களுடன் ஹோமத்தில் வைத்து பூஜிக்கப்பட்ட அஷ்ட லட்சுமி வெள்ளி டாலர், ஸ்ரீ சனி பகவான் யந்திரம், அட்சதை, குங்குமம், நவக்கிரக தோஷ ரட்சை மற்றும் ஹோமபஸ்மத்துடன் கொரியர் மூலம் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

[illegible]

அன்னதானம், ஹோமத்திற்கு தாங்கள் அனுப்பும் நன்கொடையை **Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai -4** என்ற பெயரில் **Cheque / D.D/ M.O.** மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.




நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரிவிலக்கு உண்டு

Cheque/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி

# ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

**SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST** (Regd),
68, Nadu Street (Opp. Sri Kapaleeswarar Temple), Mylapore, Chennai - 4.
Tel : 2495 9302 Fax : 044 - 5206 6525 E-mail : Sivasiva@vsnl.net .



சனிபகவான் யந்திரம்

# பாலி க்ளினிக்

## - பெண்களுக்கான மருத்துவப் பகுதி

**இந்த வெயில் காலத்தில் என் மூன்று வயது மகன் வியர்க்குருவால் அவஸ்தைப்படுகிறான். வியர்க்குரு பௌடர் போட்டுப் பார்த்தும் பலனில்லை. என்ன செய்யலாம்?**

- க. ஜெயந்தி, போரூர்

**டாக்டர் ஜெயந்தி விஸ்வநாதன், குழந்தைநல மருத்துவர் :**

குழந்தைகளுக்கு எந்த ஸ்பெஷல் சோப்பையும் உபயோகிக்க வேண்டாம். வியர்க்குரு பௌடரும் தேவையில்லை. இதனால் மென்மையான சருமம் பாதிக்க வாய்ப்பு உண்டு. மெல்லிய பருத்தி உடைகளை அணிவிக்க வேண்டும். தினமும் இரண்டு மூன்று முறை குளிப்பாட்டவும். காலமைன் லோஷன் தடவலாம்.



**இன்னும் இரண்டு மாதங்களில் எனக்குத் திருமணம். கணவன் வீட்டுக்காரர்களிடம் எப்படி நடந்து கொள்வது என்பது புரியவில்லை. சில தோழிகள் "முதலில் கொஞ்சம் மாதங்களுக்கு அவர்கள் சொல்லும் எல்லாவற்றுக்கும் ஒத்துப் போய்விடு. நல்ல பெயர் கிடைத்ததும் அப்புறம் நீ சொல்வதை எல்லாம் அவர்கள் கேட்பார்கள்" என்கிறார்கள். வேறு ஒரு தோழியோ "அப்படி நீ இருந்தால் உன்னை அடிமை மாதிரி நடத்தத் தொடங்கிவிடுவார்கள். முதலிலிருந்தே காம்ப்ரமைஸ் செய்து கொள்ளாமல் இருந்துவிடு" என்கிறாள். எது சரியான அணுகுமுறை?**

- அனுரேகா, நாகப்பட்டினம்

**டாக்டர் ஜெயந்தினி, மனநல மருத்துவர் :**

புதிய சூழல் என்றால் வித்தியாசமாகத்தான் இருக்கும். அவர்கள் பழக்கங்களுக்கும் உன் பிறந்த வீட்டு பழக்கங்களுக்கும் வேறுபாடு இருக்கும். புகுந்த வீட்டினரின் பழக்கவழக்கங்களைக் குறை சொல்லவேண்டாம். நீ செல்லமாக வளர்ந்திருக்கலாம். உனக்கு அதிக சலுகைகளை உன் பெற்றோர் கொடுத்திருக்கலாம். ஒரே மாடு பூட்டிய வண்டி என்றால் அது தன் போக்கில் செல்லலாம். ஆனால் கல்யாணம் என்பது இரட்டை மாட்டுவண்டி. எனவே கணவரின் போக்கும் உன் போக்கும் அனுசரித்துப் போகும் வரை முரண்டு பிடிக்காமல் இரு. ஆனால் அதற்காக உன் கொள்கைகளையோ அடிப்படைத் தன்மைகளையோ மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதில்லை. முட்டை சாப்பிட்டுப் பழக்கமில்லாத உன்னை முட்டை சாப்பிட வேண்டும் என்று கூறினாலோ, பிறந்த வீட்டிலிருந்து பணமோ நகையோ வாங்கிக் கொண்டு வரச் சொன்

# ஒத்துப்

னாலோ நீ மறுத்துவிடு. ஆனால் காலையில் கொஞ்சம் சீக்கிரம் எழுந்திருக்க வேண்டும், ரசத்தில் உப்பு கொஞ்சம் குறைவாக இருக்க வேண்டும் என்றெல்

லாம் கூறினால் நீ விட்டுக் கொடுக் கலாம். என் சொந்த மற்றும் மருத்துவ அனுபவத்தில் ஒன்றைச் சொல்வேன். கல்யாணம் ஆன முதல் நான்கு வருடங்களில் பெரிய பிரச்னைகளாகத் தோன்றும் விஷயங்கள் எல்லாம் அதற்கு பிறகு ஒரு பிரச்னையாகவே தோன்றாது.



**பளிச்சிடும் முகம் பெறுவதற்கு ஒரு வழி சொல்லுங்களேன்.**

**- கே.செல்வி, ஓசூர்**

**எம்.ஹசீனா சையத், ஆயுர்வேத அழகுக்கலை நிபுணர் :**

'காரட் ஃபேஸ்பாக்'கை நீங்கள் வீட்டிலேயே தயாரிக்கலாம். இது முகத்துக்குப் பொலிவு தருவதோடு கருமை நிறத்தையும் குறைக்கும். 50 கிராம் காரட், 50 கிராம் முள்ளங்கி ஆகியவற்றை 25 மி.லி. பால்விட்டு அரைத்துக் கொள்ளுங்கள். இதில் இரண்டு துளி தேனை விட்டு பசை போல கலக்குங்கள். முகத்தை சுத்தமாகக் கழுவியபின் இந்தக் கலவையை முகத்தில் தடவிக் கொண்டு பதினைந்து நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரினால் முகத்தைக் கழுவ, பளிச்சிடும்.

**இப்போது நான் இரண்டாம் முறை கர்ப்பமாகியிருக்கிறேன். முதல் குழந்தைக்கு அதிக நாட்கள் பால் கொடுக்க முடியவில்லை. போதிய அளவு சுரக்க**

# போனால் தப்பா?

**வில்லை. இரண்டாவது குழந்தைக்கும் இந்த நிலை நேராமல் இருக்க நான் இப்போதிலிருந்தே ஏதாவது செய்ய வேண்டுமா?**

**- பத்மா, திருவண்ணாமலை**

**டாக்டர் அனிதா பார்த்தசாரதி, மகப்பேறு மருத்துவர் :**

'பச்சை உடம்புக்காரி' என்று பத்திய உணவு கொடுப்பதுடன் பிரசவமான கொஞ்ச காலத்துக்கு தண்ணீர் கொடுக்காமல் இருப்பது நம்மிடையே இருக்கும் வழக்கம். இது தவறு. பிரசவமான பிறகு புரதச் சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்ளுங்கள். சுண்டல், அவித்த முட்டை ஆகியவற்றில் புரதச் சத்து நிறைய உண்டு. தண்ணீரும் நிறையக் குடிக்கலாம். இதனால் பால் சுரப்பது அதிகமாகும். மற்றபடி நீங்கள் இதற்காகக் கவலைப்பட வேண்டாம். பொதுவாகக் குழந்தைக்கு வேண்டுமளவுக்குப் பால் சுரக்கும். இது இயற்கையின் நியதி. ●

# சின்னான் செய்திகள்



"இதனால் சகல எம்.பி.க்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால் லோக் சபா வில் இன்னிக்கு 'டாக்' போடப் போறோம். எல்லோரும் ஷோக்கா ஒரு 'வாக்' வந்துட்டுப் போங்க''ன்னு தண்டோரா இல்ல... எஸ்.எம்.எஸ். அனுப்ப ஒரு புதுத்திட்டம் போட்டிருக்காங்களாம். ஏன்? அதாம்பா, எம்.பி.க்களை நம்பி சபை நடத்த முடியலை யாம். யாரும் ஒழுங்கா வர்றதில்லையாம். இப்போ எம்.பி.க்களோட செல் எண்களை 'கொள்முதல்' பண்ணிக்கிட்டு இருக்காங் களாம். எம்.பி. தம்பி களா! உங்க செல் எண்ணை கொடுங்க! பினாமி நம்பரை கொடுத்துடாதீங்க! எஸ்.எம்.எஸ். அனுப்புற வுக பாத்து அனுப்புங்க. வேற யாராவது தீவிர வாதிக்கு அனுப்பிடா தீங்க. ஆமா, 'வரமாட் டேன் போ!'ன்னு அத் தனை எம்.பி.களும் பதில் அனுப்புனா என்ன பண்ணுவீக?



'சிவப்பை பாத்தா மக்கள் பயப்படுறாக. அதான் பச்சைக்கலரு அடிக்கிறோம்'னு ராமநாதபுர மாவட்ட போலீஸ்காரங்க சொல் றாங்க. தமிழ்நாட்டுல எல்லா ஸ்டேஷனும் சிவப்பா இருக்குறப்போ, இங்க மட்டும் பச்சையான்னு கேள்விவர, இப்ப என்ன செய்யன்னு கவ(ர்)வரத்தில இருக்காங்களாம் போலீஸ் தரப்பு. அப்புறம், கறுப்புப் பூனைப்படைல இப்ப பெண்களும் வந்துட்டாங்களாம். முதல்ல மாயாவதிக்கு பாதுகாப்புத் தர அவங்களை நியமிச்சிருக் காங்களாம். விரைவில அம்மாவுக்கும் நியமிக்கப்படலாம். ஆமா, ப்ளாக் கேட்ஸ், கறுப்பு டிரெஸ்தானே போடணும், அம்மா கிட்ட வர்றப்போ பச்சை டிரெஸ்னு ரூல்ஸை மாத்த முடியுமா?

'கண்ட' 'கண்ட' நாய்களுக்கெல்லாம் கல்யாணம் நடக்குது. அதாவது பெண் நாயை கண்ட ஆண் நாய் காதல் கொண்டு, முறைப்படி குரைச்சு முடிச்சு... ச்சீ, பேசி முடிச்சு, தடபுடலா விருந்தோட கல்யாணம் நடத்தியிருக்காங்க டெல்லி பக்கத்துல ஒரு ஊர்ல. ஆனா சென்னை அரும்பாக் கத்துல "மப்புல வந்தது தப்பு. வண்டியைக் கிளப்பு''ன்னு கல் யாண மேடைக்கு, போதையில வந்த மாப்பிள்ளையை கல்யாணம் பண்ண மறுத்துட்டாங்க. 'தில்' ராத் பானு. பானு, உன்னை மாதிரி பொண்ணுங்கதான் வேணும். டாஸ் மாக்கை பீஸ் ஆக் கின நீ, கண்டிப்பா வாழ்க்கையில பாஸ் மார்க் வாங்குவ! ஆல் தி பெஸ்ட்!

கோக்குக்கு விக்ரம். ஃபேண்டாக்கு த்ரிஷா, லக்மேக்கு டயானா ஹைடன், ஏதோ ஒரு கடியாரத் துக்கு சுஷ்மிதா சென், இப்படி ஆளாளுக்கு ஒரு பொருளோட அம்பாஸிடரா அலைய றாங்க! அட்லீஸ்ட் என்னை 'அம்பாஸிடர்' காருக்காவது 'அம்பாஸிடர்' ஆக்கக் கூடாதா? என்ன நாஞ் சொல்றது!

# வட்டமேஜை




✉ உழைக்காமல் இடைக்கும் பணம் ஒருவனை சோம்பேறியாக்குகிறது என்பதை 'குப்பை' சிறுகதை உணர்த்தியது.
பொழிச்சலூர், நாகை சந்திரா

✉ கனவுக் கண்ணன் - சூர்யா? கனவுக் கன்னி - த்ரிஷாவா? ஜோ... பாவம்!
சென்னை, கோபி

✉ தோழர் காரத் சென்னையில் படித்தவர் என்பதை பல இதழ்கள் வெளியிட்டிருந்தன. ஆனால் தோழர் வி.பி. சிந்தனுடன் உள்ள தொடர்பு பற்றி குறிப்பிட்டது கல்கி மட்டுமே. கட்சிப் பணிக்கு தடை ஏதும் வந்துவிடக்கூடாது என்பதற்காக குழந்தை பெற்றுக் கொள்வதைத் தவிர்த்து விட்டனர் என்ற செய்தியையும் 'கல்கி' மூலமே அறிந்தேன்.
மதுரை, சி.இரமேசு

✉ ஓவியர் ஸ்யாமின் 'காதல் சிறகுகள்' மயிலிறகாய் வருடியது. அழகான ஆட்டோ கிராப்!
ஈரோடு, க.நர்.இராஜேஸ்வரன்

✉ தலைவரின் 'சந்திரமுகி' பற்றிய கல்கியின் கருத்தை சஸ்பென்ஸாக்கிவிட்டீர்களே! (ஆவரேஜ் மார்க் போட்டிருக்கிறோம் என்பீர்களே!)
மணக்காடு, சி.தெ.ரஜினி அருன்

## அதிலே கூடவா ஆங்கிலம்?

✉ "மாறுபட்ட கேரக்டர்களை என் சொந்தத் தயாரிப்பில்தான் செய்வேன்" என்று நடிகர் விஜய் கூறியிருந்தது 'கில்லி'யான பதில்.
அரூர், மு.மதிவாணன்


✉ மொழிப் போர் 'சர்ச்சை சர்வே ரிசல்ட்'டில் பிரசுரத்துக்குத் தேர்வாக இரண்டு ஆதரவுக் கடிதங்களில் 'ஸ்லோ பாய்ஸன்!' என்றும், 'ஸாரி, அவசரம்!' என்றும் ஆங்கிலத்தில் எழுதி இருப்பது சிரிப்பாக இருந்தது.
சென்னை, எஸ்.எஸ்.நாராயணன்

✉ 'சர்ப்ரைஸுக்கு நாங்க தயார். நீங்க?'ன்னு குறிப்பிட்டு எங்களோட ஆர்வத் துடிப்பை ஈஃபில் டவர் ரேஞ்சுக்கு உயர்த்தி விட்டுட்டீங்களே!
நெய்வேலி, எஸ்.கண்ணன்

✉ கங்குலி 'பத்துக்குள்ள நம்பர் ஒண்ணு சொல்லு' குபீர்ச் சிரிப்பு.
சென்னை, அரிமா மு.முரளீதரன்

### வாரம் ஒரு வாசகர்

'நந்தனாவும் நாயர் டீயும்' குடிக்கக் குடிக்க... சாரி, படிக்கப் படிக்க... ரொம்ப ரொம்ப டேஸ்ட்!
மதுரை, பி.ராஜசேகரன்



# நடக்குமென்பார்;

**4.5.2005 முதல் 10.5.2005 வரை**



**மேஷம்:** பொருளாதாரம் மேன்மை பெறும். செல்வாக்கு, கௌரவம் ஏற்படும். நான்கு சக்கர வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். வெற்றி கிட்டும். உடல் நிலையில் கவனம் அவசியம். பயம் நீங்கும். சுற்றத்தார் வருகை ஏற்படும். தனலாபம் உண்டு. அலைச்சல் இருக்கும். குரு வழிபாடு செய்தல் நலம்.

**ரிஷபம்:** ரிஷப ராசி நேயர்களுக்கு போஜனசுகம், சயன சுகம் என்று சுகமான வாரம். கை பொருள்கள் மீது கவனம் தேவை. தூரதேச சஞ்சாரம் ஏற்படும். தனலாபம் ஏற்படும். புத்திரர்களால் நன்மை ஏற்படும். செல்வாக்கு ஏற்படும். சத்ரு பயம் நீங்கும். சிலருக்கு இட மாற்றம் ஏற்படும். பந்துகளால் ஆதாயம் கிடைக்கும். விருந்து, கேளிக்கை என்று உற்சாகமான வாரம்.

**மிதுனம்:** சிலருக்கு வெளியூர் பிரயாணம் ஏற்படும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வாக்கு வன்மை சேரும். வயிற்று உபாதை நீங்கும். நெருப்பு சம்பந்தமான விஷயங்களில் எச்சரிக்கை தேவை. துஷ்டர் சேர்க்கை விலக்கவும். தொழில் துவங்குவதில் உள்ள சிக்கல் தீரும். எதிலும் நிதானமாகச் செயல்படுவது நல்லது.

**கடகம்:** கொஞ்சம் சிரமமான வாரம். தீவிரமான முயற்சிக்குப் பின்னரே எதிலும் வெற்றி கிட்டும். சத்ருக்களை வெல்லலாம். தனலாபம் கிடைக்கும். மனைவி மக்களால் சுகம், மகிழ்ச்சி ஏற்படும். சனி, குரு வழிபாடு தேவை.

**சிம்மம்:** மகிழ்ச்சியும், கஷ்டமும் சமமான வாரம். சில ஆபத்துகள் ஏற்பட்டு விலகும். தனலாபம் கிடைக்கும். அலைச்சல் இருக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை. பெண்களால் கலகம் வரும். சிலருக்கு வேறு இடம் மாறும் சூழ்நிலை வரும். இதுவரை இருந்த தடங்கல், எதிர்ப்புகள் விலகும். ராகு, கேது வழிபாடு செய்து வரவும்.

**கன்னி:** ஆரோக்கியத்தில் கவனமாக



# நடக்கும்!



இருக்க வேண்டிய வாரம். சிலருக்கு பொன், பொருள் சேரும். சத்ரு பயம் நீங்கும். கைப் பொருள் மீது கவனம் தேவை. பெண்களால் ஆதாயம் கிட்டும். குழந்தைகளால் சுகம் ஏற்படும். எதிலும் வெற்றி கிட்டும். ஆடை ஆபரணம் சேரும். மகிழ்ச்சி ஏற்படும். கலகம் ஏற்பட்டு விலகும். குரு, சனி வழிபாடு தேவை.

**துலாம்:** பேச்சிலும், செயலிலும் நிதானமாக இருக்க வேண்டிய வாரம். காரியம் தாமதமாகும். புத்திர வழியில் மனக்குழப்பம் ஏற்படும். குடும்பத்தில் கலகம் ஏற்படும். தூர தேசம் போதல், தன நஷ்டம், இட மாற்றம் ஏற்படும். சிலருக்கு வாழ்க்கை வசதிகள் பெருகும். சிலருக்கு உஷ்ணம் வயிறு சம்பந்தமான கோளாறுகள் ஏற்படும் சிரமங்களுக்குப்பின் வெற்றி கிட்டும்.

**விருச்சிகம்:** தனலாபம், ஆரோக்கியம் நன்றாக இருக்கும். அவநம்பிக்கை ஏற்படும். ஜல பயம் இருக்கும். பதவி உயர்வு ஏற்படும். புதியவர்களிடம் எச்சரிக்கையாகப் பழகவும். பெண் மூலம் தொல்லைகள் ஏற்படும். வேறு தேசம் செல்ல நேரும். வெற்றி கிட்டும். சனி வழிபாடு நல்லது.

**தனுசு:** குடும்ப ஆரோக்கியத்தில் கவனமாயிருக்க வேண்டிய வாரம். வஸ்திர லாபம் கிடைக்கும். எதிலும் வெற்றி கிட்டும். முருகன் அருள் உண்டு. தனலாபம் கிடைக்கும். பதவி மாற்றம் ஏற்படும். சிலருக்கு தாயின் பிரிவு ஏற்படும். குரு, சனி, ராகு, கேது வழிபாடு செய்யவும்.

**மகரம்:** குழப்பமான வாரம். காரியங்களில் தாமதமும், தடையும் ஏற்பட்டு சஞ்சலத்தைத் தரும். தெய்வ பலம் கூட்டிக் கொள்வது நல்லது. பயணங்களில் எச்சரிக்கை தேவை. கைப் பொருளின் மீது கவனம் தேவை. நெருப்பு தொடர்பான விஷயங்களை எச்சரிக்கையுடன் கையாளவும்.



தஞ்சை பரத்வாஜ்

கணவன் மனைவி விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. சிலருக்கு வாகனம் வாங்கும் யோகம் உண்டு. வார இறுதியில் நிலைமை மாறி நல்ல பலன்கள் கிடைக்கும். எதிலும் நிதானமான போக்கு மிக அவசியம்.

**கும்பம்:** புதிய பதவி கிடைக்கும். தனலாபம் கிடைக்கும். சத்ருக்களை வெல்லுவர். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். சிலர் இடமாற்றம் பெறுவார்கள். செல்வாக்கு, சொல்வாக்கு கூடும். சுகமான வாரம்.

---

## பரத்வாஜ் பதில்கள்

❖ **இதுவரை துன்பங்களையே அனுபவிக்கிறேன். திருமணமாகவில்லை. என் எதிர்காலம், திருமணம் பற்றிக் கூறவும்.**

**- ஆர். முரளி, சாலிகிராமம்**

உங்களுக்கு 35 வயதில் திருமணம் நடக்கும். வெளியூரில், லட்சுமி என்ற வார்த்தையில் முடியும் பெயர் கொண்ட, மேற்கு பார்த்த வீட்டில் பிறந்த பெண் அமைவாள். ரயில் மார்க்கமும், கோயிலும் வீட்டருகே இருக்கும். நல்ல எதிர்காலம் உண்டு.

❖ **என் மகள் மேற்படிப்பு முடிவடைகிறது. வேலை தேடுவது அல்லது திருமணம் செய்வது, எது நல்லது?**

**- என்.மோகன் ராஜ், ஊட்டி**

செப்டெம்பர் 2005க்குப்பின் திருமணக் காலம் ஆரம்பிப்பதால் திருமணம் செய்வது நல்லது. படித்த, உத்தியோகத்தில் உள்ள நல்ல வரன் அமையும். உறவில் அமையாது. வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டு.

❖ **மூலதனம் இல்லாமல் வியாபாரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. என் எதிர்காலம் எப்படி இருக்கும்?**

**- சுபகிரிதரன், பொள்ளாச்சி**

7.5.2005 முதல் குரு தசை சனிபுத்தி தொடங்கும் காலம். இனி மூலதனம் கிடைக்கும். நல்ல வளர்சசி ஏற்படும். தொழில் செய்து முன்னுக்கு வருவீர்கள். குரு வழிபாடு நன்மை தரும்.

❖ **திருமணமாகி 6 ஆண்டுகளாகி விட்டன. இருமுறை கர்ப்பம் கலைந்து விட்டது. இனி குழந்தைப் பேறு உண்டா? பரிகாரம் என்ன செய்ய வேண்டும்?**

**- ஆர். ராஜேஸ்வரி ராதாகிருஷ்ணன், கடலூர்**

26.6.2005க்குப்பின் நல்ல காலம். 2006ல் அஸ்வினி, மகம், மூலம் - நட்சத்திரத்தில் ஆண் குழந்தை பிறக்கும். பரிகாரம் தேவையில்லை.

❖ **எங்கள் ஆயுள் பாவம் எப்படி இருக்கிறது. சொந்தத் தொழில் செய்யலாமா?**

**- நீலாம்பாள் வெங்கிட்டராமன், கோபால சமுத்திரம்**

இருவருக்கும் தீர்க்கமான ஆயுள் உள்ளது. ராஜகோபால சுவாமி வழிபடுதல் நல்லது. தொழில் எதுவும் செய்ய வேண்டாம். சும்மா இருத்தலே சுகம்.

❖ **நம்பிக்கையில் கொடுத்த பணம்**



**மீனம்:** எடுத்த காரியம் வெற்றி கிட்டும். கணவன் மனைவிக்குள் விட்டு கொடுத்து போகவும். சிலருக்கு வீடு மாற்றம் உண்டாகும். கலைஞர்கள், விளையாட்டுத் துறையை சேர்ந்தவர்களுக்கு நல்ல காலம். தொழில் செய் பவர்கள் உஷார். மாணவ மாணவிகள் படிப்பில் கவனத்துடன் இருப்பது நல்லது. குடும்பத்தைப் பிரிந்து சிலர் வெளியூர் செல்ல நேரிடும். தாயின் உடல்நிலை கவனம் தேவை. வண்டி வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. குரு, சனி வழிபாடு நல்லது.

---

***திரும்பக் கிடைக்குமா? தொழில் வளர்ச்சி பெறுமா? ஆயில்யத்தில் பிறந்த என் மகள் திருமணம் நடைபெறுமா?***

**- எஸ்.ஆர்.செந்தில் குமார், வெள்ள கோவில்**

26.8.2005க்குப் பின் பணம் வந்து சேரும். கடை வேறு இடம் மாறி, வளர்ச்சி பெறும். 2006ல் மகளின் திருமணம் நடக்கும். வாகன யோகமில்லை. அதிர்ஷ்டச்சீட்டு போன்றவற்றை நம்ப வேண்டாம்.

❖ ***என் மகன், மகள் திருமணம் எப்போது நடக்கும்?***

**- பெயர் வெளியிட விரும்பாத வாசகர், எஸ்.பி.ஐ, பெங்களூர் - 19**

மகளுக்கு 2005க்குள் மேற்கு / தெற்கு திசையிலிருந்து, ஒரே உடன் பிறந்தவருள்ள, படித்து வெளி நாட்டில் வேலை செய்யும் வரன் அமையும். உறவில் அமையாது. பையனுக்கு பிறந்த ஊரிலிருந்தே, உறவு இல்லாத படித்த வேலை பார்க்கும் பெண் 29வது வயதில் அமைவாள். புதன் / ஞாயிறு கிழமையில் திருமணம் நடக்கும்.

❖ ***என் குடும்பம் சூழ்நிலை காரணமாகப் பிரிந்திருக்கிறது. என் மகன் / மகளைப் பார்க்கவும், குடும்பம் சேர்வதும் நடக்குமா? என் வேலையில் மாற்றம் தேடுகிறேன். கிடைக்குமா?***

**- ஆர்.வரதராஜன், பெங்களூர் - 10**

1998லிருந்து கணவன் - மனைவி மனக்கசப்பு செப்டெம்பர் 2005 வரை இருக்கும். பிறகு குடும்பம் ஒன்று சேரும். இருவரும் ஒருவருக்கொருவர் அனுசரணையாக, மற்றவர் தலையீடு இல்லாமல் இருப்பது குடும்பத்தின் / குழந்தைகளின் நல்ல எதிர்காலத்துக்கு உத்தரவாதம். நல்ல எதிர்காலம் நிச்சயம் உண்டு. இடமாற்றமும், கூடுதல் வருமானமும் உள்ள வேலை விரைவில் கிடைக்கும்.

❖ ***38 வயது ஆகிறது. என்ன தொழில் செய்யலாம்? திருமணம் எப்போது நடக்கும்?***

**- வி.வெங்கட்ராமன், திருச்சி-1**

உங்களுக்குத் திருமணம் ஆன பிறகுதான் யோக காலம் ஏற்படும். மனைவி பெயரில் தொழில் செய்யவும். பணத்தை வைத்து சம்பாதிப்பதைவிட, புத்தியை மூலதனமாக்கிச் செய்வது ஏற்றது. வெளியூரில் பிறந்த பெண் அமைவாள். 2012க்குள் நல்ல நிலைக்கு வருவீர்கள். புத பகவானை வழிபடுதல் நல்லது.



# ரேஸ் ரோஸ்!



"மும்பைக்கரை ஒட்டிய அரபிக்கடலில் தோன்றி சென்னையை ஒட்டிய வங்கக் கடலில் மையம் கொண்டிருக்கும் அழகுப்புயல் நான்!" என்று அறிமுகப்படுத்திக் கொண்டார், 'அறிந்தும் அறியாமலும்' படத்தின் அழகு ரோஜா சமிக்ஷா. எல் அண்ட் டி தொடங்கி ஹிந்துஸ்தான் லீவர் வரை பெரிய நிறுவனங்களின் விளம்பரங்களில் நடித்து மும்பையில் வாகை சூடிய கையோடு, தெலுங்குதேசம் வந்துவிட்டாராம். அங்கே '143' என்ற சூப்பர் டூப்பர் ஹிட் படத்தில் கதாநாயகியாக நடித்து முடித்து நிமிர்ந்தவரை 'அறிந்தும் அறியாமலும்' படத்துக்காக அப்படியே அள்ளி வந்துவிட்டார் படத்தின் இயக்குனர் விஷ்ணுவர்த்தன்.

"மும்பை நடிகைகள் என்றால் கவர்ச்சிகாட்டத்தான் லாயக்கு என்ற எண்ணத்தை நான் உடைத்து நொறுக்கியிருக்கிறேன். ஏனென்றால் நான் ஒரு புயல்" என்று சொல்லும் சமிக்ஷா, ஒரு உமன் பைக் ரேஸரும் கூட.

அஜித் மாதிரி படப்பிடிப்பை பாதியில் விட்டுவிட்டு ரேஸுக்குப் போகாமலிருந்தால் சரி!

- ஸ்ரீ





# வாசமே... வாசமே!

"சேலை கட்டும் பெண்ணுக்கொரு வாசமுண்டு" என்று ஒரு பாடலுண்டு. வாசமுள்ள பெண்ணே நறுமணத்தை தேடித் தேடிக் கண்டுபிடித்தால் அவளுக்கென்ன பெயர்?

அகல்யா வேமுல்கர் என்ற பெங்களூர் இளம் பெண்ணின் முழு நேரத் தொழிலே முகர்வதுதான். எதை எதனுடன் கலந்தால் நல்ல நறுமணம் வரும் என்று ஆராய்ச்சி செய்வதுதான். பர்ஃப்யூமர் அகல்யா இதற்கான சிறப்பு கோர்ஸை ஃபிரான்ஸில் படித்துவிட்டு வந்திருக்கிறார்.

"உலகிலேயே மிக அதிகமாக சென்ட் உபயோகிப்பது பிரெஞ்சு நாட்டுக்காரர்கள்தான். ஒவ்வொரு வருடமும் நூறு புது வகை சென்ட்கள் அங்கு மார்க்கெட்டில் அறிமுகமாகும். மிக அக்கறையுடன், கண் கவர் பாக்கெட்டுகளில், நவீன டிசைன் பாட்டில்களில் வரும் சென்ட்டை வாங்க அங்கே ஏக போட்டி! பொதுவாகவே நம் பெண்கள் மல்லி, முல்லை, ஜாதி என பூ வைத்து அழகுபடுத்திக் கொள்கிறார்கள். ஆனால் அதையே சென்ட்டாகப் பயன்படுத்தத் தெரியவில்லை. அவர்களிடம் ஒரு விழிப்புணர்ச்சியைக் கொண்டு வருவதுதான் என் வேலை" என்கிறார் அகல்யா.

நறுமணம், வாசம், சென்ட் என்று அகல்யா பேசுவதில் வியப்பேதுமில்லை. அகர்பத்தி தயாரிப்பில் பல்லாண்டுக் காலமாக இருக்கும், நாட்டின் முன்னோடி நிறுவனங்களில் ஒன்றான 'பத்மினி புரொடக்ட்ஸ்' வீட்டு செல்லப் பெண். சிறு வயதிலிருந்தே வாசனைகளை முகர்ந்து பார்த்ததன் விளைவு.


"நான் சென்னை ஸ்டெல்லா மாரீஸ் கல்லூரியில் பி.எஸ்ஸி. ரசாயனம் எடுத்துப் படித்தேன். கல்லூரி ப்ரின்ஸிபாலை என்னால் மறக்கவே முடியாது. பல விதங்களிலும் ஆலோசனைகள் சொல்வார். ஃபுட் சயின்ஸ் கோர்ஸும் கூடவே படிக்கச் சொன்னார். உணவிலும் வாசனை, மணம் உண்டே, அதான். பெண்களுக்கெனவே பல கோர்ஸ்கள் அந்தக் கல்லூரியில் மாத்திரமே உண்டு என்று கூடச் சொல்வேன். பிறகு ஃபிரான்ஸுக்குப் போய் இரண்டு வருட கோர்ஸ் படித்தேன். பர்ஃப்யூம் எனக்குப் பிடித்த சப்ஜக்ட். நிறையத் தெரிந்து கொண்டேன். நாச்சுரல், சின்தடிக், மலர்களிலிருந்து எடுக்கப்படும் வாசனை திரவியங்கள், மூலிகைப் பொருள்

''எக்ஸ்பயரிடேட் ஆயிட்ட தூக்க மாத்திரையை கவனிக்காமல் போட்டுக்கிட்டேன்''

''ஐயையோ! அப்புறம்?''

''கனவுல ஜோதிகாவுக்கு பதிலா ஜோதிலட்சுமி வந்தாங்க!''

- என்.கே. பாலசுப்ரமணியன்



கள், உலகின் எந்தப் பகுதியில் என்ன பூ, எந்த சீஸனில் கிடைக்கும், ப்ளென்ட் (கலவை) என்றால் என்ன என்று இரண்டு வருடம் என் மூக்குக்கு செம வேலை.

இங்கு வந்த பிறகு எங்களுடைய குடும்ப பிஸினஸான அகர்பத்தித் தொழிலில், புதுப் புது நறுமணங்களை அறிமுகப்படுத்த என்னையும் ஊக்குவித்தனர். மணம் என்றால் சென்ட் மாத்திரமே அல்ல. நாம் அன்றாடம் உபயோகிக்கும் சோப், டால்கம் பவுடர், லோஷன், க்ரீம்... என எதிலும் ஒரு மணம் இருக்குமே. நல்ல பர்ஃப்யூமை செலக்ட் செய்து தனக்கும் சரி, பிரியப்பட்டவர்களுக்கும் சரி, பரிசாக சென்ட்டைத் தரலாமே...'' என்கிறார் - அகல்யா.

**வெ**கு சீக்கிரமே அகல்யாவின் தயாரிப்பில் 'ஆலோ வெரா' (சோற்றுக் கற்றாழை) சோப் மார்க்கெட்டில் வரவிருக்கிறது. ''இது ரொம்ப ஸ்பெஷல் சோப். நறுமணம் ஊரைத் தாக்கும். பட்டு சருமத்துக்கு காரண்டி. பொதுவாக மற்றவர்கள் தாங்கள் தயாரிக்கும் பொருள்களில் 'ஆலோவெரா' என்று விளம்பரப்படுத்தி விட்டு, மிகக் குறைந்த அளவே சேர்த்திருப்பார்கள். ஆனால் நான் என் சோப்பில் ஒரு முழு ஆலோவெராவையே சேர்த்திருக்கிறேன். மேலும் வெகு விரைவில் ரோஸ் பர்ஃப்யூமும் வர இருக்கிறது. நாலு மணி நேரத்துக்கு நீங்கள் 'கமகம' தான்'' என்கிறார் மணக்க மணக்க.

அகல்யாவுக்கு தன் பாட்டி ருக்மிணி என்றால் கொள்ளை ப்ரியம். ''என் 70 வயது பாட்டி, கடுமையான உழைப்பாளி. இன்றும் எங்கள் அகர்பத்தித் தொழிற்சாலையில் பாட்டி வேலை செய்வார். நம் நாட்டில் முதன் முதலாக தொழில் வளாகத்தில் க்ரெச் ஆரம்பித்த பெருமை அநேகமாக என் பாட்டியைத் தான் சேரும். ஆண் தொழிலாளர்களைவிட பெண்கள் தான் அநேகம்! இன்று பத்மினி தயாரிப்புகள் வெளிநாடுகளுக்கு மிகப் பெரிய அளவில் ஏற்றுமதி ஆகின்றன. பாட்டியின் சுறுசுறுப்பு எனக்கும் பத்திக்கிச்சு'' என்கிறார்.

**கா**லை, மாலை என வேளைக்குத் தகுந்தாற்போல், மூடுக்குத் தகுந்தாற்போல் போட்டுக் கொள்ள என சென்ட் இருக்கிறதாம். அகல்யாவிடம் பர்ஃப்யூம் பாட்டில்களே சுமார் ஐந்நூறுக்கு மேல் இருக்கின்றன. முதன் முதலாக பர்ஃப்யூமிற்கென மியூசியமே அமைக்க வேண்டுமென்பது அகல்யாவின் ஆசை! அங்கு வரும் விஸிட்டர்கள் ஒவ்வொரு மணம், அதன் பின்னணி என சகலத்தையும் தெரிந்து கொள்ளலாமாம்!

அகல்யா தன் சென்னைத் தோழி ஊர்னா பட்டாசார்யாவுடன் சேர்ந்து, ஆர்ட் கம் சென்ட் ஷோ ஒன்றை சென்னை மற்றும் பெங்களூரில் நடத்தவிருக்கிறார். ஊர்னா பெயின்ட் செய்ய, அதை இன்ஸ்பிரேஷனாக வைத்து அகல்யா புது மணங்களை சென்ட்டில் கொண்டு வரவிருக்கிறார்.

- லதா சேகர்

# வித்தியாசமான புத்தகம்

"இம்மண்ணில் மறைக்கப்பட்ட
ஓர் மாபெரும் பொக்கிஷம்"

## பிறந்த ஜாதகத்தையே சரி செய்யும் கலை

* நம்முடைய ஜாதகம் யோகமாக இல்லையே என்பவர்கள் இந்த பொக்கிஷத்தினை ஒரு முறை படியுங்கள். நீங்கள் அசந்து போவீர்கள்! இந்த நூலை படித்து முடித்ததும் உங்கள் வாழ்க்கையை பற்றி இதுவரை நீங்கள் கொண்டிருந்த எண்ணத்தை மாற்றிக் கொள்வீர்கள்.
* இது நடைமுறை சாத்தியமா என்பவர்களுக்காக இந்த கலையை பயன்படுத்தி பலன்பெற்றவர்களின் அனுபவத்தை இந்நூலில் இணைத்துள்ளோம்.
* பல்லாயிரக்கணக்கானவர்களின் வாழ்க்கைய மாற்றிமையத்த ஒரு உன்னத கலை.
* இந்த நூலை படிக்க வாய்ப்பு கிடைத்தால் அது நீங்கள் செய்த பூர்வ புண்ணியம்.

புத்தக விலை
ரூ 50/- மட்டுமே

தபாலில் பெற ரூ. 60/- அனுப்பவும்
**(M.O. (or) V.P.P.)**

## A.E. RAAJAMANICKAM

(கேரளீய ஜோதிடம்) BBM., DMM., DHA.,

138, RANA NAGAR, BHAVANI (Post), ERODE - 638 301.

Ph: 04256-230901 Cell: 98427-73737, 98652-94721

E-mail : astrobhavani@yahoo.com Website : www.oshaani.com

"பிறந்த ஜாதகத்தையே சரி செய்யும் கலை" - இந்நிகழ்ச்சி பற்றி விஜய் TV-யில் ஒவ்வொரு வாரமும் செவ்வாய்கிழமை இரவு 11-30 மணிக்கு காணுங்கள்.

## பளீர் இளமைத் தொடர் - 18

# உள்ளம் துறந்தவன்

**நா**கரத்தினம் தீர்மானித்துவிட்டார். தன்னிடமும் தன் மனைவியிடமுமிருந்த இன்சாஃப் பங்குகளை அதன் இன்றைய மதிப்பில் விற்றுவிட்டு, ஆப்பர்ச்சூன் சர்வீஸஸ் என்ற ஒரு புதிய கம்பெனி துவங்கக் காத்திருந்தார். மெல்ல சில முக்கியமான ஸ்டாக் புரோக்கர்களிடம் அந்த வதந்தியைப் பரப்பினார்.

"மேத்தா, நாகரத்தினம் பேசறேன்"

"நாகு சார், ரொம்ப நாளாச்சி பேசி"

"உன்கிட்ட ஒரு விசயம் சொல்றேன். யார்கிட்டயும் சொல்ல மாட்டேன்னு சத்தியம் பண்ணிக்கொடு!"

"மேத்தா எப்பவாவது சத்தியம் தவறியிருக்கானா நாகு ஸார்?" என்றான். ஒரு நாளைக்கு நாலு சத்தியம் மீறக் கூடிய ஜகஜ்ஜாலப் புரட்டன், பங்குத் தரகன்.

"பெரியவர் எப்படி இருக்கார்?"

"அதைப் பற்றி பேசத்தான் ஷெராட்டன்ல சைனீஸ் ரூம். வந்துரு!"

மேத்தா இதைக் கேட்டதும் குர்மானி, நரேஷ், சுப்ரமண்யம், ஹரிஷ் போன்ற அனைவருக்கும் போன் செய்தான். இன்சாஃப் ஸ்டாக்கை விற்கத் தயாராக இருக்கச் சொன்னான். மும்பைக்கு நாலு கால் போட்டான்.

"மேத்தா, என்ன விஷயம்?"

"உள்ளுக்குள்ளருந்து ஒரு தகவல் வருது!"

"என்ன பெரிசு பூட்டுதா!"

"ஒண்ணும் சரியாத் தெரியலை. மாப்பிள்ளையை ராத்திரி டின்னர்ல சந்திக்கிறேன். எல்லா ட்ரான்ஸாக்ஷனும் பொத்தி வச்சுரு..."

இரவு மேத்தாவை சந்திப்பதற்கு முன், நாகரத்தினம் தன்னிடமும் தன் மனைவி பேரிலும் இருந்த பங்குகள் அனைத்தையும் விற்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டார்

அந்த ரெஸ்டாரண்டின் அரை இருட்டு மூலையில் மேத்தாவை சந்தித்து, "சத்தியமா யார்கிட்டயும் சொல்ல மாட்டியே!"

"என்ன நாகு ஸார்?"

"பெரியவர் இன்னும் ஒருவாரம் கூட தாங்க மாட்டார்!"

"இப்பவே ஸ்டாக் சரிஞ்சுக்கிட்டிருக்கு... இதோட சேர்த்து களுதை எல்லா ஐடி ஸ்டாக்கையும் இழுக்குது."

நாகரத்தினத்துக்கு மகிழ்ச்சியாக இருந்தது. "மேத்தா, இது எங்க குடும்பத்தின் பொறுப்பு. முடிஞ்ச வரைக்கும் விலையை ஸ்டெடி பண்றதுக்கு நாங்களே வாங்கறதா தீர்மானிச்சிருக்கோம். இல்லைன்னா அடிமாட்டு விலைக்குப் போயிரும்."



"ஆப்பர்ச்சூன் சர்வீஸஸ் வாங்கிக்கறதா சொல்லியிருக்கான். வர்ற விலைக்கு வித்துரு. தாமதமே வேண்டாம்" என்றார்.

மேத்தா போனதும் பார்கவாவுக்கு போன் செய்து புன்னகையுடன் பேசினார். "பார்க்கவா சாப், அடுத்த ஸி எஃப் ஓ நீங்கதான்... அடுத்த ஸி எம்டி?"

"போங்க ரொம்ப புகழாதீங்க!"

மறுநாள் காலை ஷேர் மார்க்கெட் திறந்த போது, இன்சாஃப் பங்குகள் எட்டாயிரம், ஒன்பதா யிரத்தில் இருந்தது சரிவடைந்து எண்ணூறு, அறு



நூறு என்று நாள் பூரா கவிழ 'செபி' நிறுவனம் இதனுடன் மற்ற பங்குகளும் சரிவதைக் கண்டு துணுக்குற்றது. வியா பாரத்தை நிறுத்த உத்தரவிட்டது.

மஞ்சரி இதைப் பற்றி ஏதும் கவலைப்படாமல் அழகேசனு டன் இன்சாஃப் வரவேற் பறையை அடுத்த சிறிய அறை யில், வட்டமேஜை மேல் அவன் கையைப் பற்றிக் கொண்டு தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டி ருந்தாள். "ஏய், ஏப்ரல் ஃபூல் பண்றியா?"

"இல்லை அழகி, அவங்க எல்லோருக்கும் சம்மதங்கறாங்க. ஒரே ஒரு கண்டிஷன்தான் போடறாங்க. எங்கிட்ட எங் கப்பா கம்பெனியுடைய ஸ்டாக் குங்க இருக்கு. அதையெல்லாம் மாத்திக் கொடுக்க கையெழுத் துப் போடு. சந்தோஷமா, பிர மாதமா கல்யாணம் செய்து கொடுக்கறோம்ங்கறாங்க. ஃப்ளாட்டு, உனக்கு வேலை, ஆளுக்கொரு கார்"

"போட்டுக் குடுத்துட்டியா?"

"கேட்டு சொல்றேன்னேன்."

"யார்கிட்ட?"

"உங்கிட்டதான். எனக்கு வேற யார் இருக்கா?"

"பாரு, இது உன் டிசிஷன். அதை என் மேல திணிக்காதே..."

"அப்படியில்லை. என் நிலைமைல இருந்தா நீ என்ன செய்வே?"

"கையெழுத்துப் போடமாட்டேன்."

"அவனுக்கு உன்மேல உண்மையான காதல் இருந்தா, கையெழுத்து போட்டுக் குடுத்துருன்னு தான் சொல்வான்னாங்க."

அழகேசன் அவளை ஒரு நிமிஷம் மௌன மாகப் பார்த்தான்.

"உண்மைக் காதலையும் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சை யும் கலக்காதே. எந்தக் கையெழுத்தா இருந்தாலும் எதுக்குப் போடறோம்னு முதல்ல தெரிஞ்சுக்க. உன் பேர்ல இருக்கற ஸ்டாக் மதிப்பு தெரியுமா?"

"தெரியாது. நிறைய்யங்கறாங்க."

"சுத்தம். உங்கிட்ட ஒரு ப்ளாங்க் செக்கைக் கொடுத்து கையெழுத்து போடச் சொல்றாப்பல அது. கொஞ்சம் இரு."

அடுத்திருந்த லவுஞ்சிலிருந்து எகனாமிக் டைம்ஸ் செய்தித்தாளை எடுத்து வந்தான். அதில் 'INSOF PLUNGES' என்று தலைப்புச் செய்தி பெரிய எழுத்தில் முதல் பக்கத்திலேயே இருந்தது.


"எட்டாயிரம் ரூபாய் மதிப்பிருந்த பங்குகள் மதியம் இரண்டரைக்குள் எண்ணூறுக்கு வந்து, இன்னும் மிக மிக அதிகப்படி விற்பனையால் சரிந்து கொண்டி ருப்பதை அறிந்து விற்பனையை நிலை நிறுத்த பல முயற்சிகள் நடைபெறுகின்றன. நிறுவனமே பங்குதாரர்களின் நம்பிக்கையைப் பெற திரும்ப வாங்கிக் கொள்கிறார் கள்."

அழகேசன் விசில் அடித்தான். "இதில் ஏதோ மர்மம் இருக்கு... உன்கிட்ட இருக்கற ஸ்டாக்கின் மதிப்பு இப்பவே விழுந்து, பத்தில் ஒரு பங்கு ஆயிருச்சு?"

"எனக்கு ஒண்ணுமே புரியலை அழகி."

"ஒண்ணும் புரியலைன்னா சும்மா இரு! பாரு எனக்கு ஸ்டாக் சமாசாரம் எல்லாம் சரியா தெரி யாது. தேவைப் பட்டா தெரிஞ்சுக்கறேன்... ஸ்டாக் எப்படி இருக்கும், கறுப்பா சிவப்பா தெரியாது. ஒரே ஒரு தடவை நாகாலாண்டு லாட்டரிச் சீட்டு வாங்க நினைச்சதோடு சரி. அதும் முதல் பரிசு விழுந்தா, யார் நாகாலாண்டு வரைக்கும்





"எதுக்குடா திடீர்னு 'உடனேயே கல்யாணம் பண்ணி வை'ன்னு சொல்றே?"

"இது குடும்பத்தோடு பார்க்க வேண்டிய படம்னு விளம்பரம் செஞ்சிருக்காங்களேப்பா!"

- பாஸு

போவாங்கன்னு கடைசி நிமிஷத்தில் மனசு மாறிட்டேன்."

மஞ்சரி அவனை வெறித்துப் பார்த்து "உனக்கு எதுவுமே புனித மில்லையா?"

"இருக்கு. ஒரே ஒரு விஷயம். உன் கண் ஓரத்தில் தெரியற கண்ணீர் முத்து..."

"ஹைக்கூவா! சொல்லுடா!"

"ஒரு வாரம் பேனா, பால் பாயிண்ட் எதையும் தொடாதே. எதிலயும் கையெழுத்து போடாதே."

"கையெழுத்து போட்டாத்தான் கல்யாணம்ங்கறாங்க."

"கேனத்தனமா இருக்குது... நீ முதல்ல எங்கம் மாவை சந்திக்கணும். நான் உங்கப்பாவை... அதன்பிறகு மூத்தவர் சம்மதத்துடன் மணமுடிப் போம். ஆமா உண்மை நிலை என்ன? உங்க அப்பா, எப்படி இருக்கார்?"

"அவருக்கு மாற்று இதயம் பொருத்தினா பிழைச்சுக்குவாராம். எங்க அமெரிக்க மாப் பிள்ளை சொல்றார். அதுக்குத்தான் வந்திருக் கார்"

"அதுக்கு டோனர் ஹார்ட்டுக்கு காத்தி ருக்கார் போல"

"ஆமா."

"Your decision is easy. பெரியவர் சுகமாகி வந்தப்புறம்தான் நம்ம கல்யாணம்..."

"வரலைன்னா?"

"துக்க நேரம் முடிஞ்சப்புறம். பயப்படாத கண்ணு."

"உங்கம்மாவை பார்க்கப் போகலாமா?"

"அதுக்கு இப்ப அவசரமில்லாம போயிருச்சு."

"இல்லை, நான் அவங்களைப் பார்த் தாகணும்"

"கார்ல வேண்டாமே. எங்கம்மா காரைப் பார்த்தா பயந்துக்கும்."

"கொஞ்ச தூரம் தள்ளி நிறுத்தி நடந்து போகலாம்..."

**ப**ழைய மகாபலிபுரம் ரோடில் ரொம்ப நாளாக ரிப்பேர் நடந்து கொண்டிருந்ததால், சாலை மேடுபள்ளமாக இருந்தாலும் அந்த மேலை நாட்டுக் கார் உள்ளே உட்கார்ந்திருப் பவர்களுக்கு அதை அறிவிக்கவில்லை. காஸட்டிலோ ரேடியோவிலோ 'மலர்களே மலர் களே' ஒலித்தது. "எனக்குப் பிடிச்ச பாட்டு. நல்ல சகுனம்தான்" என்றான் அழகேசன்... ஸிடி முழுக்க உங்களுக்குப் பிடிச்ச பாட்டா பதிவு பண்ணியிருக்குங்க" என்றார் டிரை வர்.

"என்ன பாஸ்கர், போட்டு உடைச்சுட்டியே..."

தரமணிக்குப் போகும் இருப் பழும் நெடுஞ்சாலையும் சேரும் இடத்தில் அகழ்வாராய்ச்சி நடந்து கொண்டிருக்க, இருபுறமும் சென்னை அவசரப்பட, டிராஃபிக் ஸ்தம்பித்திருந்தது.

"கொஞ்ச தூரம்தான் வா நடந் துறலாம்."

வீராணம் குழாய்களில் அம்மா, கலைஞர், தளபதி, புரட்சிக் கலைஞர், சுப்ரீம் ஸ்டார் என்றெல் லாம் பெரிசாக அக்ரிலிக் பெயிண்ட் செலவழித்து அழகாக எழுதப்பட்டிருந்தது. அந்தப் பெரிய வீராணம் குழாய்களில் ஒன்றின் முன் அழகேசன் நின் றான். உள்ளே விறகு அடுப்பு எரிந்து கொண்டு, பானையில் சோறு கொதித்துக் கொண்டிருக்க, அழகேசன் "அம்மா, அந்தப் பொண்ணை கூட்டியாந்திருக் கேன்" என்றான்.

(தொடரும்)

# டெலிமெடிஸின் சேவை



• Dr. ஜி.ரவிச்சந்திரன்

நள்ளிரவு நேரம். திண்டிவனம் விவசாயி முருகேசனுக்கு திடீர் என்று நெஞ்சுவலி ஏற்படுகிறது. உடனே அருகிலிருக்கும் சின்ன கிளினிக்குக்கு அழைத்துப் போகிறார்கள். அந்த டாக்டருக்கோ, "இது மாரடைப்பு தானா? உயிர் காக்க என்ன ஊசி போடுவது?" என ஏகக் குழப்பம். முதலுதவி மட்டும் செய்து, "சென்னைக்குக் கூட்டிக்கிட்டுப்போயிடுங்க" என்கிறார். அலறியடித்துக் கொண்டு விரைகின்றனர் முருகேசனின் குடும்பத்தினர்.

அவசர சிகிச்சை தர வேண்டிய அவசியத்திலிருக்கும் புறநகர் நோயாளிகளுக்கு, இப்படியொரு அவஸ்தை ஏற்பட்டிருக்கலாம். ஆனால் இப்போது திண்டிவனம் முருகேசன் குறித்த விவரங்களை மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மருத்துவமனையின் இதய நோய் நிபுணர் டாக்டர் அஜித் சில நொடிகளில் பரிசோதித்து விடலாம். அதுவும் சென்னையில் இருந்து கொண்டே! எல்லாம் தகவல் தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சி. 'டெலி மெடிஸின்' எனப்படும் தொலைத் தொடர் மருத்துவத்தின் மகிமை.

**"ஒவ்வொரு வீட்டிலும் குடும்ப டாக்டர் அறிமுகமாவதற்கு நல்ல வாய்ப்பிருக்கிறது"**

சென்னை, செயின்ட் மேரீஸ் சாலையில் இயங்கி வரும் 'ஸ்பேஸ் ஹாஸ்பிடல்ஸ்' தனது மருத்துவ நிபுணர் குழுவோடு, தொழில் நுட்ப வல்லுனர்களையும் இணைத்து இச்சேவையைத் துவங்கியுள்ளது.

இது பற்றி இத்திட்டத்தின் சி.இ.ஓ. டாக்டர் ஜி. ரவிச்சந்திரனைக் கேட்டபோது...


"என்ஹான்ஸ்ட் இன்டன்ஸிவ் கேர் யூனிட் சிகிச்சை முறைகள், தற்போது அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் வெகு பிரபலமாக உள்ளது. இந்த நவீன சிகிச்சை முறை ஆசியாவிலேயே முதன்முதலாக 'ஸ்பேஸ் கம்ப்யூட்டர்ஸ்' உதவியுடன் தொடங்கியுள்ளோம்.

"இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள சிறிய மருத்துவமனைகள், பரிசோதனை மையங்கள் 'சேடிலைட் மெடிக்கல் சென்டர்' என்ற பெயரில், ஒரே நெட்வொர்க்கின் கீழ் கொண்டு வரப்படுகின்றன. நோயாளியின் உடலில் 'பிளாக் பாக்ஸ்' எனப்படும் கருவி இணைக்கப் பட்டதுமே, அவருடைய ஈ.சி.ஜி., இரத்த அழுத்தம், ஆக்ஸிஜன் சாச்சுரேஷன், இன்வேஸிவ் பி.பி. சுவாச அளவு போன்ற பல்வேறு தகவல்கள் சில நொடிகளில்



• பிளாக் பாக்ஸ் இணைக்கப்படுகிறது


# உயிர் காக்கும் கறுப்புப் பெட்டி!



* கண்காணிக்கிறார் டாக்டர் சின்ஹாராய்

பதிவாகி, சென்னையிலிருக்கும் பிரபல மருத்துவரின் அறையில் உள்ள மானிட்டரில் தெரியும். அதுமட்டுமல்ல, நோயாளியும் டாக்டரும் டீ.வி. திரை மூலமாகப் பார்த்து, பேசிக் கொள்ளவும் முடியும். இந்த முறையில், சென்னை மருத்துவரின் அனுபவ அறிவையும், ஆலோசனையையும், கடைக்கோடி நோயாளியும் பெற்று பயனடைகிறார். இதனால் நோயாளியின் உயிர், காலத்தே காக்கப்படுவதோடு, நேரம் வீணாகாது. அலைச்சல் இல்லை. டென்ஷன் கிடையாது. இரு தரப்பினரிடமிருந்தும் இந்தத் திட்டத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது" என்றார் டாக்டர் ஜி. ரவிச்சந்திரன்.

**நோ**யாளி அபாயக் கட்டத்தில் இருக்கும் நேரத்தில், அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சையின் தரமும், தன்மையையும் பொறுத்தே, அவர் குணமடைவதும், சகஜ நிலைக்குத் திரும்புவதும் அமைகிறது. நோயாளியை அருகிலிலுள்ள மருத்துவமனையில் வைத்துக் கொண்டே, டெலிமெடிஸின் மூலமாக, கிரிடிகல் அவரிடமிருந்து தேவையான சிகிச்சை உடனடியாக அளிக்கப்படுகிறது. நீண்ட காலமாக நோயுற்று இருப்பவரை (உதாரணமாக பக்கவாதம்) தொடர்ந்து மருத்துவமனையில் வைத்திருப்பது நடைமுறையில் சாத்தியமல்ல. அவர்களை வீட்டிலேயே வைத்துக் கொண்டு, டெலிமெடிஸின் மூலமாகக் கண்காணிப்பது அடுத்த கட்ட முயற்சி.




"முன்பெல்லாம் ஒவ்வொரு வீட்டுக்கும் குடும்ப டாக்டர் இருப்பார்கள். டெலிமெடிஸின் மூலமாக மீண்டும் ஒவ்வொரு வீட்டிலும் குடும்ப டாக்டர் அறிமுகமாவதற்கு நல்ல வாய்ப்பிருக்கிறது" என்றார் டாக்டர் சின்ஹாராய் (சி.எம்.எச்.எஸ்.)

**டெ**லிமெடிஸின் சேவையில் பல் மருத்துவம் தவிர, மற்ற எல்லாப் பிரிவுகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியின் தலைவர் ஸ்ரீஹரி ராவ், எஸ்.ஆர்.எம். மருத்துவக் கல்லூரியின் இணை இயக்குனர் பி.வி. விஜயராகவன் போன்ற பலர் இயக்குனர்களாக இருக்க, 'எம்.எம்.எம்.' 'ரிஜிட்', 'லைஃப் லைன்', 'கோஸ்ட்'. 'குட்வில்' போன்ற மருத்துவமனைகளின் ஒருங்கிணைப்பில் டெலிமெடிஸின் சேவை பரவலாகப் போகிறது.

முக்கியமான விஷயம் சொல்ல மறந்துபோச்சே! பிரபல டாக்டருடன் ஒரு முறை கலந்தாலோசிக்க, நோயாளி செலுத்த வேண்டிய தொகை, வெறும் இருநூறு ரூபாய் மட்டுமே!

**- மினி**



# தேவாரம் பேட்டி

ஆந்திராவில் சட்டசபைத் தேர்தலுக்குப் பின், முதல் அமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்ட ராஜசேகர் ரெட்டி, நக்ஸலைட்டுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால், பேச்சுவார்த்தை தோல்வியடைந்து விட்டது.

பெங்களூரில், நக்ஸலைட்டுகளுக்கும், போலீஸ்காரர்களுக்கும் இடையில் நடந்த மோதலில், இரண்டு தரப்புக்குமே இழப்பு ஏற்பட்டது.

இந்தச் சூழ்நிலையில், தீவிரவாதிகள் மற்றும் நக்ஸலைட்டுகளின் அச்சுறுத்தல் தமிழ்நாட்டில் எந்த அளவுக்கு உள்ளது என்ற கேள்வி எழுந்துள்ளது. மத்திய உள்துறை அமைச்சகம், தமிழக அரசுக்கு ஒரு ரகசிய ரிப்போர்ட் அனுப்பியுள்ளதாகவும், அதில் தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட நான்கு மாவட்டங்களில் நக்ஸலைட் தீவிரவாதம் தலை தூக்கலாம் என்று எச்சரிக்கப்பட்டிருப்பதாகவும் காவல்துறை வட்டாரத்தில் பேசிக் கொள்கிறார்கள்.

தமிழ்நாட்டில், நக்ஸலைட்டுகளை ஒடுக்குவதில் முக்கியப் பங்காற்றிய போலீஸ் அதிகாரி வால்டர் தேவாரத்தைச் சந்தித்துப் பேசினோம்.

"எண்பதுகளின் ஆரம்பத்தில் ஏறத்தாழ ஒரே நேரத்தில்தான் தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும் நக்ஸலைட் இயக்கம் தலையெடுத்தது. நக்ஸலைட்டுகள் தர்மபுரி மாவட்டத்திலும், குறிப்பாக திருப்பத்தூர் பகுதியில்தான் ஆக்டிவாய் செயல்பட்டனர். 80ம் ஆண்டு ஆகஸ்ட் ஆறாம் தேதி, நக்ஸலைட்டுகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் ஒரு அதிகாரியும், மூன்று காவலர்களும் பலியானார்கள். அதனையடுத்து, நக்ஸலைட்டுகளின் தீவிரவாத நடவடிக்கைகளை ஒடுக்க, அதிரடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தொடர்ந்து நடந்த என்கவுன்டர்களில் முப்பதுக்கும் அதிகமான நக்ஸலைட்டுகள் கொல்லப்பட்டனர். முந்நூறு நக்ஸலைட்டுகள் கைது செய்யப்பட்டனர். வேலூர் சரக டி.ஐ.ஜி ஆக இருந்த நான், நக்ஸலைட்டுகள் பிரச்னையை, ஒரு சட்டம் ஒழுங்கு பிரச்னையாக மட்டும் பார்க்காமல், ஒரு சமூகப் பிரச்னையாக அணுகினேன். ஆயிரம் நக்ஸலைட்டு அனுதாபிகள் மறுவாழ்வுக்கு வழி செய்து கொடுத்தேன். கடும் எதிர்ப்பையும் மீறி, என் சொந்தப் பொறுப்பில், ரிஸ்க் எடுத்து அவர்களில் ஐம்பது பேருக்கு காவல் துறையிலேயே வேலை கிடைக்க வழி செய்தேன். இன்று அவர்களில் சிலர் சப்-இன்ஸ்பெக்டர் அளவுக்கு பதவி உயர்வு பெற்று, சிறப்பாகப் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த அணுகுமுறை ஆந்திராவில் கையாளப்படவில்லை. ஆந்திராவில் டி.ஐ.ஜியாக இருந்த என் சக அதிகாரி வியாஸ், நக்ஸலைட்டுகளின் தாக்குதலுக்கு பலியானார்.

2002ம் வருடத்தில், மீண்டும் நக்ஸலைட்டுகளின் நடமாட்டம் இருப்பது, அரசாங்கத்தின் கவனத்துக்கு வந்தது. உடனடியாக அவர்களை ஒடுக்க நட

வடிக்கை எடுக்கப்பட்டது. அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இருபத்தைந்துக்கும் அதிகமானவர்கள் கைதானார்கள். பிரச்னை ஒடுக்கப்பட்டது.''

''நக்ஸலைட்டுகள் பிரச்னை ஒருபுறம் இருக்க, வீரப்பனுடன் இருந்த தமிழ் தீவிரவாதிகள் இப்போது என்ன ஆனார்கள்?''

''நான் அதிரடிப்படையில் இருந்த போது வீரப்பனின் கூட்டாளிகளை ஒடுக்கி, வீரப்பனின் குழுவை வெறும் ஐந்து பேர் கொண்டதாக ஆக்கினேன். அதையடுத்து, அதிரடிப் படையின் நடவடிக்கைகளில் தொய்வு ஏற்பட்ட கால கட்டத்தில்தான், தமிழ் தீவிரவாதிகள், வீரப்பனுடன் சேர்ந்து கொண்டனர். இதன்மூலம் வீரப்பன் கூட்டத்தினரின் எண்ணிக்கை அதிகரித்தது. தமிழ் தீவிரவாதிகளுக்கு வீரப்பன் பணம் கொடுத்தான்.

''மீண்டும் வீரப்பனைப் பிடிக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்ட போது, தமிழ் தீவிரவாதிகள் போலீசாரிடம் சிக்கிக் கொண்டனர். ஆக, வீரப்பன் கதை முடிவதற்கு முன்பாகவே, தமிழ் தீவிரவாதிகள் முற்றிலுமாக ஒடுக்கப்பட்டு விட்டனர். அவர்களால் இனி தலை எடுக்க முடியாது.

''ஆனால் அண்டை மாநிலங்களில் அவர்களது நடமாட்டம் அதிகரித்து இருப்பதால், நமது உளவுப் பிரிவு மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்''

சந்திப்பு, படம்:
**எஸ். சந்திரமௌலி**



# தமிழ்நாட்டுக்கு நக்ஸலைட்டுகளால் ஆபத்தா?

"தலைவரே... ஒரு கல்யாண மண்டபத்தில உங்க அம்மா எச்சில் இலை எடுத்துகிட்டு இருக்கிறதை போட்டோ பிடிச்சிப் போட்டிருக்கு ஒரு தினப் பத்திரிகை... வேட்பாளரா தேர்தல்ல... போட்டியிடற நேரத்தில இப்படி ஒரு கெட்ட பேர்... தொண்டர்கள் என்ன நினைப்பாங்க...?'' கைத்தடிகள் புலம்ப...

மௌனம் காத்தார் முன்னாள் எம்.பி. இன்னாள் வேட்பாளர் சின்னையன். மனதில்...

''மக்கள் பணத்தை இப்படி லஞ்சமா வாங்கி பாவமூட்டை சேர்க்கறே... உன்னோட வீட்ல இருக்கறதும் பாவம்... நீ போடற சோத்தைத் திங்கறது அதைவிடப் பெரிய பாவம்'' என காறித் துப்பி விட்டுப் போன தாயார் நினைவில் ஓட...


'தாயை அனாதையாய்விட்ட சின்னையனுக்கா உங்க வோட்டு?' என எதிர்க்கட்சிகள் ஆர்ப்பரிக்க...

''எதிர்கட்சிகள் சொன்னார்கள் நான் பதவியில் இருந்தபோது பல லட்சம், லஞ்சம் பெற்றதாக. யோசித்துப் பாருங்கள். நான் அப்படி லஞ்சம் பெற்றிருந்தால், என் தாயை இப்படி எச்சில் இலை எடுத்துப் பிழைக்க விடுவேனா...?' தள்ளாத வயதானாலும் என் தாயாரைக் கூட காப்பாற்ற முடியாமல் நான் இருக்க... இந்த வயதிலும் சுயமாய் பிழைத்து வாழும் என் தாயாரை எதிர்கட்சிகள் கிண்டல் செய்வதை... நினை..க்...''

சின்னையன் தனக்கு எதிரான பிரச்னையிலும் அனுதாபம் தேடி... மேடையில் அழுகிறார்... அரசியல்வாதியாய்.

- 'தேவி' கணேஷ்





# கத்தியுடன் ஒருவன்

வங்கியில் கூட்டம் அலை மோதியதைக் கண்டு, பின் வாங்கிய மாயாவி எதிர்ஹோட்டலில் நின்று கவனிக்க ஆரம்பித்தான். இடுப்பில் வாகாய்ச் செருகி வைத்திருந்த பட்டாக் கத்தியை தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

இரண்டு மணி நேரம் முழுதாய்க் காத்திருந்தான். கூட்டம் கரைந்து போயிருந்தது. இதுதான் சமயம் என்று டக்கென உள்ளே புகுந்தான். வேகமாய் நடந்து மானேஜர் முன்பாகப் போய் நின்று அதை வெளியே எடுத்தான்.

பளபளக்கும் பட்டாக் கத்தியைப் பார்த்த மானேஜர்,

"சூப்பராயிருக்கு மாயாவி. சுடலை மாடசாமி கோயிலுக்கு காணிக்கை செலுத்த ஒரு பட்டாக் கத்தி தேவைன்னு நேற்றுதான் சொன்னேன். உடனே கொண்டு வந்துட்டியே, ரொம்ப நன்றிப்பா..." என்றபடி ஆசையோடு பட்டாக்கத்தியை வாங்கிக் கொண்டார்.

- ஜோசப் காமராஜ்

# KOCHI
## SPECIAL

**POTTER MAGIC AND EXTRA - SPECIAL FOR A FUN - FILLED SUMMER VACATION!**




GRAB YOUR COPY TODAY!

May 2005 Rs.8/-only

# GOKULAM
*The magazine for children*

For Subscriptions mail to : Gokulam, Kalki Buildings,
47- NP, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai-600 032
E-mail:subscription@kalkiweekly.com

# அருள்வாக்கு

பல துறைகளில் அநுபவஸ்தர்களான பெரியவர்கள் ரிடையராகி ஓய்வில் இருக்கிறீர்களல்லவா? நீங்கள் ஒன்று சேர்ந்து கணிதம், பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, மற்ற புது ஸயன்ஸ்கள், என்ஜினீயரிங், அக்கவுண்டன்ஸி இன்னம் இப்போது ஏற்பட்டிருக்கிற அநேக டெக்னலாஜிகல் ஸப்ஜெக்ட்கள், தொழில் துறை ஸப்ஜெக்ட்கள், (வீவிங் (நெசவு) போன்றவை கூடத்தான்) ஸங்கீத வாத்யங்கள் வாசிப்பதைக் கூடச் சேர்த்துக் கொள்ளலாம் - இந்த எல்லாவற்றிலும் பயிற்சி தருவதற்குப் பிரைவேட்டாக ட்யூட்டோரியல் காலேஜ் ஆரம்பியுங்கள். போதகர், போஷகர் இரண்டாகவும் இவற்றில் பணி செய்து இரட்டிப்புப் புண்யம் பெறுங்கள். கற்ற வித்தையை, உங்களுக்கு இத்தனை நாள் ஸம்பாத்யமும் இப்போது பென்ஷனும் வாங்கிக் கொடுக்கிற வித்தையை, தினம் ஒரு மணி இரண்டு மணி பிறருக்கு உபகாரமாகச் சொல்லித் தரக் கூடாதா? இதனால் ஒரு பெரிய ஸமூஹப் ப்ரச்னை தீரவும் உதவி செய்ததாகிறது.

அது தவிர நீங்கள் எந்தத் தொழில் செய்தீர்களோ, அதை நாலு ஏழை இளைஞருக்கு ஃப்ரீயாகச் சொல்லிக் கொடுத்து அந்த உத்யோகத்துக்கான பரீக்ஷைகளுக்கு அவர்கள் போகிறதற்கு உதவி செய்யுங்கள். கொஞ்சம் வசதியாகப் பென்ஷன் வாங்குகிறவர்களாயிருந்தால், இப்படி வித்யாதானம் செய்வது மாத்திரமில்லாமல், அவர்களில் ஓரிரண்டு பேருக்காவது அன்னதானமும் சேர்த்துப் பண்ணுங்கள். சொந்தக் குடும்பத்துக்கு சொத்துச் சேர்த்து வைத்தால் மட்டும் போதாது. வெளி மநுஷ்யாள் இரண்டு பேர் வயிறும் குளிரப் பண்ணுங்கள். இப்படி ஆதரவில்லாதவர்களுக்கு அன்னம் போட்டு ஆதரிக்க ஆரம்பித்து விட்டால், ஸமூஹத்திலேயே திருட்டு, புரட்டு எவ்வளவோ குறையும். இல்லாமையால்தான் (வசதியிருக்கிறவர்களுக்கு மனமில்லாமையாலுந்தான்!) அநேகர் ஏமாற்றுக்காரர்களாகவும் திருடர்களாகவும் ஆகிறார்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



# வந்ததே ஆசை



'சுந்தரா டிராவல்ஸ்' என்று ஒரு படம்! மலையாளம், தமிழ், தெலுங்கு, கன்னடம் என பல மொழிகளில் சக்கைப் போடு போட்ட படம். ஆனால் 'ஆஹா' என எதிர்பார்க்கப்பட்ட கதாநாயகி ராதாவை மட்டும் ஆளையே காணோம்!

"என்னாச்சு? ஏன் இவ்வளவு சர்ச்சைகளில் மாட்டிக் கிட்டீங்க?" என்று கேட்டு, வெறுப்படிக்கலாம் எனப் போனால், செம ஏமாற்றம்!

தடதடக்கிற உதடுகளும் படபடக்கிற கண்களுமாக உற்சாக ஊற்றாகப் பேசினார் ராதா!

"ஃபோட்டோ ஆல்பத்தை கையில எடுத்துக்கிட்டு, சினிமா கம்பெனி கம்பெனியா ஏறி இறங்கி, எனக்கு ஹீரோயின் சான்ஸ் கிடைக்கலை! கோடம்பாக்கம் ஜே.ஆர்.கே. ஸ்கூல்ல ப்ளஸ் டூ படிச்சுக்கிட்டிருந்தேன். இயக்குநர் கண்ணுல பட்டு, மறுநாளே



'சுந்தரா டிராவல்ஸ்' கதாநாயகி ஆயிட்டேன். மற்றபடி, எனக்கு சினிமா உலகம் பற்றிய நுணுக்கம் எதுவும் தெரியாது. இங்கே, அழகு, திறமைனு எது இருக்கோ இல்லையோ, நம்மளை ப்ரொஜக்ட் பண்ண நாலு பேர் இருக்கணும். துரதிருஷ்டவசமா அந்த ட்ரிக்ஸ் எல்லாம் தெரியலை. இப்ப, பேக் டு தி பெவிலியன். சர்ச்சை, கிசுகிசுனு எதையும் லட்சியம் பண்றதாயில்ல. சினிமாவுல ஏதாவது சாதிச்சுட்டுதான் மறு வேலை" என்று தன்னம்பிக்கை மிளிரப் பேசுகிறார். எல்லாம் மம்முட்டியுடன் ஒரு மலையாளப் படம் புக் ஆகியுள்ள ஜோருதான்.

"சிம்ரனுக்கு 'வாலி' மாதிரி, த்ரிஷாவுக்கு 'சாமி' மாதிரி, எனக்கும் ஒரே ஒரு படம் கிடைச்சுட்டா போதும், இந்த ராதா யாருன்னு கோலிவுட்டுக்குத் தெரியும். எனக்கு குடும்பப் பாங்காகவும் இளமைப் பூங்காவாகவும் நடிக்க, ஏற்ற தோற்றம் இருக்கு" என்றார் சவாலாக.

**லேட்டஸ்ட் ஆசை**

'ப்ரவீண்' என்ற இயற்பெயரைக் கொண்ட இவர், 'ராதா' என்ற பெயரை மாற்றிக் கொள்ளவும் சித்தமாயிருக்கிறார். சீக்கிரமே நல்ல டைரக்டரின் கண்ணில் பட்டு, அதிர்ஷ்டமான பெயரையும் பெற்று, ரசிகர்களின் கனவுகளில் தாஜ்மஹால் கட்டிக் கொள்வது தானாம்.

சிமெண்ட்டும் முறுக்குக் கம்பியும் கொள்ளை விலை விற்கும் இந்தச் சமயத்தில், ராதாவுக்கு வந்ததே நல்ல ஆசை!

- டாலி

படங்கள் : மீடியா ராமு

# "எழுதிக்குங்க மாமா!"

"காதலன் பெயரை போலீஸில் பதிவு செய்து ஏமாறாமலிருங்கள்" என்று பெண்களுக்கு யோசனை வழங்கியிருக்கிறார் தமிழ்நாடு மேற்கு மண்டல போலீஸ் ஐ.ஜி. யோசனை நடைமுறைக்கு வந்தால்...

-வசந்தி வள்ளுவன்




"லவ்வு மேட்டர்லயும் லஞ்சம் விளையாடுதா, எப்படிய்யா?"

"பதிவாயிருக்கிற பசங்க பேரை அவங்க பெத்தவங்ககிட்ட 'போட்டுக்' கொடுக்க நம் மாளுங்க ரேட்டு பேசறாங்க ஸார்!"



"தனுஷ் ரசிகர்கள் எதுக்கு போராட்டம் நடத்தறாங்க?"

"ஆணும் பெண்ணும் சரிசமம்தானே? காதலிங்களைப் பதிவு பண்றதுக்கும் ஆண்களை அனுமதிக்கும்படி கேட்கறாங்க!"


''உள்ளூர்ல பேர் இல்லையேன்னு அசால்ட்டா இருக்காதீங்க. வெளியூர்களுக்கும் ஃபோன் போட்டுகேட்டுப் பாருங்க. நம்ம பையன் பேரை எவளாவது பதிஞ்சு தொலைச் சிருக்காளானு!''
''மூணு பேரை பதிவு பண்ணினா என்னம்மா அர்த்தம்?''
''கோவப்படாதீங்க ஸார். இதுல ரெண்டு பேரை சாய்ஸ்ல விட்டுரு வேன்!''
''காதலைப் பதிவு பண்ண வந்துட்டு என்ன வெக்கம்? பையனோட பேர் விவரமெல்லாம் சொல்லும்மா?''
''உங்க புள்ளையோட பயோ-டேட்டாவை அப்பிடியே எழுதிக்கங்க மாமா...''

இன்று மறுபடியும் வெளிநாட்டுக்குச் செல்கிறான் மணி மாறன். அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதிலேயே மாலினிக்கு பொழுது சரியாய் இருக்கிறது.

ஒரு நாள் ஊறுகாய் தயார் செய்தாள். நேற்று வேப்பிலைக் கட்டி இடித்தாள். எலுமிச்சைத் தழை எங்குமே கிடைத்த பாடில்லை. எங்கேயோ அலைந்து திரிந்து பாண்டுரங்கன் கொண்டு வந்து தந்தான். இத்தனைக்கும் தனது கை வேலையை (பீடி சுற்றுவது) அப்படியே போட்டுவிட்டு அலைந்தான். பாதி பீடி சுற்றியும் சுற்றாமலும் முறத்தில் அப்படியே கிடந்தது.

அய்யர் வீதியில் இருக்கும் மனோகரன் வீட்டில்தான் மரம் இருந்தது. மனோகரனது மனைவி பஞ்சவர்ணம் தான் பறித்து குச்சிகளை நீக்கி, நரம்புகளை உருவி, இலையை இரண்டாய்க் கிள்ளித் தந்தாள். அதனை வாங்கிக் கொண்டு வந்து மாலினி யிடம் தந்தபோது, மணிமாறன் வீட்டில் இருந்தான்.

''வா... பாண்டு, என்னா இந்த பக்கம்?''

''என்னா அண்ணாத்தே இப்படி கேட்டுப்புட்டே? அண்ணி ஏதோ வேப்பிலைக் கட்டியாமே, அது இடிக்கணும்னு எலுமிச்ச

# சிரித்த முகம்!

இலை கேட்டுச்சு. காலையிலேயே எங்கையில சொல்லிச்சு. போய் பறிச்சுக் கொண்டு வரதுக்கு லேட்டாயிடுச்சு.''

இதற்குள் மாலினி வாசலுக்கு வந்து விட்டாள். எலுமிச்சை இலையை வாங்கிக் கொண்டாள்.

''என்னா பாண்டு... ரொம்ப கஷ்டப்படுத்திட்டேனா...?''

''இல்ல அண்ணி, இதுல இன்னா கஷ்டம்? நம்ம அண்ணாத்தே வெளிநாடு போவுது. ஏதோ நாக்கு ருசிக்கு நம்மால முடிஞ்சது...''

வரேன் என்று கூடச் சொல்லவில்லை. நகர்ந்துவிட்டான்.

''பாண்டு, நல்ல டைப்புங்க. அண்ணி அண்ணியின்னு உசுரை விடும். கடை வீதிக்கு போவணும்னா, பாண்டு கூடதான் போவேன்.''

இந்த வார்த்தைகளை மட்டுமே எடுத்துக் கொண்டான் மணிமாறன்.

அசை போடும் ஜீவன் போல அந்த வார்த்தைகளையே மனசுக்குள் மென்றான். எண்ணங்களுக்கு எல்லாம் கண்கள் முளைத்தன. முளைத்த கண்களில் ஒரு பார்வை கூட கண்ணியம் நிறைந்ததாகவே இல்லை.

'ஒரு வேளை மாலினிக்கும் பாண்டுவுக்கும் இடையில் ஏதாவது...''

வெட்கமின்றி கற்பனை செய்தான். சந்தேகத்தை மேலும்


ஆங்கரை பைரவி



"தன்னோட அப்பா, மாமா, மச்சான் எல்லோரையும் சந்திக்கப் போற சந்தோஷத்தில் இருக்கான் பிளேடுபக்கிரி!"

"ஓஹோ! ஜெயிலுக்குப் போகப் போறானா அவனும்?!"

- பாஸு

வளர்க்கிற விதமாய், மாலினி பாண்டுவைப் பற்றியே பேசினான்.

"என்னங்க, போன் பண்றதா இருந்தா பாண்டு வீட்டுக்கே பண்ணுங்க. ஜெயபால் அண்ணாத்தே வூட்டுக்கு வேண்டாம். பாரதியார் வீதியில் இருந்து அண்ணா வீதிக்கு நடக்கறதுக்குள்ளே மூச்சு வாங்குது. எனக்கு பாண்டு வூடு வசதியாக்கீது..."

"அப்புறம் நம்ம பாண்டுவுக்கும் எதுனா வேலை இருந்தா பாருங்க. பாவம், பீடி சுத்தறதையே நம்பிக்கினு இருக்குது. நம்ம கொஞ்சம் கை நீட்டுனா முன்னுக்கு வந்துடும். உங்களுக்கு ஒண்ணு தெரியுமா? ரேடியோவுல பேசறாப்ல இங்கேயிருந்து திருச்சி ரேடியோவுல 'வசந்த அழைப்பு' நிகழ்ச்சியில நானும் பேசினேன். குழந்தைக்கு செல்லம் கொடுக்கலாமான்னு தலைப்பு. மீனாட்சி மேடமும் பேசினாங்க. அவங்க தான் இந்த வேப்பிலைக்கட்டி செய்யறதைப் பத்தி சொன்னாங்க. அதான் எலுமிச்சந் தழை தந்துட்டு போகுது. லேடீஸ் அறிவிப்பாளர்ல மீனாட்சி மேடம், அப்புறம் சாந்தா மேடமும் நிறைய சமையல் குறிப்பு சொல்வாங்க. அதே மாதிரி சீனிவாசன் சாரும், சந்திரசேகரன் சார், சிவமேனி சார் இவங்கல்லாம் தினமும் ஒரு தலைப்புல அசத்துவாங்க. பாண்டு தம்பிதான் டயல் பண்ணிப் பேசும். என்னையக் கூப்புடும். நானும் போய் பேசுவேன்..."

சிரித்த முகமாய்ச் சொன்னான். பாண்டுவில் பேசத் தொடங்கியவள், எங்கெங்கோ போய், மீண்டும் பாண்டுவில் பேச்சை முடித்த விதம், மணிமாறனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. உள்ளே வண்டி வண்டியாய்ப் புழுக்கத்தைச் சுமந்தான்.

'அடிப்பாவி... போன தடவை போனப்ப எப்படி அழுத நீ. உங்களப் பிரிஞ்சு எப்படி இருப்பேன்? எனக்கு இந்த சாத்தூர்ல யாரைத் தெரியும். வேணும்னா நான் அம்மா ஊருல இருக்கட்டுமான்னு புலம்பினவளா இப்படி? துணிச்சல் வந்துடுச்சா? பாண்டு இருக்கற தைரியமோ?

ஒவ்வொரு புழுக்கமும் சந்தேகக் கண்களுடன் இருந்தன.

இதோ புறப்பட்டு விட்டான். மணிமாறனுடன் இந்த முறையும் தெளலத் பாஷாவும் புறப்பட்டான்.

மாலினியும் பாஷாவின் மனைவியும் நல்ல தோழிகளாய் இருந்தார்கள். பாஷாவின் மனைவி அழுதபோது, மாலினி செல்லமாய்க் கோபித்தாள்.

"ஏய்... பேசும் நான் இருக்கேன்ல. ஏன் அழறே...? உனக்கு நான் எனக்கு நீயுமா இருக்கோம். எதுக்கு அழணும்? தைரியமா இரு. முதல்ல இவங்க ரெண்டு பேரும் வெளிநாடு போவட்டும். அப்பதான் பீடி சுத்தி நாம நாலு காசு பார்க்க முடியும்? இதுக ரெண்டும் எப்படா போவும்னு கீது எனக்கு. நீ இன்னாடான்னா..."

சிரித்தபடியே நகைச்சுவையாய்ச் சொல்லவும், மணிமாறனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. பாஷாவின் குடும்பம் பக்கத்தில் நிற்கவும் அமைதியானான்.

ஒரு வழியாய் ஆற்காடு பஸ் பிடித்து மணிமாறனும் தெளலத் பாஷாவும் வேலூருக்கு வந்தார்கள். மணிமாறனின் மௌனம் பாஷாவை ஆச்சர்யப்பட வைத்தது. 'எப்போதும் வாய் ஓயாது பேசுபவன், மௌனமாய் வருகிறானே... ஏன்?'

"என்னடா மணி... இன்னா யோசனை? மனைவியைப் பிரியற துக்கமா...?"

பாஷாவின் கேள்வி தலையில் தட்டுவது போல இருந்ததோ என்னவோ... மிஷினில் இருந்து பொல பொலவென்று உதிரும் பாப்கார்ன் போல வார்த்தைகளைக் கொட்டினான்.

"ஆமா... அவ பெரிய ரதி. பிரியற துக்கமாக்கும். இன்னா பொம்பளடா... புருஷன்காரன் வெளிநாடு போறானேன்னு ஒரு கவலை இல்லடா. சாதாரணமா இருக்கா. போனவாட்டி ஊரையே கூட்டி ஒப்பாரி வச்சா. இங்கன சம்பாரிக்கறது துட்டு இல்லயா. அங்கே போனாதான் துட்டானு பேசனவளான்னு ஆச்சர்யமா கீதுடா. இப்ப என்னடான்னா, எப்பப் பாரு சிரிப்பு தான். ஒரு அழுகை, ஒரு விசும்பல், ம்ஹூம். ஒண்ணுமே இல்ல. பஸ் கிளம்பறப்பகூட சந்தோஷமா சிரிச்சுக்கிட்டே கை ஆட்றாடா. எனக்கு என்னமோ சந்தேகமா இருக்குடா..."

சட்டென்று பாஷா மணிமாறன் முதுகில் அடித்தான்.

"எல்லாம் உன்னால தாண்டா. போன தடவை எழுதின லட்டர்ல, உன்னோட அழுத முகமே ஞாபகமா இருக்குன்னு எழுதி இருந்தியாம். எனக்கு இங்கே வேலையே ஓடல. சாப்பிடவும் தோணலைன்னு போன்ல சொன்னியாம். அதனாலதான். நேத்து மத்தியானம் வூட்டாண்ட வந்து புலம்பித் தள்ளிடுச்சுடா. ஒரே அழுகை. பேசகத்துக்கும் அழுகை தாங்கல. அழுதுட்டா. பல மைலு தாண்டி இருக்கற மனுஷனை நாம ஏன் அழுத முகத்தோட அனுப்பணும்? இந்த தடவை என்னோட துயரத்தை காட்டவே மாட்டேன்னு அழுதுச்சுடா... அந்தப் பொண்ணை சந்தேகப்படலாமா? எப்ப நீ மாலினியை நினைச்சாலும், சிரிச்ச முகம்தான் தெரியணும்னு தன்னோட துக்கத்தை எல்லாம் அடக்கின மனுஷியை சந்தேகப்படலாமா நீ?"

மணிமாறன் வெட்கத்துடன் நடுங்கினான். கண்கள் கலங்கின. பாஷாவின் மடியில் தலை சாய்த்தான். கண்களை மூடியவன், உள்ளே மனைவியைத் தேடினான். மாலினி சிரித்த முகத்துடன் எதிர்ப்பட்டாள். ○


ஆஹா! நெய் வாசம் மூக்கைத் துளைக்குதே!
செண்பகம் பிராண்ட் நெய் தாங்க!!

செண்பகம்
பிராண்ட்
PURE GHEE

சுவையான சமையல் என்றென்றும்
செண்பகம் பிராண்ட் நெய்யில்

தற்போது
15Kg, 5L, 2L, 1L, ½L
டின்களிலும், கேன்களிலும்
மற்றும் 200ml, 100 ml, 50 ml,
பவுச் பேக்கிலும் கிடைக்கிறது.

SRI DHANALAKSHMI & CO.
SENBAGAM BRAND GHEE MANUFACTURER,
18, M.G Pudur, I street,
TIRUPPUR - 641 604
Phone : 0421 - 2213557, Cell: 94433 56808

# பிரியம்!

வாசல் வரை ஓடி வந்து
கைகளைப் பிடித்துக் கொள்ளும்
மனம் வாய்த்தவர்கள் -

விதவிதமான
காரங்களும் இனிப்புகளுமாக
வயிற்றை நிரப்பிக் கொள்ளும்படியாய்
நிர்ப்பந்தித்து
பிரியம் காட்டுகிறவர்கள்

வார்த்தை வார்த்தையாய்
சிலாகித்து
சொற்களின் பந்தியில்
பசியாறும்படியாக
வாய்ப்பளிப்பவர்கள்

திரும்புகிறபோது
விழிகளில் பிரியம் கசிய
கைகள் அசைத்து
விடை கொடுப்பவர்கள்

பிரியங்களின் அடையாளத்தை
ஸ்பரிசிக்க வாய்க்காதவர்கள்
திரிகிறார்கள் தெருக்களெங்கும்
மன நோயாளிகளாக!

- க. அம்சப்ரியா

# நோயாளியின் குறிப்புகள்

வலப்பக்க முன் அடிவயிற்றுப்
பகுதியில் வலிபரவ
இலேசாய் ஜுரம்

நிமிர்ந்து பார்க்காமலேயே
மருந்தெழுதும் மருத்துவர்
எம்.80
ஓட்டுவதால் முதுகுவலி
என்ற என்
சுய ஆலோசனையின் பேரிலோ
வைரல் ஃபீவர் என்னும் வழிவழி
மருத்துவ நம்பிக்கையிலோ
பெக்ஸினும் இபுஜெசிக்கும்
பிரிஸ்கிருப்ஷன் எழுதினார்.

ஏழுநாள் போய்
அடிமுதுகிலும்
அந்தவலி பரவ
குளிர்ஜுரமும்
கூடிக் கொள்ள
மருத்துவரை மாற்றி
மலேரியாவுக்கு மருந்து கேட்டேன்

நோயாளியின்
நோயறியும் திறன்கண்டு
வியந்த மருத்துவர்
லேரிகோவும் டோலாபரும்
மாற்று மருந்தெழுதினார்.

மனத்திருப்தி!

இரண்டு நாள் போய்
இன்னும் வலிகூட
இறப்பைவிட மோசமாய்
இடுப்புவலி பயணம்

எலும்பு மருத்துவரே
அடுத்தென் குறி...

சோதனைகள்
எல்லாம் முடிந்தபின்
எலும்பில் ஏதுமின்றி
குடல்வாலில் குறை

என்றாலும் என்ன செய்ய?
எல்லாம் முடிந்திருந்தது
குடல்வால் வெடித்து
இறப்புக்குத் தப்பி
இப்பொழுது
பொது மருத்துவமனை
அறுவை சிகிச்சைப் பிரிவில்!

- நா.வே.அருள்



# இளமை

நேற்றைய கன்றுகள் மரங்களாகி
பழுத்த இலைகளை உதிர்த்துக்
கொண்டிருக்கின்றன
கட்டடங்கள் நிறம் மங்கி
வீறலிட்டபடியிருக்கின்றன.

நூலகப் புத்தகங்களிலிருந்து
வெளியேறுகிறது பல ஆண்டுகளின்
பழைமை.

பழைய கரும்பலகையில்
அதே பாடங்களை நடத்திக்
கொண்டிருக்கின்றனர்
வயது உதிர்ந்து கொண்டிருக்கும்
பேராசிரியர்கள்

எப்போதும் வயதானவர்களாகவே
இருக்கிறார்கள்
கல்லூரி முதல்வர்கள்.

ஒரு போதும் வயதாவதில்லை
வகுப்பறைகளுக்கு மட்டும்.

- ஜெ. முனுசாமி

# என் மீதும்...

தூங்காமல்
முரண்டு பிடிக்கும் மகனை
தோளில் சுமந்தபடி...

உனக்கு உன் பாட்டி சொன்ன
பாட்டியிடம் வடை திருடிய
காகத்தின் கதையைச் சொல்லி
உறங்கவைக்கும்
உன் மெல்லிய வார்த்தைகளை...

உன் மீது ஊடல் கொண்டு
சிடுசிடுக்கும் என்னிடமும்
கொஞ்சம் ஆளுமை செலுத்தேன்.

- நேசிகா



தி.மு.க., அ.தி.மு.க.வின் லேட்டஸ்ட் போட்டி, நோக்கியா செல்போன் தொழிற்சாலையை, யார் சென்னைக்குக் கொண்டு வந்தது என்பதுதான். மத்திய தகவல் துறை அமைச்சர் தயாநிதி மாறனே', 'தமிழக முதல்வர் ஜெயலலிதாவே' என்று இரு தரப்பும் அடித்துக் கொள்ளாத குறை. இது ஒருபுறமிருக்க, எல்கோடெக் நெட் ஒர்க் என்ற மற்றொரு ஃபின் லாந்து நிறுவனம், பெங்களூரில் தனது தயாரிப் பைத் தொடங்கிவிட்டது. இதன் முக்கியத் தயாரிப்பும் செல்போன்கள்தான். கூடவே செட்-டாப் பாக்ஸ் போன்றவையும். அமெரிக்க செல்போன் நிறுவனமான மோட்டரோலாவும் இந்தியாவில் கால்பதிக்கப் போகிறது. இன்னும் ஒரே வாரத்தில், ஒரு மொபைல் கருவி இந்தியாவில் வெறும் நாற்பது டாலர்களுக்குக் (ரூ.1,800) கிடைக்குமாம்.

ரொம்ப சந்தோஷம்.

உள்ளூர் மக்களுக்கு அதிக வேலை வாய்ப்பு, குறைவான விலையில் கிடைக்கவிருக்கும் மொபைல் கருவிகள் என்பதெல்லாம் கேட்பதற்கு இனிமையான விஷயங்கள்தான். ஆனால் இதற்காக நாம் அளிக்கும் விலை பதறவைக்கக் கூடியதாய் இருக்கிறது.

சுற்றுப்புறச் சூழலின் மிகப் பெரிய எதிரிகளில், செல்போனை தாராள மாகச் சேர்க்கலாம். நாளுக்கு நாள் அதன் கதிர் வீச்சு வளர்கிறது என்பதை யும், ஒவ்வொரு வருடமும் இந்தியாவில் செல்போன்களின் விற்பனை நூறு சத விகிதம் வளர்ந்து வருவதையும் பார்க் கும்போது, இந்த உண்மை மேலும் கிலி யைத் தருகிறது. செல்போன்களால் புற்று நோய் உண்டாகலாம் என்பது உறுதி செய்யப்படவில்லை என்றாலும், இது போன்ற விஷயங்களில் ஒரு பொருள் அறிமுக மாகி 25 வருடங்களுக்குப் பிறகுதான் திட்ட வட்டமாகத் தெரியும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். "எதற்கும் எட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் தொடர்ந்து செல்போன் பேசவிடாமல் தடுப்பது நல்லது' என்கிற அளவில் ஒரு முடிவை அறிவித்திருக் கிறார்கள்.



சென்ற ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த கலிபோர் னியா மாநிலமும், சுற்றுப்புறப் பாதுகாப்பு ஏஜென்சியும் தனித் தனியாக செய்த ஆராய்ச்சிகளில் 'பழசாகிப் பயன்படாதுபோன செல்போன் கருவிகள் - அவற்றில் உள்ள பாட்டரிகள் நீக்கப் பட்ட பிறகும் - சுற்றுப்புறத்துக்கு பெரும் தீமையை விளை விக்கக் கூடியவை" என்று தங்கள் ஆராய்ச்சியின் முடிவை வெளிப்படுத்தியிருக்கின்றன. செல்போன் கருவிகளில்

# நோக்கியாவின்

ஈயம், பெரிலியம், தனித்தன்மை கொண்ட குரோமியம், ஆர்செனிக், ஆன்டிமனி ஆகியவை உள்ளன. இவை நச்சுத்தன்மை வாய்ந்தவை.

பொதுவாகப் பார்க்கும்போது, ஒரு செல்போனில் 45 சதவிகிதம் பிளாஸ்டிக், 40 சதவிகிதம் ஒயர் அட்டை, 8 சதவிகிதம் உலோகங்கள் என்கிற வகையில் உள்ளன. நவீன முன்னேற்றங்கள் பெருகப் பெருக பழைய செல்போன்களை தூக்கிப் போட்டுவிட்டு, புதிய செல்போன்களை வாங்கிக் கொள்ளும் வழக்கம் முன்னேறிய நாடுகளில் அதிகரித்துவிட்டது. அமெரிக்காவில் பலரது வீடுகளில் பயன்படுத்தாத பழைய மாடல் செல் போன்கள் நான்கைந்தாவது இருக்கும். பழைய செல்போன்களையும், அவற்றைத் தயாரிக்கும் கருவிகளையும் என்ன செய்வதாம்? 'இருக்கவே இருக்கின்றன இந்தியா, சீனா, பாகிஸ்தான் போன்ற வளரும் நாடுகள்' என்ற முடிவுக்கு வந்துள்ளன பல நிறுவனங்கள். ஈ-மெயில் மாதிரி, ஈ-வேஸ்ட் என்ற சொல்லும் இப்போது பிரபலமாகிவிட்டது.

இந்த ஆண்டு மட்டுமே அமெரிக்காவில் 13 கோடி செல்போன்கள் தூக்கி எறியப்படுமாம். இதனால் 65,000 டன் செல்போன் கழிவுகள் ஏற்படும் என்கிறார்கள்.

டெல்லியில் உள்ள ரீ-சைக்ளிங் செய்யும் தொழிற்சாலைகளில் உள்ள எலக்ட்ரானிக் கழிவுகளில், 70 சதவிகிதம் வெளிநாடுகளிலிருந்து வருபவை என்று சொல்லப்படுகிறது. இப்படி ரீ-சைக்ளிங் செய்யும்போது நமது சுற்றுப்புறம் மேலும் மாசடைகிறது. இப்படிக் கழித்துக் கட்டியது நம் நாட்டில் வந்ததுபோக, இப்போது மேலும் மேலும் செல்போன் தயாரிப்பு நிறுவனங்கள் இந்தியாவில் தங்கள் கைவரிசைகளைக் காட்டப்போகின்றன! ரொம்ப ரொம்ப சந்தோஷம்.




# நோக்கமென்ன?

- ஜி.எஸ்.எஸ்.



• 'காக்கும் கரங்கள்' படத்தில்....

விட்டது. இந்த இடைவெளி சிவாஜிக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. 'ஒரு வேளை ஏவி.எம். உயர்ந்த மனிதனை டிராப் செய்து விட்டார்களோ' என்ற சந்தேகம். ஷண்முகம் வந்து கேட்கவும் செய்தார். இது தெரிய வந்ததும், "முதல்ல ஒரு ஐம்பதாயிரம் ரூபாயைக் கொண்டு போய் ஷண்முகம் ஆபீஸ்ல அட்வான்ஸாக கொடுத்துவிட்டு வாங்கப்பா" என்றார் அப்பச்சி.

அதே போல கொண்டு போய் பணத்தைக் கட்டாயப்படுத்திக் கொடுத்துவிட்டு வந்தோம்.

'உயர்ந்த மனிதன்' படத்தைப் பற்றிச் சொல்லும்போது எங்களுக்கு மகிழ்ச்சி தந்த விஷயம், சிவகுமாருக்கு அதில் கிடைத்த நல்ல ரோல்.

'காக்கும் கரங்கள்' படத்தில் சில தவிர்க்க முடியாத காரணங்களால், சிவகுமார் நடித்த காட்சிகளைப் பெருமளவுக்கு வெட்ட வேண்டி வந்ததால், சிவகுமார் மிகவும் மனமுடைந்து போனதை நான் முன்பே சொல்லியிருக்கிறேன். உயர்ந்த மனிதனில் அவருக்கு நல்ல ரோல் தந்தோம். அதுமட்டுமல்ல, அதற்குப் பிறகு ஏ.பி. நாகராஜன் எடுத்த

# டிபனுக்குக்

நாங்கள் 'குழந்தையும் தெய்வமும்' படத்தை ஹிந்தியில் 'தோ கல்யான்' என்று எடுத்தபோது, அதை விரைவில் முடித்து வெளியிட்டாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்போது 'பேரன்ட் ட்ராப்' என்ற கதையின் அடிப்படையிலேயே 'வாபஸ்' என்ற பெயரில், வடக்கில் வேறொரு கம்பெனி ஒரு படத்தை எடுத்து வந்தது. 'பேரன்ட் ட்ராப்' கதையைத் தழுவித்தான் 'குழந்தையும் தெய்வமும்' எடுத்தோம் என்பதை நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். எனவே 'வாபஸ்' வெளியாவதற்குள், நாங்கள் 'தோ கல்யான்' படத்தை ரிலீஸ் செய்தாக வேண்டும்.

அதற்காக நடுவில் கொஞ்ச காலம் 'உயர்ந்த மனித'னை நிறுத்தி வைத்துவிட்டு, 'தோ கல்யானி'ல் கவனம் செலுத்திக் கொண்டிருந்தோம். சுமார் எட்டு மாத காலம் பிரேக் விழுந்து



• ஏவி.எம். குமரன்

அந்த நாள் ஞாபகம்....... திரையுலக நினைவுகள்....... 27



## சிவாஜிக்கு சாப்பாடு!

# இதே பணம்!

ஒரு படத்தில், முருகர் வேடத்துக்கு சிவகுமாருக்குத் தெரியாமலேயே அவரது பெயரை அப்பச்சி சிபாரிசு செய்தார். சிவகுமாரின் நீண்ட நடிப்பு வாழ்க்கைக்கும், வேகமான முன்னேற்றத்துக்கும், ஏவி.எம். நிறுவனமும் ஓரளவு காரணமாக இருந்ததில் எங்களுக்கு மகிழ்ச்சி.

உயர்ந்த மனிதனில் பாட்டின் நடுவில் வசனங்களோடு 'அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே' என்ற பாடல் அப்போது புதுமை. இந்தப் புதுமைக்கும் என் சகோதரர் குமரன்தான் காரணமாக இருந்தார். அச்சமயம் சென்னையில் பிரபலமாக ஓடிக் கொண்டிருந்த ஓர் ஆங்கிலப்படத்தை, மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதனைப் பார்க்கும்படி சொல்லி, அதில் ஒரு காட்சியில் வந்தது போல, அந்த இன்ஸ்பிரேஷனை வைத்து பாட்டையும் வசனத்தையும் இணைக்குமாறு ஐடியா கொடுத்தார் குமரன்.

அதேபோல பி.சுசீலா பாடிய 'நாளை இந்த வேளை பார்த்து ஓடி வா நிலா' என்ற அருமையான பாடல், அவருக்கு அந்த ஆண்டு தேசிய விருதைப்

ஏவி.எம். சரவணன்

பெற்றுத் தந்தது. அதற்காக அவரைப் பாராட்டி நாங்கள் எடுத்த சிறப்பான விழாவில் லதா மங்கேஷ்கர் கலந்து கொண்டு வாழ்த்தினார்.

படம் 125 நாட்கள் ஓடியபிறகு நாங்கள் நூறாவது நாள் விழா எடுத்தோம்.

ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் விழா. அறிஞர் அண்ணா கலந்து கொண்டு கலைஞர்களைப் பாராட்டிப் பேசி பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

'உயர்ந்த மனிதன்' தயாரிப்பில் இருந்தபோது, இன்னொரு சுவையான சம்பவமும் நடைபெற்றது.

எஸ்.வி.சுப்பையா 'காவல் தெய்வம்' என்றொரு படத்தை அப்போது எடுத்துக் கொண்டிருந்தார். நான் முன்பே சொன்ன மாதிரி, என்னிடம் மிகவும் உரிமை எடுத்துக் கொண்டும், நான் மிகவும் உரிமை எடுத்துக் கொண்டும் பழகிய இரண்டு கலைஞர்கள் எஸ்.ஏ.அசோகனும், எஸ்.வி.சுப்பையாவும்தான்.

தமது 'காவல் தெய்வம்' படத்துக்கு சுப்பையாவுக்கு சிவாஜியின் கால்ஷீட் நான்கைந்து நாட்கள் வேண்டியிருந்தது.

"நான் எவ்வளவு கேட்டும் சிவாஜி தரமாட்டேங்கறார். நீங்க கேட்டு வாங்கித் தரணும்" என்று என்னிடம் ஒரு நாள் தன் சிரமத்தைச் சொன்னார் சுப்பையா.

அவருக்கு எப்படியும் அந்தப் படத்தை விரைவாக முடித்து திரையிட்டாக வேண்டும். ஏனென்றால் தயாரிப்புச் செலவுகள் ஏகமாகிக் கொண்டிருந்த நிலையில், எந்தத் தாமதமும் அவருக்கு வட்டிச் சுமையை மேலும் அதிகமாக்கும். அவரது பொருளாதார நிலைமை எனக்கு நன்றாகப் புரிந்தே இருந்தது.

அப்போது நடிகர் திலகத்துக்கும், சுப்பையாவுக்குமிடையே கொஞ்சம் கருத்து வேறுபாடு. சிவாஜி கால்ஷீட் தராமல் இருந்ததற்கு அதுவும் ஒரு காரணம்.

நான் போய் சிவாஜியிடம் கேட்டேன்.

"சுப்பையா கம்பெனியின் புரொடக்ஷன் மானேஜர் நான் என்று நினைத்துக் கொள்ளுங்கள். கொஞ்சம் ஹெல்ஃப் பண்ணினால் நல்லாயிருக்கும்."



• எஸ்.வி. சுப்பையா

**"எனக்கு நீங்க சம்பளம் தர்றதாயிருந்தா, எவ்வளவு தரணும் தெரியுமா?"**

"என்ன செய்யறது? எனக்கு கொடுக்க டேட்ஸ் இல்லியே. எப்படி கால்ஷீட் கொடுக்கறது?" என்றார் சிவாஜி.

அப்போது, 'உயர்ந்த மனிதன்' படப்பிடிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

"சரி... ஒண்ணு செய்யுங்க. உயர்ந்த மனிதனுக்கு எங்களுக்கு டேட் கொடுத்

திருக்கீங்க இல்ல... அதில் நாலைஞ்சு நாட்கள் சுப்பையாவுக்கு இந்த ஷெட்யூல்ல கொடுங்க. அப்புறம் அடுத்த ஷெட்யூல்ல எங்களுக்குச் சேர்த்துக் கொடுத்திட்டா ஓ.கே" என்றேன்.

சற்று நேரம் யோசித்த சிவாஜி, "அப்படிக் கொடுத்தா பரவாயில்லையா?" என்று கேட்டார்.

"சுப்பையாவுக்காக இந்தத் தியாகத்தைச் செய்ய நான் தயாரா இருக்கேன்" என்று சிரித்துக் கொண்டே சொன்னேன்.

ஐந்து நாட்கள் சுப்பையாவுக்கு சிவாஜி நடித்துக் கொடுத்தார். அந்த ஐந்தே நாட்களில் அந்த ரோலை அற்புதமாகச் செய்து கொடுத்தார். அந்தப் படத்தில் ஒரு மரமேறியாக சிவாஜி வருவார். படம் முழுக்க வரும் ரோல் அது. அந்தச் சில நாட்களில் தனது போர்ஷன் முழுவதையும், கச்சிதமாக முடித்துக்கு கொடுத்து விட்டார் நடிகர் திலகம்.



• 'காவல் தெய்வம்' படத்தில் மரமேறியாக...

ஒரு நாள் ஒரு டிபன் கேரியரை சிவாஜிக்குக் கொடுத்தனுப்பினார் எஸ்.வி.சுப்பையா. அதில் சிவாஜி சாப்பிட டிபன் அனுப்பியிருப்பதாகச் சொல்லியிருந்தார். சிவாஜி டிபன் பாக்ஸைத் திறந்தார். முதல் அடுக்கில் உண்மையிலேயே டிபன் இருந்தது. கீழே இருந்த கிண்ணத்தில் பதினையாயிரம் ரூபாய் பணம்!

சிவாஜிக்கு கோபம் வந்து என்னைக் கூப்பிட்டனுப்பினார். போனேன். என்னைப் பார்த்ததும், "உங்க ஆச்சாரி செய்த வேலையைப் பாத்தீங்களா?" என்று வெடித்தார். சுப்பையாவை சிவாஜி எப்போதும் 'ஆச்சாரி' என்றுதான் அழைப்பார். அந்த இடத்துக்குச் சுப்பையாவை வரவழைத்தோம். நான் விசாரித்தபோது, "காவல் தெய்வத்தில் நடித்ததற்காக சிவாஜிக்கு நான் அனுப்பிய சம்பளம்" என்றார் சுப்பையா.

"எனக்கு நீங்க சம்பளம் தர்றதாயிருந்தா, எவ்வளவு தரணும் தெரியுமா? சரவணனைக் கேளுங்க. உயர்ந்த மனிதனுக்கு எனக்குத் தர்ற லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் தரணும்"

சுப்பையாவுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை.

"நான் உங்களுக்காக கால்ஷீட் தரல்ல. சரவணனுக்காகக் கொடுத்தேன்" என்றார் சிவாஜி.

சற்று நேரம் இப்படியே போயிற்று. பிறகு தன் செயலுக்கு சுப்பையா வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

சிவாஜியும் அப்புறம் சகஜமாகி விட்டார்.

அந்தப் பணத்தை சிவாஜி கடைசி வரை வாங்கிக் கொள்ளவே இல்லை. சுப்பையாவிடமே திருப்பித் தந்து விட்டார்.

(தொடரும்)


# போட்டுத் தாக்கு!



### கங்கூலியிடம் கேட்கக் கூடாத கேள்விகள்

* மேட்ச் ரெஃப்ரி ப்ராட்க்கு ப்ராட்மைண்ட் இல்லைன்னு நினைக்கிறீங்களா?
* சர்வதேச கணிதக் கழகத்தில் 'ஜீரோ'வின் பெயரை 'கங் கூலி'ன்னு புதுசா மாத்தியிருக்காங் களாமே?
* நீங்க, அஸாருதீன், அஜய் ஜடேஜா மூவரும் இணைந்து 'ஒதுக் கப்பட்டோர் நலச் சங்கம்' ஆரம்பிக் கப் போறீங்களா?
* நீங்க இப்போ எஸ்.எம்.எஸ் எதுவும் படிக்கறதில்லை தானே?
* அதென்ன, 'கேப்டன்'னு சொல்லிக்கறவங்களுக்கெல்லாம் நேரமே சரியில்லை?
* கேர்ள் ஃப்ரெண்டோடு காளஹஸ்தி சிவனை மூணு சுத்து சுத்தினா சகல தோஷ மும் கழியும்னு சொல்றாங் களே?
* இயக்குனர் லிங்குசாமி உங் களையும் மீரா ஜாஸ்மினையும் வைச்சு 'நோ ரன்'னு புதுசா படம் எடுக்கிறாராமே?
* 'வேண்டாம்... விட்ரு... நான் அழுவேன்'னு இன்ஸமாம்கிட்ட ரகசியமா மூக்கு சிந்தினதா பேசிக் கறாங்களே?
* ராகுல் டிராவிடுக்கு வாழ்த்துத் தந்தி டைப் அடிச்சாச்சா?
* இந்தியன் டீம்ல ஆளாளுக்கு பாடற 'உன் குத்தமா என் குத் தமா'... பாட்டு பிடிச்சிருக்கா?

- பத்துக் கேள்வி பரமு



பா.ராகவன்

# "போய் வருகிறேன் சிஞ்யா!"

தூங்கவிடாமல் அடித்துக் கொண்டிருந்தது குளிர். கிழிந்த ஓவர்கோட்டின் மேலெல்லாம் திட்டுத்திட்டாகப் பனி. படுத்திருந்த மரப் பெஞ்சில் குப்புறத் திரும்பி, முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்தான் அந்த இளைஞன்.

உண்மையில் பாரீஸ் நகரின் அந்தக் குளிர் அவனது முதல் கவலையல்ல. வெட்டவெளியில் படுத்திருக்க நேர்ந்தாலும் சமாளித்து விடக் கூடியவன்தான். திடகாத்திரமான உடம்பு வாய்க்கப் பெற்றவன். அதைக் காட்டிலும் அசாத்தியமான மனவலிமை கொண்ட இளைஞன். ஆனால் தனிமை என்னும் பேய், பிடித்து ஓர் உலுக்கு உலுக்கிக் கொண்டிருக்கும்போது, யாரால் துவளாமல் இருக்க முடியும்?

அவன் இடத்தில் உங்களை வைத்து ஒரு கணம் யோசித்துப் பாருங்கள். படாத பாடுபட்டு, உங்களுக்கு ஒரு பத்திரிகையில் நிருபர் பணி கிடைக்கிறது. "நமது பத்திரிகையின் பிரான்ஸ் நிருபராகப் போய், அங்கே இருந்து செய்திகளைச் சேகரித்து அனுப்பு" என்று சொல்லி அனுப்புகிறார்கள். நீங்களும் சந்தோஷமாகக் கிளம்பிப் போகிறீர்கள். பிழைப்பு நிமித்தம் பத்திரிகை நிருபர் பணியை ஏற்றுக் கொண்டாலும் உங்களுக்குள் இருப்பதோ, படைப்பு மனம். உலகில் யாருமே எழுதாத வண்ணம் சில நாவல்களையாவது எழுதிப்பார்த்து விடவேண்டும் என்று எப்போதும் ஒரு தவிப்பு. எழுதுவதற்கும் உங்களிடம் கோடி விஷயங்கள் இருக்கின்றன. ஆனால் வாகான ஒரு சந்தர்ப்பம் அமையவேண்டும். உங்களை இந்த உலகம் கண்டு கொள்ளும் விதமான சந்தர்ப்பம்.


ஆனால் பிரான்ஸ் போய்ச் சேர்ந்த சில நாட்களுக்குள்ளாக ஒரு சோதனை வருகிறது. ஒரு நல்ல நாள் பார்த்து, பத்திரிகையை இழுத்து மூடிவிடுகிறார்கள்.

உங்களிடம் ஒரு பைசா கிடையாது. அதுவரை பாரீஸ் நகரில் தங்கியிருந்த அறைக்கு வாடகை கொடுக்கக் கூடக் காசில்லை. எனில் திரும்பிப் போகும்வரை எங்கே தங்குவீர்கள்?

அப்படியொரு குளிரில்தான் அந்த இளைஞன் சாலையோர பெஞ்சில் படுத்திருந்தான். திரும்பி தனது தேசத்துக்குப் போக முடியுமா என்கிற பயம். கதறியழுத அந்த இளைஞனுக்குச் சட்




* மார்க்வேஸ்



டென்று ஒரு பொறி தட்டுகிறது. இதேதான். இதே தனிமைதான். இந்தத் தனிமை தரும் வலியைத்தான் தனது தேசமும் காலம் காலமாக அனுபவித்து வருகிறதோ?

இயற்கை வளங்களுக்குக் குறைவில்லை. மனித வளத்துக்கும் பிரச்னை இல்லை. ஆனால் மூன்றாந்தர அரசியல்வாதிகளின் பிடிகளில் அகப்பட்டு, ஓர் இருண்ட பூமியாக அல்லவா இருக்கிறது? காலகாலமாக சர்வாதிகார ஆட்சிகள். எல்லோருமே மக்களின் நலனுக்காகப் பாடுபடுவதாகத் தான் சொல்கிறார்கள். ஆனால் எதிலுமே உண்மை என்பது துளியும் இல்லை. உலக வரைபடத்திலிருந்து தன்னைத்தானே துண்டித்துக் கொண்டுவிட்ட ஒரு தேசம் போலத்தான், நினைக்கும்போதெல்லாம் உணர முடிகிறது. ஒரு தனி மனிதனின் ஓரிரவுத் தனிமை இத்தனை கொடுமையாக இருக்கிறதென்றால், நூறு நூறு ஆண்டுகளாக நமது தேசமே இப்படியொரு தனிமையின் கொடுமையை அல்லவா அனுபவித்து வருகிறது! ஆ, இதையல்லவா நான் முதலில் எழுத வேண்டும்?



• ஹெமிங்வே

இப்படியான எண்ணங்களுடன் அன்றைய பொழுதைக் கழிக்கும் அந்த இளைஞனுக்கு, இன்னும் சில தினங்களில் வேறொரு அனுபவம் ஏற்படுகிறது.

வீதியைப் பார்த்துக் கொண்டே இருந்த அந்த இளைஞனின் கண்களில் சட்டென்று ஆஜானுபாகுவான மனிதர் ஒருவர் தம் மனைவியுடன் சாலையைக் கடந்து போகிற காட்சி தனித்துத் தென்படுகிறது. உடனே மனத்தில் ஒரு பரவசம் மேலோங்கி விடுகிறது. ஆ! அதோ போகிற அந்த மனிதர், ஹெமிங்வே அல்லவா!

ஒரு கணம்தான். மாபெரும் எழுத்தாளரான எர்னஸ்ட் ஹெமிங்வேயைச் சற்றும் எதிர்பாராமல் அந்தச் சாலையில் பார்த்த போது, தன்னை மறந்து அவன் ஹெமிங்வேயைப் பார்த்துக் குரல் கொடுத்தான்: "மேஸ்ட்ரோ...!"

நம் ஊரில் "தலைவா" என்று கத்துவார்கள் அல்லவா? அந்த மாதிரி ஓர் அன்பு கலந்த மரியாதை விளிப்பு அது.

வீதியில் நூற்றுக்கணக்கான மக்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த இளைஞன் 'மேஸ்ட்ரோ' என்று கத்தியதும், ஹெமிங்வே மட்டும் நின்று திரும்பிப் பார்த்தார். அந்தச் சாலையில் அவர் ஒருவரைத் தவிர வேறு யார் 'மேஸ்ட்ரோ'வாக இருந்துவிட முடியும்?

அந்த அநாதை இளைஞன் தென்பட்டான். உற்சாகமாக அவர் கையை உயர்த்தி ஆட்டினார். "போய்வருகிறேன் சிஷ்யா!"

அந்த இளைஞனுக்குப் பேச்சு வரவில்லை. பரவசத்தில் அவனது கண்கள் நிரம்பிவிட்டன. சிஷ்யா! அதுவும் யார் வாயால்? அவன் இன்னும் ஒரு எழுத்தாளனாக ஆகவே இல்லை. நிச்சயம் ஒரு நாள் உலகம் போற்றும் மாபெரும் படைப்பாளியாக ஆகத்தான் போகிறான். அப்படியாகும்போது தன்னை மனமுவந்து 'சிஷ்யா' என்று அழைத்தவருக்கு, நியாயம் செய்யக் கூடிய எழுத்தாக அது இருக்க வேண்டும் என்று உறுதி பூண்டான்.


மிகவும் சிரமப்பட்டே பின்னால் அவன் தன் சொந்த நாட்டுக்குத் திரும்ப முடிந்தது. தென்னமெரிக்கக் கண்டத்தில் உள்ள கொலம்பியா, அவனது தேசம். ஊருக்குத் திரும்பிய பிறகு அவன் நிறைய எழுத ஆரம்பித்தான். தனது தேசத்தின் குரலாகத் தனது எழுத்து ஒலிக்க வேண்டும் என்று அவன் விரும்பினான். தான் எழுதும் ஸ்பானிஷ் மொழியை வாசிக்கத் தெரிந்த அத்தனை பேரும் தனது எழுத்தைப் படிக்கவேண்டும் என்று ஆசைப் பட்டான். பேராசை அல்ல அது. அதற்கு ஏற்பத் தன்னுடைய படைப்பு அமைய வேண்டும் என்று விரும்பி, அதற்காகத் திட்டமிட்டு உழைக்கத் தொடங்கினான்.

உத்தியை யோசித்து யோசித்தே வருடங்கள் கழிந்தன. எழுத முடியாத துக்கம் அவனை மிகவும் வாட்டிக் கொண்டிருந்தது. பாரீஸில் கழித்த அந்தத் தனிமை கவிந்த தினங்கள் அளித்த துக்கத்தைக் காட்டிலும், இந்தத் துக்கம் மிகப் பெரிய சுமையாக இருந்தது.

ஒரு கோடை விடுமுறைக் காலம் வந்தது. மனைவி, குழந்தைகளுடன் விடுமுறையைக் கழிக்க ஒரு தொலைதூர கோடை வாசஸ்தலத்தைத் தேர்ந்தெடுத்து, காரில் புறப்பட்டான். கார் போய்க் கொண்டிருந்தது. அது சற்றும் எதிர்பாராத தொரு சந்தர்ப்பம். ஒரு வளைவில் கார் முந்தும் கணத்தில், அவசரமாக பிரேக் பிடிக்க வேண்டியிருந்தது. வண்டி கிரீச்சிட்டு நின்ற கணத்தில், அவனுக்குத் தன் கதைக்கான மொழி வசப்பட்டு விட்டது!

ஆ! இத்தனை நாள்களாக எப்படி இதை மறந்தேன்! பரவசத்தில் துள்ளிக் குதித்தான்.

சிறிய வயதுகளில் அவனது பாட்டி அவனுக்கு ஏராளமான கதைகள் சொல்வாள். எல்லாமே பேய்க் கதைகள். பிசாசு, பூதங்கள் நிறைந்த திகில் கதைகள். எந்தவித இலக்கணச் சட்டங்களுக்கும் அகப்படாத பாமர கிராமவாசியின் கொச்சையான ஸ்பானிஷ் மொழி. கொலம்பியாவின் மக்களைப் பற்றியும், அரசியல் பற்றியும் எழுதுவதற்கு அதைக்காட்டிலும் ஒரு சிறந்த மொழி நடை வேறு இருக்க முடியாது என்று அவனுக்கு உறுதியாகத் தோன்றி விட்டது!




கோடை விடுமுறைப் பயணம் அந்தக் கணமே ரத்தானது. கார் வீட்டுக்குத் திரும்பிவிட்டது.

அவன் நேரே தன் அறைக்குப் போய் கதவைத் தாளிட்டுக் கொண்டான். "இதை எழுதி முடிக்கும் வரை என்னை எதற்கும் அழைக்காதே" என்று மனைவியிடம் கேட்டுக் கொண்டான். எழுத ஆரம்பித்தான். சுமார் ஒன்றரை வருடங்கள்!

அதுவரை வீட்டை நிர்வகிக்கப் பணம்? அவனுடைய மனைவி சமாளித்துக் கொண்டாள். ஆங்காங்கே கடன் வாங்கிக் குடும்பத்தை நடத்தினாள். வீட்டில் இருந்த பல பொருள்களை விற்றும் தினங்களைக் கடத்தினாள். ஒரு மாதிரி கஷ்ட ஜீவனம் தான். ஆனாலும் அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது. அந்த நாவல் வெளியானால், நடக்கப்போகிற விஷயமே வேறு!

அது நடக்கத்தான் செய்தது. 1967ம் வருடம். 'நூறு வருடத் தனிமை' என்கிற அந்த நாவல் வெளியானபோது, ஒட்டு மொத்த கொலம்பியாவும் வியப்பில் வாய் பிளந்தது. மிகச் சில மாதங்கள்தான். தேச எல்லைகளைக் கடந்து அந்த நாவல் லத்தீன் அமெரிக்க தேசங்கள் அனைத்தையும் சென்றடைந்தது. படித்த அத்தனை பேரும் அது தங்கள் கதை, தங்கள் கதை என்று பரவசப்பட்டார்கள். இப்படியொரு எழுத்தை இதற்குமுன் வாசித்ததே இல்லை என்று கண்ணீர் மல்கச் சொன்னார்கள்.

இன்றுவரை காபிரியேல் கார்ஸியா மார்க்வேஸின் 'நூறு வருடத் தனிமை' வருடம் தவறாமல் மறுபதிப்பு கண்டபடியேதான் இருக்கிறது. ஒவ்வொரு தலைமுறையிலும் பல லட்சக்கணக்கான வாசகர்கள், அந்நாவலுக்குத் தோன்றிய படியே இருக்கிறார்கள். ஒரு எழுத்தாளராக அல்லாமல், மார்க்வேஸை லத்தீன் அமெரிக்காவின் மனசாட்சியாகவே பார்க்கிறார்கள். மாய யதார்த்த எழுத்து என்று இலக்கிய விமரிசகர்கள் அவரது எழுத்து வகைக்கு ஒரு பெயர் கொடுத்தாலும், அவர் சொல்லுவதென்னவோ இதுதான்: "நான் என் பாட்டி கதை சொல்லும் பாணியில்தான் எழுதுகிறேன்."

அந்த விடாமுயற்சியும் கடும் உழைப்பும்தான், ஹெமிங்வே பெற்ற அதே நோபல் பரிசை மார்க்வேஸுக்கும் பெற்றுத் தந்தன.

காப்ரியேல் கார்ஸியா மார்க்வேஸ் இப்போது மெக்சிகோவில் வசித்துக் கொண்டிருக்கிறார். எண்பதை நெருங்கும் வயது. ஆனால் தளராத அதே உற்சாகம். இரு வருடங்களுக்கு முன்னர் அவரது பிரம்மாண்டமான வாழ்க்கை வரலாற்று நூலின் முதல் பாகம் வெளியானது. 'கதை சொல்ல வாழ்கிறேன்' என்கிற அந்நூல், நம் ஊரில் கூடக் கிடைக்கிறது. வாசித்துப் பாருங்கள். அது ஒரு தனிநபரின் சரித்திரம் மட்டுமல்ல. ஒரு தேசத்தின் சரித்திரமும் கூட.

திருச்சி ஜில்லா, முசிறி தாலுகாவில் காவிரிக் கரையில், அரசலூர் என்ற கிராமம் இருக்கிறது. திருச்சியிலிருந்து சேலம் போகும் வழியில் தொட்டியம் என்ற ஊரில் இருந்து ஐந்து கி.மீ தொலைவில் உள்ள இந்த அரசலூரில் நவநீத கிருஷ்ணன் கோவில் உள்ளது. மூர்த்தி சிறியவரானாலும் கீர்த்தி மிக்கவர். ருக்மணி, சத்யபாமா சமேதராக எழுந்தருளியுள்ளார். அக்ரஹாரத்தில் ஒரு கோடியில் சிவன்கோயிலும், மறு கோடியில் இந்த பெருமாள் கோயிலும் இருக்கும். இங்கே மூலவர் ஸ்ரீநிவாசப் பெருமாள். உற்சவர் நவநீத கிருஷ்ணன்.

பலவருடங்கள் முன்னால் ஒருமுறை மூலவர் சிதிலமாகியபோது மறுபடி புதிதாக செய்ய முனைந்தார்கள். ஆனால் எவ்வளவு முறை முயன்றாலும் விக்ரகம் நவநீத கிருஷ்ணனாக வராமல், ஸ்ரீநிவாசராகவே வந்ததாம். எனவே கடவுள் எண்ணம் இதுதான் போலும் என்று ஸ்ரீனிவாசராகவே விட்டு விட்டார்கள். ஆனால், சிலர் உற்சவர் விக்ரகம்தான் இப்படி உடைந்து நவநீத கிருஷ்ணனாகவே வந்தது என்றும் சொல்வார்கள். எப்படியோ, இங்கே மூலவரும் உற்சவரும் வேறு மூர்த்திகள்!



46 வருடங்களுக்கு முன்வரை மேள தாளத்துடன் இரண்டு கால பூஜையும் நடந்து கொண்டு

**வாசகர்கள் கவனத்துக்கு...**
தரமான புகைப்படங்களுடன் அனுப்பப்படும் கோயில் கட்டுரைகள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.
- ஆர்

# ஸ்ரீநிவாசராக வந்த நவநீதகிருஷ்ணன்!

தானிருந்தன. பிறகு ஊர்க்காரர்கள் ஒவ்வொரு குடும்பமாக வெளியே போனதில், கவனிப்பாரற்று கோயில் சிதிலமாகிப் போனது. பகவானும் சற்று ஓய்வாக இருப்போம் என்று எங்காவது போய்விட்டாரா தெரியவில்லை.

கடந்த சில வருடங்களாக ஊர் மக்கள் மனத்தில், கோயிலை சரி செய்ய வேண்டும் என்று தோன்றியது. இந்த எண்ணத்தைக் கொடுத்தவரும் அந்த நவநீத கிருஷ்ணன்தான்.

போன வருடம் பிப்ரவரி மாதத்தில் வேலைகள் ஆரம்பித்து, கோவில் திருப்பணி நன்றாக நிறைவேறியது. சென்ற ஆகஸ்ட் மாதம் முதல் கோயிலில் ஜாம் ஜாமென்று பூஜை நடக்கிறது. 3 நாட்களுக்கு ஹோமங்கள் செய்து, பகவானுக்கு அபிஷேகம் எல்லாம் செய்து, தான தருமங்களுடன் சம்ப்ரோக்ஷணம் ஆனது. கிராம மக்களுக்கும், வெளியே வாழ்ந்தாலும் தம்முடைய ஊர் திருப்பணிகள் நிறைவேற உடல் உழைப்பும், பண உதவியும் செய்த பக்தர்களின் மூத்த, இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கும் மிகவும் திருப்தியாக இருந்தது.

பழைய மனிதர்களைப் பார்த்து சந்தோஷப் படுகிற மாதிரி, நவநீத கிருஷ்ணனை மறுபடி கண்குளிர தரிசித்து சந்தோஷப்படுகிறோம். 46 வருடங்களுக்குப் பின் மறுபடி மேள சப்தம், பூஜை என்று கோயில் களை கட்டியுள்ளது. ஊர் கூடித் தேர் இழுத்துவிட்டார்கள்.

- பத்மா நரசிம்மன், பெங்களூர்






காலங்களில் இவர் வசந்தம். இந்த வசந்தத்துக்கு இப்போது 75 வயது. பவழ விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார். பி.பி.ஸ்ரீநிவாஸ்.

**இசைப் பயணம் :**

'ஜாதகம்' - படத்துல 'சிந்தனையேன் செல்லமே' என் முதல் தமிழ்ப்பாட்டு. மலையாளம், தெலுங்கு, ஹிந்தி, சமஸ்கிருதம்னு பன்னிரண்டுக்கும் மேற்பட்ட மொழிகளில் பாடியிருக்கேன். 'ஊமை விழிகள்'ல ''தோல்வி நிலையென நினைத்தால்'' - பாடினேன். அதுக்கப்புறம் ஒரு பெரிய இடைவேளைக்குப் பிறகு, இப்ப யுவன் இசையில் '7ஜி ரெயின்போ காலனி'யில், 'இது என்ன மாற்றம், இயற்கையின் தோற்றம், அடைமழை பெய்தால், குடை என்ன செய்யும்?' அப்படிங்கிற அருமையான வரிகளைப் பாடியிருக்கேன்.

**எம்.எஸ். விஸ்வநாதன் :**

எங்களுக்கிடையே இருக்கிற பிணைப்பு விவரிக்க இயலாதது. அவரோட இசையில எத்தனை பாட்டு பாடியிருக்கேன்னு என்னாலே கணக்கிடவே முடியாது. ஏன்னா, அவர் எனக்காகவே மெட்டு போடுவாரு. ஆனா, ஸ்ரீநிவாஸ் பாடி, வீணான பாட்டு எதுவுமே கிடையாதுன்னு பெருந்தன்மையா சொல்வாரு. கண்ணதாசனோட உயிரோட்டமுள்ள வரிகளை, எம்.எஸ்.வி. இசையில அதிகம் பாடிய நான், கொடுத்து வைச்சவன்.



• எம்.எஸ்.விஸ்வநாதன்

**நிறைவேறிய ஆசை :**

லதா மங்கேஷ்கர் கூட பாட ரொம்ப ஆசை. 'மே பி லடிகி ஹூ' (நானும் ஒரு பெண்) ஹிந்திப் படத்துல ஏவி.எம். தயவுல அந்த ஆசை நிறைவேறிடுச்க. கஸல் பாடல்கள் மேல எனக்குத் தனி காதல் உண்டு. இரண்டு வருஷத்துக்கு முன்னாடி ஓ.எஸ். அருண் பாட, நான் பாட்டெழுதி, தமிழ் கஸல் கேசட் வெளியிட்டேன்.



• லதா மங்கேஷ்க

• இளையராஜா




# ஜாதகம் முதல்

**இன்றைய இசை :**

'Music' அப்படிங்கிற வார்த்தையில, 'M' ஐ எடுத்திட்டா, 'U Sic'ன்னு ஆயிடும்

M-னா மெலடி. மெலடிதான் என்னைக்கும் நிலைக்கும். இன்றைய இசையில காலத்திற்கேற்ப மாற்றங்கள் நிகழ்ந்துகிட்டு இருக்கு. இப்ப உள்ள 'பீட் சிஸ்டம்' மண்டைய உடைக்கிற மாதிரி இருக்கு. இதயத்தை வருடுற மாதிரி இல்லாம, ஆபாசமா போயிக்கிட்டு இருக்கு. ஆனா எல்லாம் மாறுமே. திரும்பவும் மெலடிகளின் காலம் வரும்.



• ஸ்ரீநிவாஸ்

**ஜெமினி கணேசன் :**

நிறையப் பேருக்குத் தெரியாது ஜெமினி ஓர் அருமையான பாடகர்னு. ஒருமுறை தென் ஆப்ரிக்கா போனப்போ, மேடையில "நான் வாயசைக்க, இப்போ ஜெமினி பாடுவார்"னு திடீர்னு அறிவிச்சேன். அது ஒரு ஹிந்திப் பாட்டு. மேடையில பாடி அசத்திய ஜெமினி, முடிச்சுட்டு வந்து என்னைக் கட்டித் தழுவிக்கிட்டாரு. அவர் நடிச்ச படங்களுக்கு, அவரே பாடியிருக்கலாம். அப்படி ஓர் அழகான குரலுடையவர்.



• ஜெமினி கணேசன்

**இளையராஜா :**

'பாரதி' படத்துல ராஜா பாடுன 'நின்னைச் சரணடைந்தேன்' - எனக்கு மிக விருப்பமான பாட்டு. நான் ராஜா இசையில 'கடவுள் அமைத்த மேடை' படத்துல 'தென்றலே நீ பேசு' - அப்படிங்கிற ஒரே ஒரு பாட்டு மட்டும் பாடியிருக்கேன். ஆனா 'நண்டு' படத்துக்காக, ராஜா இசையில ரெண்டு ஹிந்தி பாட்டுகள் எழுதியிருக்கேன்.

# 7ஜி வரை!

**இன்றைய பாடகர்களின் உச்சரிப்பு :**

எந்த மொழியில பாடினாலும், வார்த்தைகளோட அர்த்தத்தைப் புரிஞ்சிக்கிட்டு பாடுனாதான், பாடலில் ஜீவன் இருக்கும். ஆனா இன்றைய பாடகர்களுக்கு பிற மொழிகளைக் கத்துக்கிட்டு பாடுற அளவு நேரம், பொறுமை இல்ல. அதனால சத்தத்துக்கு பாடிட்டுப் போயிடறாங்க. பாடல்கள் நிலைக்கிறதில்ல.

**தமிழ் பாதுகாப்பு இயக்கம் :**

ஆங்கில மொழி இன்னைக்கு இப்படி வளர்ந்ததுக்குக் காரணம், அம்மொழியோட வளைந்து கொடுக்கும் தன்மை. பிறமொழி வார்த்தைகளையும் தன்னோட இணைச்சுக்கிட்டு இப்போ பல புதையல்களோட இருக்குது. ஆனா தமிழ்ல அந்தத் தன்மை இல்ல. அதனால புதிய எழுத்துக்களை, பிற மொழிகளுக்கு ஈடுகொடுக்கும்படி தமிழ்ல உருவாக்கணும். அப்போதுதான் தமிழ் மேலும் வளரும். பரவும். புதிய எழுத்துக்களை உருவாக்குவதன் மூலமா, இசைக்குறிப்புகளைக் கூட தமிழிலேயே எழுதலாம். அதே மாதிரி கதைக்குத் தேவையான பட்சத்தில், பொருத்தமான வேறு மொழி தலைப்பையே தமிழ்ப் படங்களுக்கு வைக்கலாம். தப்பில்ல!

சந்திப்பு, படம் : முகில்

# கலாட்டா கணக்கு!






**எழில்:**


சுத்தமான தமிழ் வார்த்தைகளால் நெய்யப்பட்ட தமிழ்த் தளங்களைப் பார்க்கும்போது தனி உற்சாகம் வரத்தான் செய்கிறது. பல வெளி நாடு வாழ் இந்தியர்கள் அமைத்துள்ள தளங்கள், சினிமாவை மையப் படுத்தியே அமைந்திருக்கின்றன. ஆனால் சில தளங்கள் எழில்மிகு தமிழால் அசத்து கின்றன. அந்த வகையறாவைச் சேர்ந்தது தான் ezilnila.com (யுனிகோடில் அமைந்த தளம்) சுவையான சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், குறள் வழி நிகழ்வுகள், பழம் பாடல்கள், கணினிக் கட்டுரைகள் என மிளிர்கிறது. சமீபத்தில் வெளியிடப்பட்ட தமிழ் மென்பொருள் கருவிகளைக்கூட இத்தளம் வழியே இறக்குமதி செய்து கொள்ளலாம்.

**டௌன்லோட்:**

எம்பி 3 -ஐ வெட்ட, ஒட்ட, நீங்க தட்ட வேண்டிய முகவரி www.yaosoft.com/products/mp3splitter.exe. இலவசமாகக் கிடைக்கும் இந்த மென்பொருளை உபயோகித்து, ஒரு பெரிய எம்பி3- ஃபைலை சரிசமமாக வெட்டிக் கொள்ளலாம். வேறு வேறு எம்பி3 பைல்களை தேவைக்கேற்ப ஒட்டிக் கொள்ளலாம். உபயோகிக்கும் முறையும் ரொம்ப எளிதானது. அப்புறமென்ன, வெவ்வேறு இசை வடிவங்களை பசை போட்டு ஒட்டி, ஆசையா ஆட்டம் போடுங்கோ!

**கணக்கு:**

'அய்யோ - கணக்கா.. உவ்வே! பாடமா அது? அதைப் படிக்கறதுக்கு சந்நியாசம் வாங்கிட்டுப் போயிரலாம்'னு புலம்பற கணக்குக் காய்ச்சல் பார்ட்டியா நீங்க? easymaths.comக்கு வாங்க. சின்னச் சின்ன ட்ரிக்ஸ் மூலமா கரடு முரடான கணக்கை, கலாட்டா ஐஸ்க்ரீமா மாத்த வழி சொல்றாங்க! 'ஐ லவ் அல்ஜீப்ரா'னு நீங்க சந்தோஷப் பட, பிணக்கு இல்லாம கணக்கு பண்ணுங்க இத்தளத்தை!




**திருத்தம்:**

போன வாரம் வெளிவந்த யுனிகோட் தேடல் தளத்துக்கான முகவரியை jaffnalibrary.com என திருத்திக் கொள்ளவும்.

- ப்ரேஸர்

**வலைபாயுதே**

# நந்தி தரிசனம்!

## மூணு முழமும் முப்பது முழமும்

திருப்புனவாயில் நந்தியும் மூலலிங்கமும் ஆவுடையாரும் மிகப் பெரியன. சுவாமிக்கு மூன்று முழ உடை வேண்டும். ஆவுடையாருக்கு முப்பது முழ உடை வேண்டும். மூன்று முழமும் அருகன்னு முப்பது முழமும், புருகன்னு என்னும் பழமொழி இத்தலத்துக்கு உரியது.

## பின்புறம் திரும்பிய நந்தி

திருவத்திபுரம், திருவலம் ஆகிய தலங்களில் நந்தி சுவாமியை நோக்கி இல்லாமல் பின்புறமாகத் திரும்பி வெளி வாயிலைப் பார்த்து உள்ளது. அதைப்போல வட திருமுல்லைவாயில் கோயிலில் நந்தி கருவறையை நோக்கி அமராமல் கொடி மரம் நோக்கி அமர்ந்துள்ளது.

## பெரிய கோயில் நந்தி

தஞ்சை பெரிய கோயிலில் உள்ள நந்தி ஆறு மீட்டர் நீளமும், 2.5 மீட்டர் அகலமும், 3.66 மீட்டர் உயரமும் உடையது. ஒரே கல்லில் ஆனது. அதைப்போல திருவாவடுதுறை நந்தி மிகப் பெரிய நந்தி. 'படர்ந்த அரசு, வளர்ந்த ரிஷபம்' என்பது பழமொழி.

## சிவசைலம் நந்தி

சிவசைலம் நந்தியை சிற்பி வடித்துக் கொண்டிருந்தபோது கல் நந்தி உயிர் பெற்று எழுந்து ஓட முயன்றதால், சிற்பி உளியால் அதன் கொம்புகளுக்கிடையே தட்டினாராம். நந்தி உடனே பணிந்துவிட்டது. இக்கோயிலில் முன்னங்கால்களை உயரத் தூக்கி நிற்க முயல்வது போல் நந்தி அமைந்துள்ளது. தலையில் சிற்பி உண்டாக்கிய காயமையமும் உள்ளது. எவ்வளவு எண்ணெய் ஊற்றினாலும் நந்தி அப்படியே உறிஞ்சிக் கொள்கிறது.

## பெங்களூர் நந்தி

பெங்களூர் பசவன் குடியில் நந்தி 15 அடி உயரத்தில் முறைத்துப் பார்த்தபடி படுத்திருக்கும். ஆனி மாத வியாழக்கிழமைகளில் பசவருக்கு கடலைக் காய் நைவேத்தியமும், கடலை வெல்லம் உருண்டையாலான மாலையும் அணிவிப்பர். கார்த்திகை சோம வாரத்திலும், 'கடலைக்காய் பரிஷே' எனும் விழா நடைபெறும்.

## விலகிய நந்தி

நந்தனாருக்குத் தரிசனம் தர இறைவனே நந்தியை விலகி இருக்கக் கூறியதால் திருப்புன்கூரில் நந்தி விலகி இருக்கிறது.



## நந்தித் திருமணம்

திருமழபாடி வச்ரத்தம் பேசுவார்க் கோயிலில் பங்குனி புனர்வசு நட்சத்திரத்தன்று பெருமாளுக்கும் சுயம்பிரகாசைக்கும் திருமண விழா நடந்தேறுகிறது. ஐயாறப்பரும் அறம் வளர்த்த நாயகியும் புதுமணத் தம்பதியை அழைத்துக் கொண்டு ஆறு ஊர்களுக்கும் சென்று வருகிறார்கள்.


- சரஸ்வதி பஞ்சு

கோபு பெரிய சோம்பேறி என்று பிரசித்தி பெற்றவன். அவன் ஒரு சமயம் படுத்துக் கொண்டிருந்த படுக்கையின் கீழே, அன்றைய தினசரிப் பத்திரிகை அகப்பட்டுக் கொண்டிருந்தது. அவனுக்குப் பத்திரிகை படிக்க விருப்பம். ஆனால் எழுந்திருந்து பத்திரிகையை எடுத்துக் கொள்ளும் அளவுக்குச் சிரமப்பட

# கலாட்டா!

இஷ்டமில்லை. ஆகையால் படுத்தபடியே கையைப் படுக்கையின் அடியில் கொடுத்து, பத்திரிகையைத் துண்டு துண்டாகக் கிழித்தெடுத்து, அந்தத் துண்டுகளை வாசித்து வாசித்து, விட்டு எறிந்து கொண்டிருந்தான்.

அந்த நிலைமையில் அவனைப் பார்க்க அவன் சிநேகிதன் மணி வந்தான். கோபு பத்திரிகை படிக்கும் லட்சணத்தைப் பார்த்துவிட்டு, அவனுடைய சோம்பேறித்தனத்தைப் பற்றி 'லெக்சர்' செய்யத் தொடங்கினான். உபந்நியாஸம் முடிவதற்குள், வெளியில் ஏதோ தடபுடல் சத்தம் கேட்டது. "ஐயோ! பூட்டானே!" "பாவிப்பயலுக்கு வந்துவிட்டதே காலம்!" என்றெல்லாம் கூக்குரல் கேட்டது. படுத்திருந்த கோபு சட்டென்று எழுந்திருந்து வெளியே சென்றான். மணியும் கூடப் போனான். அவர்கள் இருந்த வீட்டுக்குப் பக்கத்தில் ஓர் ஓடை. அதன் பிரவாகத்தில் நீந்தத் தெரியாதவன் ஒருவன் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தான். கரையில் ஏராளமான ஜனங்கள் கூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் "ஆச்சு; இரண்டு தடவை முழுகி எழுந்துவிட்டான்:



இன்னொரு தடவை முழுகினால் பட்!" என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

அதே சமயம் 'டப்' என்று ஒரு சத்தம் கேட்டது. என்ன ஆச்சரியம்! அந்தப் பெயர் போன சோம்பேறி கோபு ஓடையில் குதித்து நீந்துகிறான். இதோ முழுகுகிற மனிதனிடம் நெருங்கி விட்டான். அவன் சிண்டை ஒரு கையால் பிடித்து இழுத்துக் கொண்டு, இன்னொரு

கையால் நீந்தி வருகிறான். பாவம்! கை சளைத்து விட்டது போலிருக்கிறது. கரையேறுகிறான். கரையேறியதும் மூர்ச்சித்து விழுகிறான்!


மணியும் இன்னும் இரண்டொருவரும் தண்ணீரில் முழுக இருந்த மனிதனைக் கவனிக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாரும் அவனைக் காப்பாற்றிய கோபுவைச் சூழ்ந்து கொள்கிறார்கள். அவனை மூர்ச்சை தெளிவிக்கச் செய்த முயற்சியெல்லாம் பலிக்காமல் போகவே, எல்லாருமாய்ச் சேர்ந்து தூக்கிக் கொண்டு போய் அவனுடைய வீட்டில் போடுகிறார்கள். இதை அறிந்த மணி ஓடிவந்து, அவர்களையெல்லாம் வெளியில் போகச் சொல்கிறான். அவர்கள் போனார்களோ, இல்லையோ, கோபு கண்ணைத் திறந்து "அவன் பிழைத்தானா?" என்று கேட்கிறான். "பிழைத்தான்; ஆனால் நீ திடீரென்று எப்படி மூர்ச்சை தெளிந்தாய்? மூர்ச்சை போட்டதாகப் பாசாங்கு செய்தாயா?"

"ஆமாம், பாசாங்குதான்."

"எதற்காக?"

"சும்மாக் கும்பல் போட்டுக் கொண்டிருந்த முட்டாள்களுக்குக் கொஞ்சம் வேலை கொடுக்கலாமென்றுதான். அவசியமான காரியம் எதுவோ, அதை அவர்கள் செய்ய மாட்டார்கள்; அநாவசியமான காரியங்களைச் செய்வார்கள் என்று எனக்குத் தெரியும்" என்றான்.

- **கல்கி களஞ்சியத்திலிருந்து,**
**வானதி பதிப்பகம்**






‘உல்லாச ரதம்’ என்ற செல்லப் பெயரோடு சிவகாசி நகருக்குள் ஓடிக் கொண்டிருந்த ‘தேன் நிலா’ மினி பஸ் டிரைவர் கலிவரதனை, அந்த பிளாஸ்டிக் மிளகாய்ப் பழத் தோரணம் வெகுவாக ஈர்த்துவிட்டது.

கூப்பிட்டு விலை கேட்டான். ஐம்பது ரூபாய் சொன்னான் வியாபாரி.

பத்து ரூபாய் குறைத்து, நாற்பதுக்கு வாங்கி தலைக்கு மேல் தொங்கவிட்ட டிரைவருக்கு சந்தோஷம். ஆனால் அருகில் இருந்த கண்டக்டர் கணபதிக்குத்தான் வேதனையாய் இருந்தது. விவசாய ரத்தமல்லவா அது! விருட்டென்று சூடேறவும் செய்தது.

நிஜ மிளகாய் வத்தலை விளைய வைக்கிற விவசாயிகூட, இவ்வளவு சுலபமா விற்க முடியலியே?

# பிளாஸ்டிக் மிளகாய்



பிளாஸ்டிக் மிளகாயை அவன் சொன்ன விலைக்கு இவ்வளவு சீக்கிரமா வித்துடறானே? விவசாய நாடுதானா இது?

கணபதியின் மனம் கண்ணீர் விட்டது. ஒரு சிற்றுந்துவில் இன்று கண்டக்டராய் ஓடிக் கொண்டிருந்தாலும், அவனது கடந்த காலம் கம்பு சோளம் பருத்தியோடு தானே கழிந்தது?

எண் சாண் உடம்பையும் வெயில் சாட்சியாய் வியர்வையில் ஊற வைத்தாலும்கூட, ஒரு சாண் வயிறு நனைய உத்தரவாதம் தராத விவசாயத்தை, எவ்வளவு காலம்தான் கட்டி அழுவான் கணபதி?

காலுக்கு வராத செருப்பைக் கழற்றி எறிவதைப் போல, ஐந்து ஏக்கரையும் உதறிவிட்டு சிவகாசிக்கு வந்தான்.

விவசாயத்தில் அடிபட்டு அழுது வரும் பிள்ளையை, வா வா என்று அன்பாய் அழைத்து ஆதரவாய் அதன் முதுகு தடவி, தன் பட்டாசுப் புடைவையால் அதன் கண்ணீர் துடைப்பது சிவகாசித்தாயின் வழக்கம்.

கணபதியின் அப்பா பெருமாள் பிள்ளை இருந்த காலத்தில் ஐந்து ஏக்கர் காடுமே ஒரு பச்சைக் கம்பளம் விரித்ததுபோல், பசுமைப் புரட்சி பண்ணத்தான் செய்தது.

எந்நேரமும் ஈரம் குறையாத நீள நீள வாய்க்கால்கள்,

வே.குருநாதன்

களை முளைக்காத சதுரச் சதுரப் பாத்திகள்.

கத்திரிப் பூக்களும் மிளகாய்ப் பூக்களும், வீசும் காற்றுடன் பேசிச் சிரிக்கிற வெள்ளாமைக்காடு.

வாய்க்காலில் மகனை நடக்கவிட்டு பின்னால் நடப்பார் பெருமாள் பிள்ளை.

செடிக்கு வலிக்காமல் கத்தரிக்காய் பறிக்கவும், கொடிக்கு நோகாமல் அவரைக்காய் பறிக்கவும், வெண் பூக்கள் சிந்தாமல் மிளகாய் பறிக்கவும், பொறுமையாய் உட்கார்ந்து புல் பூண்டு பிடுங்கவுமாய் தன் பிள்ளைக்கு, ஒவ்வொரு விடியலிலும் விவசாயம் கற்பித்தார் பெருமாள் பிள்ளை.

"என் பிள்ளை டாக்டரா வர வேண்டாம், இஞ்சினியரா வர வேண்டாம், வக்கீலா வரவேண்டாம், வாத்யாரா வர வேண்டாம். ஒரு நல்ல விவசாயியா வளந்தாலே போதும். நாப்பது வீட்டுக்குச் சோறு போடுவான்."

பெருமாள் பிள்ளை இப்படிச் சொன்னது மட்டும் எட்டாயிரம் தடவையாவது இருக்கும்.

"நீயே விதைச்சு.. நீயே தண்ணீர் பாய்ச்சி, உட்கார்ந்து களை பிடுங்கி, ஓடி





# அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி –2005

படைப்பாளிகளுக்கும் வாசக எழுத்தாளர்களுக்கும் மாபெரும் வாய்ப்பு!

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | - ரூ. | 10,000 |
| இரண்டாம் பரிசு | - ரூ. | 7,500 |
| மூன்றாம் பரிசு | - ரூ. | 5,000 |

கடைசித் தேதி : **ஜூன் 15**

* பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. **500** சன்மானம் பெறும்.

விதிமுறைகள், மற்ற விவரங்களுக்கு **17.4.2005** இதழ் கல்கியைப் பாருங்கள். அல்லது அடுத்த இதழுக்குக் காத்திருங்கள்.

- ஆர்

யாடி உரம் போட்டு, ஆள் உசரத்துக்கு ஒரு சோளக்கருது வளந்த பிறகு அதோட தலைய வருடிப்பாரு. அந்த சுகமே தனிடா... அதை நீ அனுபவிச்சுப் பாத்தா தான் புரியும்டா...''

என்று இளம் மகனின் விவசாய ரத்தத்தின் வெப்பத்தைக் கூட்டினார். விளைய வைத்து, அதற்கு அவனே விலையையும் வைத்து, வியாபாரியை நாலு தடவை அலைய விட்டு... விற்றுப் பணம் எண்ணும் பிள்ளையைப் பெருமிதமாய்ப் பார்ப்பதற்கு அவர் காத்திருந்தார்.

அவர் விதிக்கு என்ன அவசரமோ? ஐந்தாறு வியாதிகளை அவருக்கே தெரியாமல் அவருக்குள் அனுப்பி வைத்தது. சட்டென்று படுக்க வைத்து சடார் என்று கூட்டிச் சென்றது. அவர் இறந்த வருஷம் முழுவதும் மழை இல்லை.

'இந்த வருஷமும் கிடையாது' என்று அடுத்த வருஷமும் ஆகாயம் கை விரித்தது. காடு கரைகளின் முகம் சுருங்கிப் போனது. நெருஞ்சிக் காடுகளாய் நிலங்கள் தூங்கி விழுந்து கொண்டிருந்தன.

கணபதி ஐந்து ஏக்கர் நிலத்தை மறந்து விட்டு சிவகாசிக்குப் போனான். உள்ளூர் நாடார் ஒருவரின் உறவினரான சிவகாசி நாடாரின் மினி பஸ்ஸில் கண்டக்டராய் ஏறிக் கொண்டான். அவன் காலம் நகர்ந்தது.

அடிக்கடி வானத்தை அசிங்கமாய் வைவான். காய்கறிச் சந்தையைப் பார்த்து பெருமூச்சு விடுவான். மறு வருஷம் மழை பெய்தது. அவனது கிராமம் தனது காடு கரைகளைத் தட்டி எழுப்பியது. கலப்பைகளின் தூசு தட்டியது. ஆனால் கணபதிக்குத்தான் விவசாயம் வெறுத்துப் போனது.

கிராமத்துக்குப் போகும் போதெல்லாம் அவனது ஐந்து ஏக்கர் வேலிக்காடுகள் அவனைத் தலை கவிழ வைக்கும்.

"வாடா வா. இப்ப உனக்குத் திருப்தி தானா? உங்க அய்யா இருந்த காலம் எப்படி இருந்த நான், உன் காலத்துல இப்படி ஆய்ட்டனேடா. பாவி... என்னை விளைய வைக்க உனக்கு ஆண்மை இல்லையாப்பா. உன் வயிற்றைக் கழுவ ஒரு வேலை தேடிப் போய்ட்டியாக்கும்? நல்லாயிரு..''

என்று வயிற்றெரிச்சலோடு அவனை ஆசிர்வதித்தது ஐந்து ஏக்கர் வேலிக்காடு.

"என்னப்பா கணபதி? நீ ஆயிரம் சொல்லு. உங்க அப்பா இருந்தா இப்படி வேலிக் காடாக்கி வச்சிருப்பாரா அஞ்சு ஏக்கரையும்? தாயில்லாப் பிள்ளையப் போல தறு தலைக்காடாக் கிடக்குதப்பா... நீ தண்ணி பாய்ச்ச வேண்டாம். உழுது போட்டு உண்டானதை விதச்சுட்டுப் போ. வானம் பாத்த வெள்ளாமையா இருக்கட்டுமே. அதையுமா நீ செய்யக் கூடாது? அப்படியென்னடா விவசாயத்து மேல உனக்கு வெறுப்பு?"

ஊர் அவனை உரிக்கத்தான் செய்தது.

மரணப் படுக்கையில் கிடந்த அவன் அம்மாவும்கூட, அவனை அருகில் வரும்

படி அழைத்தாள்.

"என்மேல ஏன் இவ்வளவு அன்பா அக்கறையா இருக்க? நான் உன் அம்மா. அதனால தானப்பா? அந்த அஞ்சு ஏக்கர் நில நாச்சியாளும் உன் அம்மா தான்ப்பா. உங்க அப்பா மனசுல அந்த மண் மகராசிக்குத்தான் முதலிடம். செல்லமா வச்சிருந்தாரு."

"எவ்வளவோ கஷ்டங்கள் வந்திச்சு. வந்தாலுமே அந்த நிலத்தைச் சிந்தாமச் சிதறாம உன் கையில ஒப்படைக்கலியா? எதுக்கு? நீ அதைப் பராமரிச்சு பாடுபடுவேங்கிற நம்பிக்கையிலதான்.

"என்னைப் பட்டினி போடுவியா? மாட்டேல்ல? அப்புறம் ஏன்ப்பா அந்த நிலத்துக்கு விதை இல்லாத பட்டினி? உழவு இல்லாத தண்டனை?"

அவன் அம்மா தன் நோயையும் மறந்து எழுந்து உட்கார்ந்து மகனிடம் இவ்வளவும் பேசிய களைப்பில் இருமிய போது அவளை மெல்லப் படுக்க வைத்த கணபதி, தனிமையில் உட்கார்ந்து யோசித்தான்.

யோசித்தது போதும் என்பது போல் அவன் யோசனைக்கு கடிவாளம் போட்டாள் அவன் மனைவி.

"என்னமோ வெவசாயம் பண்ணி உங்க அய்யா கோடி கோடியா வச்சுட்டுப் போன மாதிரித்தான் உங்க அம்மா பேசுது. பேசாம அஞ்சு ஏக்கரையும் அந்தப் பால்சாமிக்கே தட்டி விடுங்க. அம்பதாயிரம் திகஞ்சாலும் சரி. முடிச்சிருங்க. நாலு பவுன் நகைக்காவது வழி பண்ணுங்க. நல்லது கெட்டதுன்னா நாலு இடம் போக முடியல, வர முடியல. வெறுங்கழுத்தோட வெக்கங் கெட்டு அலையுறேன்ப்பா. சேவலமா இருக்கு."

அவன் மனைவி இந்தக் கோரிக்கையை விரித்த பாயிலும் விடாமல் படித்தது வீண் போகவில்லை. பால்சாமி வீட்டுக்கு வழி விசாரித்தான் கணபதி.

அந்தப் பால்சாமி ஒரு காலம் நிலம் கேட்டுக் கேட்டு பெருமாள் பிள்ளையின் வீட்டுக்கு காவடி எடுத்தவன்தான்.


"ஒரு லட்சம் தர்றேன்யா. ஒன்னரை ரெண்டு.. ரெண்டரை..."

"முடிவா மூணு லட்சம் தர்றேன்... முதலாளி... கொடுங்க எனக்கு..." என்று பெருமாள் பிள்ளையின் கால் பிடிக்காத குறையாய்க் கெஞ்சியவன்தான் பால்சாமி.

"நீ கோடி கொடுத்தாலும் நிலம் கிடையாது. அது எங்க அய்யா எனக்குத் தந்த சொத்து. அதைச் சிந்தாமச் சிதறாம என் பிள்ளை கையில ஒப்படைக்கணும். நாணயங்கெட்ட தனமா வித்துத் தின்னுட்டேன்னா, நாளைக்கு காறித்துப்புவானே என் பிள்ளை..'' என்று இதே பால்சாமியை தன் அப்பா விரட்டியடித்த காட்சியும் கூட கணபதியின் கண்ணை விட்டுப் போகவில்லை. கண் கலங்கினான்.

பால்சாமியிடம் சரணடைந்தான். விவரம் கேட்ட பால்சாமி வெறுஞ்சிரிப்பால் விடை கொடுத்தான். மறு நாள் விலை கேட்டான். கணபதி விலை சொன்னதுமே கடுமையான மௌனம் சாதித்தான்.

"என்ன பேச்சக் காணும்? விலை அதிகம்னு நினைக்கிறியா? நீ கேள்.. கேளுய்யா. விக்கணும்ங்கிற முடிவுல வந்திருக்கேன் நான். வித்துதான் ஆகணும். வேற வழியில்ல.."



"இந்த சீரியல் பாக்கறத விட்டுட்டியாமே... ஏன்?"

"ஐந்து வருடங்களுக்குப் பின்புன்னு டைட்டில் போட்டு திடீர்னு என் வயசைக் கூட்டிட்டாங்களே!"

- அம்பை தேவா

கணபதியின் இந்த வெள்ளைச் சொற்களையே கைப்பிடியாகவும் கால் மிதியாகவும் பயன்படுத்தி, உச்சியில் ஏறி உட்கார்ந்து கொண்டான் பால்சாமி.

நிறைய அலைய வைத்தான். அலைச்சல் அதிகமாய் இருக்க இருக்க, விலையைக் குறைத்தான் கணபதி.

“உங்க நிலத்தைப் போய்ப் பார்த்தேன். நிலமா அது? ச்சய். குப்பைக் கிடங்குக்குக் கூடப் பெறாது. அது ஒரு நிலம்னு அதுல விவசாயம் பண்ணிட்டாராம் உங்க அய்யா. சும்மா கொடுத்தாலுமே வாங்க மாட்டாங்க!”

“போதும் நிப்பாட்டுடா” என்று ஒரே கத்தலில் கை விரல் நீட்டி எச்சரித்தான் கணபதி.

மூன்று சொடக்கு மட்டும் போட்டான். “மூணே மாசம். அங்க வந்து நின்னு பார். இப்ப வைகாசி. புரட்டாசியில வந்து பாருடா. வரலேன்னா வந்து அடிச்சுத் தூக்கிட்டுப் போயிடுவேன் ராஸ்கல்.”

மறுநாளே பத்துப் பேரைத் திரட்டிக் கொண்டு அந்த வேலிக்காட்டில் இறங்கிய கணபதி, உறங்கிய கரிசல் மண்ணைத் தட்டி எழுப்பினான். புரண்டு படுத்த கறுத்த மண், குழைவு கொடுத்து அவன் வியர்வைக்குச் சிணுங்கியது. விதைப்புக்கு இறங்கியது. அவன் ரோஷத்தை, ரோஷத்துடன் கூடிய கோபத்தை ஆசிர்வதிப்பதுபோல் ஐந்தாறு மழையும் பெய்தது. அவ்வளவு தான்.

பச்சைப் பசேலென்று அவன் பூமி பசுமைக் கும்மியடித்தது. நீள வாய்க்காலில் தன் பிள்ளையை நடக்கவிட்டு, பின்னால் போய் ஓட்டம் ஓடிய கணபதி, தற்செயலாய்த் திரும்பியபோது பால்சாமி நிற்பதைக் கண்டான்.

“வாய்யா வா! நிலத்தைப் பாத்தியா? மரகதப்பாய் விரிச்ச மாதிரி மிளகாய் நாற்றுப் பாத்தி. இதுல கால் வைக்கக் கூட உனக்குத் தகுதி காணாது. நீ கோடி கோடியாக் கொடுத்து தலை கீழா நின்னாலும் சரி. ஒரு பிடி மண் உனக்குக் கிடையாதுடா... ஓடிப் போயிரு. பெருமாள் பிள்ளை மகனா, கொக்கா? அவர் நிலத்தை வாங்க அந்தக் குபேரனே வந்தாலும் கிடைக்காதுடா. நீ என்னடா ஜுஜுபீ... ச்சீ... போடா..” விரட்டினான்.

நிலத்தைச் சுற்றி வந்த பால்சாமி, தென்கோடி மூலையில் இருந்த பெருமாள் பிள்ளையின் கல்லறையைத் தொட்டு வணங்கினான்.

“என்னை மன்னிச்சிடுங்க முதலாளி. உங்க விவசாய ரத்தம்தான் அது. கொஞ்ச நாள் சூடு கொறஞ்சு குளிர்ந்துபோயி உறஞ்சு போற அளவுக்கு உறங்க ஆரம்பிச்சிருச்சு. அந்த ரத்தத்துல சூடேத்திக் கொதிக்க விட்டு, விஸ்வரூபம் எடுக்கணும்னுதான் உங்களையும் உங்க நிலத்தையும் பழிப்பது போல் ஒரு பாவனை காட்டினேன். என் நடிப்பு ஜெயிச்சிருச்சு. உங்க விவசாய ரத்தம் இன்னமும் ஒரு பத்துத் தலைமுறைக்குப் பாயும்..”

கண் கலங்கி வணங்கிச் சென்ற பால்சாமியை கவனிக்காமலே...

செடியை மிதிக்காமல் பாத்திக்குள் நடப்பது எப்படி என்று, மகனுக்கு நடை கற்பித்துக் கொண்டிருந்தான் புதிய கணபதி. ●



## சினி... மினி!

வீட்டிலேயே அதிநவீன ஜிம் வைத்திருக்கிறார் ஜோதிகா!

‘நான் கடவுள்’ படத்துக்காக ‘ழ’கர சுத்தமாகப் பேசிப் பழகுகிறார் அஜித்!

நடிகர் பிரசாந்துக்கு பியானோ வாசிக்கத் தெரியும்.

# ரஜினிக்கு சந்திரமுகி வளர்பிறைதானே..?

● எஸ்.பி.பாலு, சென்னை - 24

? பாக். கிரிக்கெட் வீரர்களை வழியனுப்ப இந்தியா சார்பில் யாருமே போகவில்லையே... இது தான் இந்தியப் பண்பாடா?

! இது இந்தியப் பண்பாடு அல்ல... வயிற்றெரிச்சலின் வெளிப்பாடு. இந்தியப் பண்பாட்டைக் கடைப்பிடித்து நம்மவர் செயல்பட்டிருந்தால், அது பாகிஸ்தானில் இன்ஸமாம் அண்ட் கோவுக்குக் கிடைத்த மகத்தான வரவேற்பை விடவும் உயர்ந்ததாக இருந்திருக்கும்.

● எம். மாதவன், சிதம்பரம்

? தமிழகத்தில், வரும் சட்டசபைத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் பா.ஜ.க. தனித்துப் போட்டியிடுமாமே..?

! இரண்டு - மூணு - நாலு தொகுதிகளிலாவது வெற்றி கிட்டினால் சரி.

● ஜெ. மல்லிகா, சந்தனப்பள்ளி

? 'உங்களுக்கும் பணி இல்லை; எனக்கும் இல்லை. எனவே நீங்களும் என்னோடு சேர்ந்து தவம் இருக்க வருக' என்று உமாபாரதி வாஜ்பாய்க்கு அழைப்பு விடுத்துள்ளது பற்றி..?

! பணியில் இருந்தபோது அதை ஒரு தவமாகக் கருதி செயல்பட்டிருந்தால் இன்று 'பணியில்லை' என்று கூறி தவத்தை ஒரு பணியாக்கும் நிர்ப்பந்தத்துக்கு உமாபாரதி ஆளாகியிருக்க மாட்டார்.

● கே.வி.ராமன், புதுடெல்லி - 1.

? பத்திரிகைகள் சுதந்திரமாக, நடுநிலைமையுடன், மக்கள் நலனுக்காகச் செயல்படுவது ஓர் அற்புதமான விஷயமில்லையா? அவற்றுக்கு மேலும் மேலும் கவர்ச்சியைக் கூட்ட வேண்டிய அவசியமென்ன?

! பத்திரிகைகளின் பணி மக்கள் நலன்



• வேடிக்கைப் பிரார்த்தனை!





• புதுப்பிக்கும் பருவம்!

**நீங்கள் கேட்டவை**

**-தராசு**

பேணுவது. அதில் கேளிக்கை ஒரு சிறிய அம்சம்தான் என்பது மாறி, 'பத்திரிகைகளின் பணி கேளிக்கை ஊட்டுவது; அதில் மக்கள் நலன் பேணுவது அவசியமில்லை' என்று ஆகிவிட்டது இன்று... சுருக்கமாய்ச் சொல்லணும்னா வெறும் வியாபாரம்.

● **ஆர். நாகராஜன், சென்னை - 117**

***? ஓய்வு பெறும் நேரத்தை நெருங்கி விட்டாரா டெண்டுல்கர்...?***

! இல்லை; தம்மைப் புதுப்பித்துக் கொள்ளும் நேரத்தை நெருங்கிவிட்டார்.

● **ஆர்.ஆர்.பூபதி, திண்டுக்கல்.** *

***? காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டியில் இடைத்தேர்தல் நடந்தாலும், விரைவில் வரவிருக்கும் சட்டசபைத் தேர்தலின் போது இவ்விரண்டு தொகுதிகளிலும் மீண்டும் தேர்தல் நடக்குமே... நம் வரிப் பணம் இப்படியா வீணாக வேண்டும்...?***

! ஒரு பகுதி வாழ் மக்களின் குரலுக்குப் பிரதிநிதித்வம் இன்றி சட்டசபையோ நாடாளுமன்றமோ இயங்குவது நியாயமல்ல என்பதால் இடைத்தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. தேர்வாகி வருவோர் சிறப்பாகச் செயல்படுகிறார்களெனில் வரிப்பணம் வீண் அல்ல; money well spent.

● **என்.பாலகிருஷ்ணன், மதுரை - 1**

***? புதிய வீராணம் திட்டம் வாபஸ் ஆனது விவசாயிகளின் வெற்றியா? ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட தோல்வியா...?***

! விவசாயிகளுக்கு வெற்றிதான்; ஆனால் ஜெயலலிதாவுக்குத் தோல்வி என்று சொல்லிவிட முடியாது. நீதிமன்ற ஆணை என்கிற ஆதரவு இருந்தும் மக்கள் மனநிலையை மதித்து முடிவை மாற்றிக் கொண்டதும் வெற்றிதான்.

● **பொன்விழி, அன்னூர்**

***? புதிய போப் பதினாறாவது பெனடிக்ட் பற்றி...?***

! இவ்வளவு பெரிய பொறுப்புக்கு ஒருவர் தேர்வாகும்போது சர்ச்சைகள் சூழ்வது வாடிக்கை. தாம் போப்பாகத் தேர்வாகிவிடக் கூடாது என்று அவர் பிரார்த்தித்ததாகவும் கடவுள் தமது பிரார்த்தனைக்குச் செவி சாய்க்கவில்லையென்றும் அவர் சொல்லியிருப்பது ரொம்ப வேடிக்கை!

● **எச். ஆன்டனி தமிழரசன், மும்பை - 17**

***? சங் பரிவார் அமைப்புகள் தாங்கள் நேற்றுவரை தூக்கிக் கொண்டாடிய அத்வானி-வாஜ்பாய் மீது இத்தனை முரட்டுத்தனமாகப் பாய்வது ஏன்?***

! தங்களது கொள்கையான ஹிந்துத்வ பிரசாரத்தில் 'கட்சி' சற்றே சுணங்கினாலும், பா.ஜ.க கட்டுப்பாட்டு நிலையங்களான பரிவார் அமைப்புகள் கடுக்காய் கொடுக்கும்!

● **அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி - 21**

***? இந்தியா முழுவதும் இரண்டாயிரம் தாலுகா ஆஸ்பத்திரிகள் 24 மணி நேர ஆஸ்பத்திரிகளாக மாற்றப்படும் என்று மத்திய அமைச்சர் டாக்டர் அன்புமணி சொல்லியிருக்கிறாரே?***

! இருபத்துநாலு மணிநேர லஞ்ச - ஊழல் நிலையங்களாக மாறாது என்பதற்கு உத்தரவாதம் அளிப்பாரா?

● **வீ.முத்தையா, திருநெல்வேலி டவுன்**

***? பா.ஜ.க-ஆர்.எஸ்.எஸ் கருத்து முரண்பாடுகளுக்குப் பத்திரிகைகளே காரணம் என்கிறாரே அசோக் சிங்கால்?***

! ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி. இவர்கள் சண்டை போட்டுவிட்டு பத்திரிகைகளைக் குறை சொல்வது வழக்கமே ஆகிவிட்டது!

● **வே. முருகேசன், சென்னை - 88**

***? லாலுவின் கார் அடித்து நொறுக்***

❑ ரூ. 100/- பரிசு பெறுபவர்:

**கே.வி.ராமன்**
**5 L.F. பாபர் பிளேஸ்,**
**பெங்காலி மார்க்கெட் அருகில்**
**புதுடெல்லி - 110 001.**

● ரூ. 50/- பரிசு பெறுபவர்:

**ஆர்.ஆர்.பூபதி,**
**கன்னிவாடி அஞ்சல்,**
**திண்டுக்கல்,**
**624 705**

கப்பட்ட சம்பவம் மிருகத்தனமானது தானே?

! நீங்கள் சொல்வது சரி. ஆனால் லாலு சொல்வதுபோல் அரசியல்



• பழியைப் போடு!



• ஏமாற்ற அமைச்சர்!



• அபத்த அழைப்பு!

எதிர்ப்புணர்வு மட்டுமே இதற்குக் காரணமில்லை... அடிக்கடி நிகழும் ரயில் விபத்துகளால் மக்கள் அடைந்துள்ள கோபமும் ஏமாற்றமும் தான் மக்களைத் தூண்டியிருக்கிறது.

● மதி அசோக், ஈரோடு - 2

**? தொடரும் இரயில் விபத்துகளைத் தடுக்க வழியே இல்லையா...?**

! இருக்கிறது. பாதுகாப்பு ஏற்பாடுகளையும் பயிற்சியையும் மேம்படுத்த வேண்டும். தவறுகளுக்குத் தண்டனை மிகக் கடுமையாக்கப்பட வேண்டும். இதை எல்லோரும் சொல்வார்கள். ஆனால் இது போதாது. ரயில்வேயில் மனித உயிர்களுக்கு பொறுப் பேற்கும் முக்கிய பிரிவுகளிலேனும் திறமைக்கு மட்டுமே இடம்; மற்ற அம்சங்கள் காரணமாகச் சலுகை கிடையாது என்ற நிலை உருவாவது மிகவும் அவசியம்.

● ஆர்.கே.எப்சிபா, சென்னை-12

**? ஐம்பது வயதுக்கு மேல் எம்.ஜி.ஆர். நடித்த சண்டைக் காட்சிகள்; அதே வயதுக்கு மேல் ரஜினி நடித்த சண்டைக் காட்சிகள் - என்ன வித்தியாசம்?**

! 'அட, இவருக்கா ஐம்பது வயது?' என்று எம்.ஜி.ஆர். வியக்க வைத்தார். ஐம்பது வயதிலும் தூள் பரத்துகிறாரே என்று ரஜினி பாராட்டுப் பெறுகிறார்.

● வி.ஆர்.கிருஷ்ணன், தஞ்சை

**? ரஜினிக்கு சந்திரமுகி வளர்பிறை தானே?**

! கலெக்ஷனைப் பார்த்தால் பௌர்ணமி மாதிரி தெரியுதுங்க!

● பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

**? வருமானத்துக்குள் வாழ்க்கை நடத்தும்படி ஐ.ஏ.எஸ் அதிகாரிகளுக்குப் பிரதமர் அட்வைஸ் செய்துள்ளாரே...?**

! பிரதமருக்கும் அது பொருந்தும். வருமானத்துக்குள் நாட்டை நடத்துவதில் பொருளாதார மேதையின் திறமை அடங்கியிருக்கிறது.

● க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

**? நடப்பு ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் கோகோ கோலா நிறுவனம் 4500 கோடி ரூபாய் லாபம் சம்பாதித்துள்ளதே?**

! மதிப்பிட்டால், அதே அளவுக்கு இந்திய மக்களின் உடல் (குடல்) ஆரோக்கியம் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும்.

● ஆர்.எம்.ஈ.மலை, குடியாத்தம்

**? மென்பொருள் கருவிகளைப் பயன்படுத்தி, ஆங்கில பத்திரிகைகளைத் தமிழில் மொழிபெயர்த்துப் படிக்க முடியுமா...?**

! படிக்க முடியும். அதற்கான மென்பொருளைத் தயாரிக்கும் பணி ஏற்கெனவே தொடங்கிவிட்டது. நன்றி: தயாநிதி மாறன் அளிக்கும் ஊக்கம்.

● ஆர்.செந்தில் முருகன், பின்னலூர்

**? விஜயகாந்த் கட்சி ஆரம்பித்தால் முதல்வர் ஆக முடியுமா...?**

! கட்சி ஆரம்பித்தவர்கள் எல்லோருமே முதல்வர் ஆக முடியுமெனில் இந்நேரம் தமிழகத்தில் ஆறு கோடி கட்சிகள் தொடங்கப்பட்டிருக்கும். ○

# "கீசிடுவேன்!"

செ
ன்னையின் வடகோடியிலுள்ள முருக தனுஷ்கோடி பள்ளியிலிருந்து கொத்துக் கொத்தாக தேசிய அளவில் வாள் சண்டை (எளிய மொழியில், கத்திச் சண்டை) வீரர்கள் மலர்ந்து வருகிறார்கள். தமிழக அரசு மற்றும் ஃபென்சிங் அசோஷியேஷன் ஆதரவில் கிளம்பிய வீரர்களுக்கு மத்தியில் பத்தாவது படிக்கும் கார்த்திகா தமிழ்நாட்டுக்குக் கிடைத்த தங்கப் புதையல்.

எப்பொழுதும் 'விஷ்க்... விஷ்க்...' என்று வாளைச் சுழற்றி சீரியஸாக விளையாடும் இளம் நேஷனல் ப்ளேயருடன் ஒரு மாறுதலான உரையாடல்.

**கார்த்திகா வீட்ல சரியான வாளா? ஸாரி... வாலா?**

இரட்டை வாலு! ஸ்கூல் கேங்குல நான்தான் மையப்புள்ளி. நான் இல்லாட்டி என் க்ளாஸ் ரூம் அமைதிப் பூங்காவா இருக்கும்னா பார்த்துக்குங்களேன்.

**கத்தி முனையில் யாராவது மிரட்டினால்?**

சான்ஸே இல்லை. எங்கிட்ட வாலாட்டினா கீசிடுவேன். 'சப்'ன்னு ஒரு அறை விட்டா அவன் தீர்ந்தான்.

**கத்தியின்றி ரத்தமின்றி வாழ முடியுமா?**

கத்தி அதாவது வாளில்லாம எங்களால வாழவே முடியாது. மேட்ச் ஆட நாங்க இந்தியாவின் வடகிழக்கு பகுதிகளுக்குப் போன போது அங்குள்ள மக்கள் வெடிகுண்டு, துப்பாக்கிகளுக்கு மத்தியில் அமைதியின்றி வாழ்ந்து வருவது மிகக் கொடுமை.

**ஒரே உறையில் இரண்டு வாள் இருக்க முடியுமா?**

முடியவே முடியாது. இரண்டுமே சிக்கிக்கும். அப்படியே வேஸ்ட் ஆகி இரட்டைச் செலவு வைச்சுடும்.

**கிண்டியிலுள்ள 'கத்தி'பாரா ஜங்ஷனுக்கு ஏன் அப்படிப் பேர் வைச்சாங்க?**

ம்... ஒரு நாள் நீங்க இப்படி என்கிட்ட கேட்கணும்ல. அதான்.

**கத்தி கலாட்டா பண்ணி தியேட்டர்ல என்ஜாய் செய்த படம்?**

புஸ்... நான் படமே பார்க்க மாட்டேன். வீட்ல யாரும் டி.வி கூட பார்க்க மாட்டோம். படிப்பு, விளையாட்டு இதைத் தவிர வேறெதிலும் கவனம் சிதறாது.

**குறிவைக்கும் லட்சியம்?**

இந்த வருட காமன்வெல்த் கேம்ஸ், 2012 ஒலிம்பிக்ஸ் இரண்டிலும் தங்கம் வெல்வேன்.

**சரி, வாளை விட கூர்மையான ஆயுதம் எது?**

பெண்களின் கண்கள் (அ) நாக்கு! உங்களுக்குப் பிடிச்சதை 'டிக்'பண்ணிக் கோங்க!

**- ச.ந. கண்ணன்**

படம் : **ஸ்ரீஹரி**



# இளமை கல்கி

# லக்கலக்கலக்கலக்மே!









"ஆஹா மெல்ல நட... மெல்ல நட... மேனி... முல்லை... சின்ன இடை... வண்ண..." என்ன இனிமையான பாடல் வரிகளை உங்கள் உதடுகள் முணுமுணுக்க ஆரம்பித்து விட்டதா! இப்படித்தான் மெல்ல மெல்ல இனிமையாக நடந்து முடிந்தது சென்ற வாரம் புது டெல்லியில் 2005 லக்மே இந்தியா பேஷன் வாரம்!

சதுரமாய் வளையல்கள் கைகளில், கண்மை இடும் கண்களில் வான வில்லின் வண்ணங்கள், நீலம் படிந்த இதழ்கள், காதுகளில் டவுன் பஸ்ஸில் தொற்றிக் கொண்டு வருவதுபோல் ஏதேதோ வஸ்துக்கள், இறகு...சிறகு... விறகு... என எல்லாமே கொண்டையில், மினி மேடைகளாய் கால்களில் ஹீல்ஸ், அப்புறம் உடைகள் பற்றி தனியாக ஜொள்ள வேண்டுமா என்ன!

பார்வையாளர்கள் யாரும் கண்களைச் சிமிட்டியதாகத் தெரியவில்லை. ஆனால் கேமராக்களின் கண்கள் விடாமல் சிமிட்டிக் கொண்டே இருந்தன.

நூற்றுக்கணக்காய் சர்வதேச (பூனை நடை) மாடல்கள், 'தைய தைக்கா'ன்னு உடைகளை வடிவமைத்த பல்வேறு இந்திய டிசைனர்கள், அதனை ஆர்டர் எடுக்க வந்த வியாபாரிகள் என ஒரு வாரம் இவர்களுக்கு செம கொண்டாட்டம்தான். சென்ற வருடத்தை விட இந்த வருடம் பிஸினெஸ் ஆர்டர் டபுள் மடங்காம்!


'நடந்த'வற்றையெல்லாம் கவனித்தபோது கொசுவலை, தார்ப்பாய், சாக்குத்துணி, நைலான் கயிறு, அட்டைப்பெட்டி, காய்ந்த சருகுகள், பிளாஸ்டிக் துண்டுகள், உடைந்த பீங்கான், ரப்பர் ஷீட், சைக்கிள் செயின், அட இவையெல்லாம் உடைகளை நவீனமாக(?) உருவாக்கப் பயன்படுத்தப்படும் அத்தியாவசிய பொருட்கள் என்ற உண்மை புரிந்தது!

நமக்கும் இப்படியெல்லாம் உடையணிய ஆசைதான். என்ன எங்கத் தெருவில் நாய் தொல்லை கொஞ்சம் ஜாஸ்தி!

- முகில்

# என்ன முத்தம் இந்த நேரம்?





ஒரு மெய்யெழுத்தை முதலாகக் கொண்டு ஒரு வாக்கியத்தைத் தொடங்கினால் அது மெகா கிராமர் மிஸ்டேக். ஆனால் 'ச்'சை முதலாக வைத்து ஒரு வாக்கியத்தை மட்டுமல்ல... ஒரு வாழ்க்கையையே புதிதாகத் தொடங்கலாம் என்று ஏப்ரல் 28 அன்று பலர் நிரூபித்திருக்கிறார்கள். அதென்ன ஏப்ரல் 28 என்கிறீர்களா? அன்றுதான் உலக 'இச்' தினம். அதாவது உலக முத்த தினம்.

'இச்சுத்தா இச்சுத்தா' என்று பாடுவதால் ஏதோ 'ச்' காதலர்கள் மட்டுமே கேட்டு வாங்கிக் கொண்டாடும் ஒரு தினம் என்று நினைப்பது டூ ச், அதாவது டூ மச். 'ச்' குழந்தைகள், பெரியவர்கள் அனைவருக்கும் பொதுவானது. வயது வித்தியாசமின்றி உலக உதடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து உச்சரிக்கும் ஒரே மொழி 'ச்' தான். இதை யார் வேண்டுமானாலும் பேசலாம். யார் வேண்டுமானாலும் புரிந்து கொள்ளலாம். ஜப்பான், ஜெர்மனி, இந்தியா போன்ற ஜியாகிரபி எல்லாம் 'ச்'க்கு குச் பீ நஹி.

லண்டனில் வேலை மெனக்கெட்டு கிஸ் ஹிஸ்டரியைப் பற்றி விடிய விடிய கான்பரன்ஸ் எல்லாம் நடத்தியிருக்கிறார்கள். கேட்டால் சமூக அக்கறைதான் இதற்குக் காரணமாம். 18ஆம் நூற்றாண்டில் 'ச்' எப்படி இருந்தது, 19ம் நூற்றாண்டில் 'ச்' எப்படி இன்ச் இன்ச்சாக போஷாக்குடன் வளர்ந்தது, இப்பொழுது எந்த நிலைமையில் இருக்கிறது, எதிர்காலத்தில் அது எப்படி எப்படியெல்லாம் வளரும் என்று ஸ்டாடிஸ்டிக்ஸ், தியரம்ஸ், அல்ஜீப்ரா எல்லாம் போட்டுப் பார்த்து ஜொள்ளு விட்டபடி விவாதித்திருக்கிறார்கள். அந்த கான்பரன்ஸின் முடிவில், 'ச் ஒரு சாதாரண விஷயம் கிடையாது. அது ஒரு அரசியல், சமுதாய, கலாசார நிகழ்வு' என்கிற ரீதியில் பேயடித்த மாதிரி ஏதேதோ சொல்லியிருக்கிறார்கள்.

'ஹலோ', 'ஐ லவ் யூ', 'ஸாரிமா, தெரியாம பண்ணிட்டேன்', 'ஓ.கே அப்ப நான் போய்ட்டு வரட்டுமா?', 'என்னை மறந்துட மாட்டேதானே?'... இப்படியாக 'ச்' அழுத்தமாகச் சொல்லும் சங்கதிகள் எக்கச்சக்கம்...

'ச்'கள் பலவிதம். ஒவ்வொன்றும் ஒரு விதம். உதாரணத்துக்கு, எஸ்கிமோக்கள் இண்டு மூக்குகளை ஒன்றாகத் தேய்த்து 'ச்'சிட்டுக் கொள்வார்கள். ஓஹோ, அப்படியென்றால் ஐஸிலேயே பிறந்து வளர்ந்த எஸ்கிமோக்களுக்கு இதுவரை ஜலதோஷம் பிடிக்காததற்கு இதுதான் காரணமா?


- 'ச்'சான்


# ஹாட்ரிக் புன்னகை!

பெர்னான்டோ அலோன்ஸோ... - உலக ஃபார்முலா-1 ரசிகர்களிடம் மையம் கொண்டிருக்கும் இருபத்து மூன்று வயது இளம் புயல். ஸ்பெயினின் ரெனால்டு அணிக்காக விளையாடி வரும் இவர், சமீபத்தில் இத்தாலியில் நடைபெற்ற சான் மரினோ F1 போட்டியில் கார்ப் பந்தய ஜாம்பவான் மைக்கேல் ஷூமேக்கரை 'ப்பூ' என ஊதித் தள்ளி விட்டு கோப்பையைக் கைப்பற்றியிருக்கிறார். மலேசியா, பஹ்ரைனில் நடைபெற்ற போட்டிகளில் தொடர்ச்சியாக வென்றிருந்ததால், இந்த வெற்றி அலோன்ஸோவுக்கு இது ஹாட்ரிக் வெற்றி.

"ஏழுமுறை சாம்பியன் பட்டம் வென்ற ஷூமேக்கரை வென்றது எப்படி சாத்தியமானது?" என்று கேட்டால், அடக்க முடியாத ஆனந்தத்துடன் ஆண்டவனை நோக்கிக் கைகாட்டுகிறார். "ஃபார்முலா-1 போட்டிகளிலேயே இந்த சான் மரினோ போட்டி, வேகத்துக்கு முக்கியத்துவம் தரக்கூடியது. எனவே இதில் கோப்பையை கைப்பற்ற வேண்டும். அதுவும் ஷூமேக்கர் விளையாடிக் கொண்டிருக்கும்போதே வெல்ல வேண்டும் என்பது எனது கனவு... அது இன்று நிறைவேறி விட்டது. அதுவும் அந்தக் கடைசி 0.2 நொடிகளுக்காகத்தான் இவ்வளவு போராடினோமோ என்பதை நினைக்கும்போது என் சந்தோஷம் மிகுதியாகி விட்டது" என்று பூரிக்கும் அலோன்ஸோவை அவருடைய ரெனால்டு அணி அடுத்த வருடத்துக்கும் சேர்த்து ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. "எனக்கு பொறுப்பு அதிகரித்துள்ளது. எனது உடல் நலன், ஆட்ட நுணுக்கங்கள் இரண்டிலும் கூடுதல் கவனத்தையும், புதிய யுக்தியையும் கையாள வேண்டியிருக்கும்'' என்று சொல்லும் அலோன்ஸோ, அடுத்து பார்சிலோனாவில் மீண்டும் ஷூமேக்கரை எதிர்கொள்ள விருக்கிறார். இது அலோன்ஸோவின் சொந்த மண் என்பது குறிப்பிடத்தக்கது.

• அலோன்ஸோ






என்ன ஷூமேக்கர்... அலோன்ஸோவுக்கு கவுன்ட்டர் கொடுக்க கைவசம் ஏதும் ஃபார்முலா இருக்குதா...?

- கலை

# குறையொன்றுமில்லை

26

*ஸ்மர நித்யம் அநித்யதாம்*
*அநித்யதாம் நித்யம் ஸ்மர*

இந்த வாழ்க்கை அநித்யமானது என்பதை நாம் தினமும் நினைக்க - (ஸ்மரிக்க) வேண்டும்.

இது நிலைத்து நிற்காது என்பதை நித்தியம் நினைக்க வேண்டும். ஸாது ஸமாகமத்தைக் கோர வேண்டும். புண்யத்தை அஹோராத்ரம் பண்ண வேண்டும்:

*கஜ துர்ஜர ஸம்வர்கம்*
*பஜ ஸாது ஸமாகமம்*
*குரு புண்யம்*
*அஹோராத்ரம்*
*ஸ்மர நித்யம் அநித்யதாம்.*

இது நிலைத்து நிற்காது என்பதை நித்யம் நினைக்க வேண்டும். புண்ணியத்தை அஹோராத்திரம் பண்ண வேண்டும். தலையிலே இருக்கிற கேசத்தைப் பற்றி நம்மை இதோ இப்போதே யமன் இழுத்துக் கொண்டு போவதாக எண்ணி நாம் புண்ணியத்தைப் பண்ண வேண்டும். வித்யையை - கல்வியைக் கற்கிறபோதோ... நல்ல காரியத்துக்காக பொருளை ஈட்டுகிறபோதோ, 'நாம் சிரஞ்சீவியாக பல காலம் இந்த உலகத்திலே இருப்போம்' என்ற எண்ணம் நமக்கு இருக்க வேண்டும். தர்மத்தை அனுஷ்டானம் பண்ணுகிறபோது, புண்ணிய கர்மாக்கள் பண்ணுகிறபோது, அடுத்த க்ஷணமே நாம் இருக்க மாட்டோம் என்று நினைத்து அத்தனை தீவிரமாய்ப் பண்ண வேண்டும்.

இந்த மாதிரி நிர்வேதப்பட்டு, ஆழ்வார் பாடியிருக்கிறார்:

*ஊரிலேன் காணி இல்லை உறவு*
*மற்றொருவர் இல்லை*
*பாரில்நின் பாதமூலம் பற்றிலேன்*
*பரம மூர்த்தி.*
*காரொளி வண்ணனே கண்ணனே*
*கதறுகின்றேன்*
*ஆருளர் களைகண் அம்மா! அரங்க*
*மாநகருளானே....*

- தொண்டரடிப்பொடி ஆழ்வார் கதறி அழுகிறார் பாருங்கள்.. வாக்கிலே நல்ல வாக்கு இல்லை. மனத்திலே தூய்மை இல்லை. எனக்கென்று எதுவுமில்லை... என்று கதறி அழுகிறார் - இது மொத்தமும் நிர்வேதம்.

இப்படி நமது அபராதங்களை எண்ணி எண்ணி நிர்வேதப்பட வேண்டும்.

நிர்வேதம் என்கிற இரண்டாவது படிக்கட்டு ஏறிய உடனேயே மூன்றாவது படிக்கட்டு - விரக்தி - வைராக்கியம்.

வைராக்கியம் என்றால், வைராக்கியத்தின் உண்மையான நிலை என்ன... எல்லாவற்றையும் விடுவது வைராக்கியம் இல்லை. எல்லாவற்றையும் விடவேண்டும்; விட்ட ஸ்தானத்திலே எம்பெருமான் திருவடியைப் பற்ற வேண்டும்.

பரதன் என்ன பண்ணினான் பாருங்கள்... அத்தனை ஐச்வர்யத்தையும் நீத்தான்.

'ஆயிரம் ராமன் நின்கேள் ஆவரோ அம்மா!' என்று கம்பராமாயணத்திலே அழகான பாசுரத்திலே கேட்கிறார் கம்பர்.

பரதன் அந்த ஊரை விட்டான். அயோத்தியை விட்டு, அத்தனை ஐச்வர்

**முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்**



யத்தையும் திருணமாக மதித்து, சர்வத்தையும் விட்டுவிட்டு, அங்கேயே உட்கார்ந்திருக்கவில்லை அவன்... ராமன் இருக்கும் இடத்துக்கு வந்தான். பகவானைத் தேடி வந்தான்.

ஆகையினாலே, எல்லாவற்றையும் விட வேண்டும்... எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவனிருக்கிற இடத்தை வந்தடைய வேண்டும். அதுதான் வைராக்கியம்.

ஒருத்தர் எல்லாவற்றையும் விட்டுவிட்டேன் என்றார்... 'என்ன பண்ணுகிறீர்?' என்று கேட்டால், 'வாசல் திண்ணையிலே உட்கார்ந்திருக்கிறேன்...' என்கிறார் அவர்! கோயிலுக்குக் கூட போவதில்லை. எல்லாவற்றையும் விட்டுவிட்டு திண்ணையிலேயே உட்கார்ந்திருப்பதில் என்ன லாபம்! பகவத் சரணாரவிந்தத்தை ஆச்ரயிக்க வேண்டாமா...? விட்ட இடத்திலே பகவத் சரணாரவிந்தத்தைப் பற்ற வேண்டும். அதுதான் பூரண வைராக்கியம். வைராக்கியம் என்பது பூரணமாக அமைய வேண்டும். இல்லாவிட்டால் பயனில்லை. இந்த உலகத்தில் இருந்து கொண்டே இதன் மீது பற்றில்லாமல் இருக்க வேண்டும். இதைத்தான் 'பத்ம பத்ர விவாந்ததா' என்று பகவான் கீதையிலே சொல்கிறான். தாமரை இலையிலே தெளிக்கப்பட்ட ஜலமானது எப்படி ஒட்டிக்கொள்ளாமல் இருக்கிறதோ, அந்த மாதிரி நீ பற்றில்லாமல் இருக்க வேண்டும்.

இந்த உலகத்தில் வாழலாம் என்றால் வாழலாம்! இல்லையென்றால் இந்த மந்திரங்களுக்கெல்லாம் என்ன அர்த்தம்! 'நூறு வயது வாழ வேண்டும்' என்று வாழ்த்தும் மந்திர உச்சாரணங்களுக்கெல்லாம் அர்த்தம் இல்லாமல் போய்விடுமே...! நூறு வயது வாழ வேண்டும்... யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை. 'இரு! நன்றாக இரு...' ஆனால், இதிலே இருக்கிற உலகியல் வஸ்துக்களிலெல்லாம் அதிக நாட்டம் கொள்ளாதே.

நம் அப்பா ரக்ஷகன் அல்ல என்பதை ஹிரண்ய கசிபுவைப் பார்த்துத் தெரிந்து கொள். அம்மா ரக்ஷகி ஆகமாட்டாள் என்பதை அந்த கைகேயியைப் பார்த்துத் தெரிந்து கொள். உடன் பிறந்தவன் ரக்ஷகன் ஆக மாட்டான் என்பதை ராவணனைப் பார்த்துத் தெரிந்து கொள்... உற்றார் உறவினர்கள் யாரும் நமக்கு ரக்ஷகர்கள் ஆகமாட்டார்கள் என்பதை,

> ''நீங்க சொன்ன கதைல நிறைய பாட்டு வருதே?''
> ''காதுல எப்.எம். மாட்டிக்கிட்டு நீங்க கதை கேட்கறீங்க மேடம்!''
> - அம்பை தேவா

கஜேந்திர மோக்ஷத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்.

மாதாச, பிதாச, பந்துஸ்ச மம ராகவ
துவமேவ மாதா பிதா துவமேவ
பந்துஸ்ச
குருஸ் துவமேவ துவமேவ வித்யா
பிரவிணம் துவமேவ, துவமேவ
ஸர்வம்
மம தேவ தேவ...

- இதையெல்லாம் - உலகியல் விஷயங்களையெல்லாம் பார்த்து நாம் அகங்கார மமகாரம் கொள்கிறோம். சரீரத்திலே பலம் இருக்கிறபோது, அகங்காரம் அதிகமாயிருக்கிறது. தன்னைச் சேர்ந்தவர்களுடைய பலம் இருக்கிறபோது மமகாரம்! இவை இரண்டும் ஒழிந்தால்தான் வைராக்கியம் வந்தது என்று சொல்லலாம். இவை இரண்டும் இருக்கிற வரையில் அவன் தென்படமாட்டான். அகங்காரத்தையும் மமகாரத்தையும் அறவே அழிக்க வேண்டும். எல்லாம் இருந்தாலும், அவற்றில் பற்றில்லாமல் இருக்க வேண்டும்.

கடலிலே - சமுத்திரத்திலே - கப்பல் போகிறது. அந்த மாதிரி, சம்ஸார ஜலதியிலே நாமும் ஓடம் மாதிரி போய்க் கொண்டிருக்கிறோம். கப்பல் சமுத்திரத்திலே போகலாமா என்றால் போகலாம். போக வேண்டும் என்பது நியதி. கப்பல் போனால்தானே வாணிபம் நடக்கும். மக்கள் ஓர் இடத்திலேயிருந்து இன்னொரு இடத்துக்குப் போவார்கள். ஆனால் கப்பல் ஜலத்திலே போகலாமேயொழிய, ஜலம் கப்பலுக்குள் வரலாமா...?

அந்த மாதிரி, நாமும் இந்த உலகில் வாழலாம். ஆனால் உலகியல் நாட்டம் நம்முள் நுழையவிடலாமா என்றால்... அப்படி நுழைய விட்டால், அந்தக் கப்பலுக்கு என்ன ஏற்படுமோ அதுதான் நமக்கும் ஏற்படும்! இதிலேயே மூழ்கித் தத்தளிக்க வேண்டியதுதான்! கரை சேர முடியாமல் அல்லலுறுவோம்.

ஸ்ரீஜயந்தி வந்தது... எல்லார் கிரு



ஹத்திலும் பகவானுக்கு நிவேதனம் பண்ணுவதற்காக உப்புச் சீடை நிறைய பண்ணிக் கொண்டிருந்தார்கள்... அப் போது வந்து ஒருத்தர் சொன்னார்: "எனக் குச் சீடையே பிடிக்காது!"

"பகவானுக்கே உகந்தது சீடை... உங் களுக்குப் பிடிக்காதா...?"

அதற்குப் பதில் சொல்கிறார் அவர்:

"பற்களே இல்லையே. நான் என்ன பண்ணுவேன்? எப்படிச் சீடை சாப்பிடு வேன்! பற்கள் இருந்த நாளில் நன்றாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்... இப் போது இல்லை... அதை அனுபவிக்க முடியவில்லை... அதனாலே சீடையைக் கண்டாலே வெறுப்பு!" என்றார்.

அனுபவிக்க முடியாமல் போகிறபோது ஏற்படுகிற வெறுப்பு என்பது வெறுப்பு அல்லது விரக்தி ஆகாது... அது வைராக்கி யம் ஆகாது. எல்லாமே நன்றாக இருக்கிற போது அதையெல்லாம் விடுவது தான் வைராக்கியம்.

இந்த வைராக்கியம்தான் மூன்றாவது படிக்கட்டு. விவேகம் வந்தவாறே நிர்வே தம் என்ற இரண்டாவது படிக்கட்டு... நிர்வேதம் வந்தவாறே வைராக்கியம் என்கிற மூன்றாவது உயர்ந்த படிக்கட்டு.

**வை**ராக்கியம் வந்தவாறே நான் காவது படிக்கட்டு. உயர்ந்ததாக இருக்கும் படியான பீதி. பயம் - பீதய:. வைராக்கியம் வந்த வாறே பயம் வருகிறது... என்ன பயம்? 'இத் தனை நாளாக, தான் பல அக்கிர மங்களை யெல்லாம் பண்ணியாயிற்று. இன்றைய தினம் மட்டும் பாகவதன் மாதிரி வேஷம் போட்டுக்கொண்டு வருகிறான் பார்...' என்று பகவான் நம்மை ஒதுக்கிவிடுவானோ...? தூர தள்ளிவிடு வானோ என்ற பயம்.

சாண்டில்ய ஸ்ம்ருதி என்கிற ஸ்ம்ருதி யிலே இது அழகாகச் சொல்லப்படுகிறது.

"செய்த உதவியை மறந்து கிருதக்ஞ னாக ஒருவன் இருக்கிறான். அவ்வாறு நன்றி கொன்றவனுக்குப் பிராயச்சித்தமே இல்லை" என்கிறது சாஸ்திரம்.

ஆகார நியமம் ரொம்ப முக்கியம். இப்படி கிருதக்ஞன், சர்வாசி, நாத்திக வாதம் பண்ணுகிறவன்... இப்படியெல்லாம் பல அக்கிரமங்களாகப் பண்ணினவாக இருந்தாலும், ஒரு நாள் தன் தவறை உணர்ந்து, 'அப்பனே! நீ காப்பாற்ற வேண்டும்' என்று அவன் திருவடியை அடைந்துவிட்டால், இத்தனை நாள் பண்ணிய தப்பையெல்லாம் பகவான் பார்ப்பதில்லை.

கீதையிலே பரமாத்மா அவனே சொல்லியிருக்கிறான். அந்த சுலோகம் ஆரம்பமே அழகு:

"இருக்கட்டுமே! இருந்தால் இருக்கட் டுமே! மிகவும் கெட்ட நடத்தை உடையவ னாக இருந்தால் இருக்கட்டுமே... அது ஒன்றும் என்னை அடைவதற்குத் தடை யாக இராது. அவன் வந்து அடிபணிந்து விட்டானானால் நான் அனுக்கிரஹிக் கிறேன்" என்கிறான்.

சமுத்திரத்திலே ஸ்நானம் பண்ணு வதற்கு ஒருத்தர் உட்கார்ந்திருக்கிறார். அலை ஓய்வதற்குக் காத்திருந்தால் முடியுமா...? எப்போது ஓய்ந்து, எப்போது ஸ்நானம் பண்ணுவது! அந்த மாதிரி பாபம் மொத்தத்தையும் க்ஷாமணம் பண்ணி விட்டு அடியோடு பாபமே இல்லாமல் பக வானிடம் போக வேண்டுமென்றால் முடியுமா!

நெல்லைப் பயிரிட்டால் புல் அழிந்து போகிற மாதிரி பகவானை அடைய நம் வினை ஓடிவரும்.

'குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான, பரன்
சென்று சேர் திருவேங்கட மா மலை
ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே.'

ஆகையினால், அவனைத்தேடிப் போவதுதான் நம் கர்த்தவ்யம். வினை யைப் பார்த்து பயப்படாதே... அவன் அடி பணிந்தால் வினை தானாக மடியும்; அழிந்து போகும்.

(வளரும்)



காதல் சிறகுகள் 4

# காதலித்தேன்... காதலிக்கிறேன்... காதலிப்பேன்!

காதலுக்கும் வயசானவனுக்கும் என்ன சம்பந்தம்? என் புகைப்படத்தைப் பார்த்து இந்தக் கேள்வியால உங்க மூக்கு நுனி வேர்த்திருக்கும். இளசுங்களுக்கு மட்டும்தானா காதல்? அது ஒரு சர்வதேச, சர்வ வயது உணர்ச்சியில்லையா? 'கேளடி கண்மணி'ன்னு ஒரு படம்... நம்ம வசந்த் டைரக்டர் பண்ணினாரு... எஸ்.பி.பாலசுப்ரமணியமும் ராதிகாவும் தான் காதலர்கள். இளமையில காதலிப்பாங்க. சூழ்நிலையால சேர முடியாது. வயசானப்புறம் சொந்த மகளாலயே சேர்த்து வைக்கப்படுவாங்க. இளமைதான் தீர்ந்து போச்சே... இனி எதுக்கு சேரணும்னு இருந்தாங்களா அவங்க... ஆயுசுக்கும் உணர்வுகளையும் உள்ளத்தையும் பரிமாறிக்க ஒரு தோழமை தேவைப்படுதில்லையா... அதுதான் காதல்!

அப்ப எனக்கு சின்ன வயசு. ஸ்கூல்

## 'நல்லி' குப்புசாமி

லீவுக்கு ஹைதராபாத் போயிருந்தேன். நான் தங்கியிருந்த வீட்டுக்குப் பக்கத்துலதான் எனக்கு அவ அறிமுகமானா. குட்டி தேவதை மாதிரி இருப்பா. அவளை நான் விரும்பினேனா... தெரியாது... அந்த உணர்வுக்குப் பேரென்ன... புரியாது... எந்நேரமும் அவளை பார்த்துட்டே இருக்கணும், விளையாடிட்டே இருக்கணும்னு தோணும்... எத்தனை வேகமா தோழர்களானோமோ, அதைவிட வேகமாக காலம் எங்களை பிரிச்சுடுச்சு.

ஐம்பது வருஷம் கழிச்சு, அவ வாழ்ந்த ஊருக்குப் போனப்போ... முதல்ல நினைவுக்கு வந்தது அவ முகம்தான். பளிங்கு மாதிரி எனக்குள்ள பதிஞ்சு போனவளை மீட்டெடுக்கப் புறப்பட்டேன். மிகுந்த சிரமத்துக்கப்புறம் அவ வீட்டை கண்டுபிடிச்சு காலிங்பெல் அடிச்



சேன். மனசுக்குள்ள 'இந்த நண்பனை ஞாபகமிருக்குமா?'ன்னு ஏகப்பட்ட கேள்வி, குழப்பம்.

கதவு திறந்தது. அந்த வீட்டு வேலைக்காரிதான் திறந்தா. தோழியோட பேரச் சொல்லி, "அவங்க இருக்காங்களா?''ன்னு கேட்டேன்.

''நீங்க யாரு''ன்னா. சொன்னேன். முழுசும் கேட்டுட்டு ''நான்தான் உங்க பால்யகால தோழி''ன்னா. எனக்கு பகீர்னு ஆயிடுச்சு. அடையாளங்கள் அழிஞ்சு போனதுக்காக அந்நியப்பட்டு போகுமா நட்பு? அன்னிக்கு ரொம்ப சந்தோஷமா வீடு திரும்பினேன்.

சரி, நட்புதான் காதல்னா, அப்ப காதலிக்கிறவங்கள்லாம் முட்டாளான்னு கேக்கலாம் நீங்க... நான் அப்படிச் சொல்லல. காதல்ங்கற பரிமாணத்தை என் நட்பெல்லாம் தொடாததுதான் காரணம்னு நினைக்கிறேன். இன்னொரு விஷயம்... எனக்கேற்பட்டாத்தானா காதல்?

ஜவுளித்துறைலதான் அந்த நண்பர் எனக்கு அறிமுகமானாரு. வடநாட்டுக்காரரு. எப்போ இங்க வந்தாலும் போகும்போது சின்னச் சின்ன பரிசுப் பொருட்கள் வாங்கிட்டுப் போவாரு. ஒரு நாள் 'என்னைய்யா அது... காட்டேன்'னு கேட்டுட்டேன். ஒரு நிமிஷம் தயங்கினவரு, என் மேலுள்ள மரியாதை காரணமா காண்பிச்சாரு. பார்த்தா ரிப்பன், க்ளிப், ஹேர்பின்... இப்படி நிறைய காஸ்மெடிக் அயிட்டம்ஸ்.



"காதலில் வெற்றி தோல்வி கிடையாது!"

"ஏய்யா... உன் ஊர்ல கெடைக்காததா, இங்கருந்து வாங்கிட்டுப் போற?"

"இங்க விடவும் நிறையவே இருக்குங்க... ஆனா தமிழ்நாட்டுக்கு வந்துட்டுத் திரும்பும்போது பிரியமானவங்களுக்கு 'உனக்காக மெட்ராஸ்லருந்து வாங்கி வந்தேன்'னு கொடுக்கற மாதிரி வருமா?"

''அது யாருய்யா அப்படி பிரியமானவங்க... சம்சாரமா?"

"இல்லைங்க..."

"மகளா?..."

"இல்லைங்க..."

''ரெண்டு பேருமே இல்லைன்னா... வேற யாருக்குய்யா... உன் காதலிக்கா?"

''ஆமாங்க'' என்று என்னை அதிர வைத்தார் நண்பர். காரணம், ஏற்கெனவே அவருக்குத் திருமணமாகிவிட்டதுதான். என் பார்வையை உணர்ந்தவர்,

"அப்படிப் பார்க்காதிங்க... அவ என் அத்தைப் பொண்ணு. சின்ன வயசுல



"உங்க உடம்பிலே ஒரு கோளாறும் இல்லே. எதுக்காக எங்கிட்டே ட்ரீட்மெண்ட் டுக்கு வந்தீங்க?"

"எல்லாம் ஒரு ஆர்வக் கோளாறுதான் டாக்டர்!"

*- சீர்காழி சாமு*

ருந்தே ஒருத்தர் மேல ஒருத்தர் ரொம்பப் பிரியம். 'நம்ம அத்தைப் பொண்ணுதானே'ன்னு நானும்... 'நம்ம மாமன் மகன் தானே... எங்க போயிடப் போறார்'னு அவளும், பரஸ்பரம் வெளிப்படுத்திக்காமயே காதல வளர்த்தோம். ஆனா, எங்க நேசம் புரியாம சின்ன வயசுலயே எங்கம்மா வேறொரு காரியம் செஞ்சுட்டாங்க. இன்னொரு சொந்தக்காரங்ககிட்ட, அவங்க கர்ப்பமா இருக்கும்போது - உனக்கு பொண்ணு பொறந்தா அது என் பையனுக்குத்தான்'னு வாக்கு கொடுத்திட்டிருக்காங்க. இது தெரியாம ஒரு நாள் எங்க காதல் பூத்துடுச்சு. விஷயம் எங்கம்மாவுக்குத் தெரிஞ்சு 'எனக்கு வாக்குதான் முக்கியம்'னு சொல்லிட்டாங்க. என்னால அம்மா பேச்சை தட்ட முடியல. அவங்க காட்டின பொண்ணையே நான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். ஆனா, நான் நேசிச்சவ யாரையுமே கல்யாணம் பண்ணிக்கல. 'உன்னைத்தான் காதலிச்சேன்... காதலிக்கிறேன்... காதலிப்பேன்...'னு தன்னோட வாழ்க்கையை வாழ்ந்துட்டிருக்கா. அதுக்காக அவ என்னை உரிமை கொண்டாடறதுமில்ல. எட்ட நின்னு நான் வாழறதை ரசிக்கறா. எப்பவாவது இது மாதிரி பரிசுப் பொருள் ஏதாவது நான் வாங்கித் தந்தா, என் மனசு நோகக் கூடாதுன்னு வாங்கிக்குவா" என்றார்.

நான் அவருக்கு ஒரு புடைவையைப் பரிசாகக் கொடுத்து அனுப்பினேன்.

இங்க காதல் தோத்துடுச்சுன்னு யாராவது சொல்ல முடியுமா?

**தூரங்கள் அல்ல**
**நம்மைப் பிரிப்பது**
**துயரங்கள்**
**நினைவுகள் அல்ல**
**நம்மை எரிப்பது**
**எண்ணங்கள்**-னுதான் அந்தக் காதலர்களா பாவிச்சு என்னால சொல்ல முடியுது.

காதல்ல வெற்றி, தோல்விங்கறதே கிடையாது. நாமதான் சந்தர்ப்பங்களுக்காகவும் சூழ்நிலைக்காகவும் சமரசம் பண்ணிக்கிட்டு காதலைக் காய விடறோம். அது எப்பவும் குளிர்ச்சியான நிலவாத்தான் காட்சியளிக்குது. அவங்கவங்க நம்பிக்கைக்கு ஏத்த மாதிரி பௌர்ணமியாவும், அமாவாசையாவும் தென்படுது.

இன்னைக்கு எந்த திசை திரும்பினாலும் காதல்தான். பேசிக்கிட்டும், சிரிச்சுக்கிட்டும், நடந்துக்கிட்டும், ஓடிக்கிட்டும்... வெயிலுக்குக் குடை பிடிச்சுக்கிட்டும்– எல்லாம் பார்க்கும்போது காதல் காயம்பட்டுப் போகுமோன்னு கவலை அதிகமாகுது... இந்தக் காதல்கள் போகும் பாதை சரியானதுதானாங்கற கேள்வி எழுது. ஏன் இப்படி காதல் மலினப்பட்டுப் போச்சுங்கிற எண்ணம் மனசை அரிச்செடுக்குது... காதல் தனிமை தேடுகிற விஷயமா எனக்குப் படல. பெற்றோரை ஏமாத்திட்டு எந்தக் காதலும் செழிச்சுடாது. அதே நேரத்துல உண்மையான நேசிப்பை சமூகம் ஏத்துக்கலைன்னா, தலைகுனிய வேண்டியது சமூகம் தானே தவிர காதலர்கள் இல்லை! இதை மட்டும் மனசுல வச்சுக்கிட்டு காதலிச்சுப் பாருங்க, காதல் தேவதையோட அருள்பார்வை என்னைக்கும் உண்டு.

சந்திப்பு : **மு.மாறன்**
படங்கள் : **ஸ்ரீஹரி**

**ச**மீபத்தில் மறைந்த ராமகிருஷ்ண மடத்தின் .தலைவர் சுவாமி ரங்கநாதானந்தா பற்றி நினைவு கூர்கிறார், சுவாமி விமூர்த் தானந்தர்.

காந்தி அமைதி விருது, தனிப்பட்ட மனிதர் ஒருவருக்கு, காந்தியத் தத்துவம், இந்தியச் சிந்தனைகள், இந்திய நாகரிகம், இந்திய ஆன்மிகம் இவற்றைப் பரப்பும் அடிப்படையில் வழங்கப்படுவது. ஒரு கோடி ரூபாய் ரொக்கப் பரிசும் உண்டு. 1998 ஆம் ஆண்டு கே.ஆர். நாராயணன் குடியரசுத் தலைவராக இருந்தபோது, சுவாமி ரங்கநாதானந்தாவுக்கு வழங்கப்பட இருப்பதாக அவருக்குத் தெரிவித்தார்கள்.

# விருதுகளை மறுத்தவர்



"நான் ராமகிருஷ்ண மடத்துக்காக உழைத்துவரும் துறவி. தனிப்பட்ட ரங்கநாதானந்தாவுக்கு விருது என்றால் ஏற்க இயலாது. ராமகிருஷ்ண மடத்துக்குக் கொடுப்பதாக இருந்தால் மட்டுமே நான் ஏற்க முடியும்!" என்று மறுத்துவிட்டார் சுவாமிஜி. ஒரு தியாகசீலரால் மட்டுமே இப்படிச் சொல்ல முடியும். அவருக்காகவே அந்த ஆண்டு விதிமுறைகளை மாற்றி, காந்தி அமைதி விருதை அவருக்கு அளித்தார்கள்.

60களில் அவருக்கு 'பத்மபூஷன்' விருது கொடுப்பதாக அறிவித்தபோதும், அதைப் பெற்றுக் கொள்ள மறுத்தவர் சுவாமிஜி.

டாக்டர் ராதாகிருஷ்ணன் பாரத குடியரசுத் தலைவராக இருந்தபோது, "உயர்ந்த தத்துவங்கள், சிறந்த விஷயங்கள் குறித்து மனம் விட்டுப் பேச எனக்கு ஒரு நண்பர் இல்லையே என்று உணர்கிறேன். அப்படி ஒரு சத்சங்கம் கிடைத்தால் பல உயர்வான இந்தியத் தத்துவங்கள் குறித்து விரிவாகப் பேசலாம்" என்று அவரிடம் சொன்னார் டாக்டர் கரன்சிங்.


"இங்கே டில்லியிலேயே ராமகிருஷ்ண மடத்தில் ஓர் இளம் துறவி இருக்கிறார். அவர்தான் சுவாமி ரங்கநாதானந்தா", என்று தத்துவமேதை ராதாகிருஷ்ணன் அவரிடம் தெரிவித்தாராம். டாக்டர் கரன்சிங் அதற்குப் பிறகு சுவாமிஜியின் நெருங்கிய நண்பராகிவிட்டார்.

**ஹை**தராபாதில் சுவாமிஜி இருந்தபோது ஒரு விருந்தாளி ராமகிருஷ்ண மடத்துக்கு விஜயம் செய்தார். அவரை அழைத்துப் போய், "இவர் சமையல் கட்டை நிர்வகிப்பவர், இவர் சமையல்காரர், இவர் டிரைவர்..." என்று ஒவ்வொருவரையும் அறிமுகம் செய்தார். காரில் பயணம் செய்யும் போது, "டிரைவர் பார்த்தசாரதியும் மனிதர் தான். அவருக்கும் என்னைப் போலவே உணவும், ஓய்வும் தேவை. அவரையும் கவனியுங்கள்!" என்பார். அப்படி ஒரு மனிதாபிமானம்!

"நாக்கு என்பது சரசுவதியின் இருப்பிடம். அதிலிருந்து நல்ல விஷயம் மட்டுமே வெளிப்பட வேண்டும்!" என்று 12 வயது சங்கரனாக இருந்தபோது, தன் தாயார் சொன்ன அறிவுரையை கடைசி மூச்சு வரை கடைப்பிடித்தவர் சுவாமி ரங்கநாதானந்தா.

- சாருகேசி

# நயமான நற்பண்பு!




**நன்மை** : கல்கியை வாசிக்கும் ஒவ்வொரு வாசகரும் நன்மை அடைய வேண்டும் என்கிற கடமையுணர்வு...

**நயம்** : கவிதை, கட்டுரை புகைப்படம், ஓவியங்களில்கூட விரசம் தலை தூக்காமல் நம் கலாசாரத்தைப் பாதுகாக்கும் நயம்.

**நற்பண்பு** : விற்பனைக்காக, பரபரப்புச் செய்திகள் என்ற பெயரில் இளைய தலைமுறையைச் சீரழியச் செய்யும் செய்திகளை வெளியிடாமல் இருக்கும் நற்பண்பு.

- ஓவியர் **அரஸ்**

படம் : ஸ்ரீஹரி


அட்சய திருதியை
நன்நாளில்
பொன்னென மின்னும்
சாரதாஸ்
பட்டுச் சேலைகள் !
சாரதாஸ்
சுபமுகூர்த்த பட்டுப்புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
தன்பில்டிங்,
827, மவுண்ட் ரோடு,
சென்னை - 2.
போன் - 28521177
45, என்.எஸ்.பி. ரோடு,
திருச்சி - 2.
போன் - 2702077

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Register
No. TN / PMG (CCR) 572 / 03 - 05* Licensed to post without prepayment under PM
Licence No. WPP 358 / 03 - 05* Registered as a Newspaper in Srilanka




தி சென்னை சில்க்ஸ்™
தமிழகத்தின் மாபெரும் ஜவுளி சாம்ராஜ்யம்

23, உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை - 17. ✆: 24310888
558-560, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர் - 1. ✆: 2391555
74, புது மார்க்கெட் வீதி, திருப்பூர் - 4. ✆: 2242888, 5338888
85-A, R.K.V. ரோடு, ஈரோடு - 1. ✆: 2213270
10, W.B. ரோடு, திருச்சி-2. ✆:2708888
Shop online at www.thechennaisilks.com

ISO 9001:2000